Undergraduate Course

# STUDY MATERIAL : 3

# வெங்கலராஜன் கதை

# VENKALARAJAN KATHAI

பொருளடக்கம்


பாடம்—1 : வெங்கலராஜன் கதையின் தோற்றமும் நூலின் அமைப்பும்

பாடம்—2 : வெங்கலராஜன் கதையில் நாட்டுப்புற மரபுகள்

பாடம்—3 : வெங்கலராஜன் கதையின் பாத்திரப் படைப்புகள்

பாடம்—4 : வெங்கலராஜன் கதையின் துன்பியல் முடிவு

பாடம்—5 : வெங்கலராஜன் கதை - ஒரு மதிப்பீடு



SCHOOL OF OPEN LEARNING
UNIVERSITY OF DELHI
5, Cavalry Lane, Delhi-110007

Session 2006–07 / 500 Copies

© School of Open Learning

Published By : Executive Director, School of Open Learning, 5 Cavelry Lane, Delhi-110007
Printed by : Navprabhat Printing Press, 275, F.I.E., Patparganj, Delhi-110092

பாடம்-1

# வெங்கலராஜன் கதை: தோற்றமும் நூலின் அமைப்பும்

## முன்னுரை:

வெங்கலராஜன் கதை நாடார்களின் குலப் பெருமை கூற எழுந்த நாட்டுப்புற இலக்கியம் ஆகும். இந் நூலில் நாடார்களின் குலப் பழக்க வழக்கங்கள், அதிகமாகச் சுட்டப்பட வில்லை என்பது இங்குக் குறிப்பிடத்தக்கது. எனினும், சாதி இலக்கிய வரிசைகளுள் ஒன்றாக வெங்கலராஜன் கதை என்னும் இக் கதைப் பாடல் அமைகின்றது.

## சாதிகளின் தோற்றம்:

பொருளாதார நிலையில் மனித சமுதாயம் வளர்ச்சியடையத் தொடங்கியது. அப்போது தனி மனித உடைமைகள் பெருகின; தொழிலை அடிப்படையாகக் கொண்ட பிரிவுகள் தோன்றத் தொடங்கின. இப்பிரிவுகள் காலப் போக்கில் சாதிகளாகப் பரிணமித்தன.

## சாதிகளின் புகழ்பாடும் சூழல்கள்:

சாதிப் பிரிவுகள் அதிகரித்தன. அப்பிரிவுகளுக்கிடையே ஏற்படும் முரண்பாடுகளும் பகைமையுணர்வும், கூர்மை அடைந்தன. அதனால் இச்சாதிகளின் உயர்வினைப் பேசும் இலக்கியங்கள் பல தோன்றலாயின.

## சாதிகளில் உயர்வு தாழ்வு கற்பிக்கப்பட்டமை:

ஒவ்வொரு சாதியினரும் அவர்கள் செய்யும் தொழிலை மையமாகக் கொண்டு தொடக்க நிலையில் பகுக்கப்பட்டன. தெய்வத்திற்குத் தொண்டு செய்த சாதியினர் தங்களைத் தெய்வ நிலையில் உயர்வாக வைத்துப் பார்க்க முயன்றனர். நாட்டை ஆளும் அரசர்களுக்கும் அவர்கள் குருவாக விளங்கித் தங்களது மேலாண்மைமையையும், முதன்மை நிலையையும் பறைசாற்றி நின்றனர்.

நாட்டை ஆளும் அரசர்களும், நாட்டை நல்வழியில் நடத்திச் செல்லும் அமைச்சர்களும் நாட்டைக் காக்கும் வீரர்களும் அதற்கு அடுத்த நிலையில் போற்றப்பட்டனர்.

வாணிகம் செய்து பொருளாதார நிலையில் உயர்ந்து விளங்கியவர்கள், தங்களை "அரசர் பின்னோர்" எனப் பெருமையுடன் பறை சாற்றிக் கொண்டனர்.

பிறருக்குத் தொண்டு செய்யும் நிலையில் உள்ள தொழில்களைச் செய்தவர்களும் பொருளாதார நிலையில் பிறருடைய நிதியை நாடி நிற்க வேண்டிய அவல நிலையில் உள்ள தொழில்களைச் செய்தவர்களும் இழிவான தொழில்களாகக் கருதப்பட்ட தொழில்களைச் செய்தவர்களும் கடை நிலைச் சாதியினராகக் கருதப்பட்டனர்.

தூய்மை, தூய்மையின்மை என்பனவற்றை அளவுகோலாகக் கொண்டு சில சாதிகள் தாழ்ந்த சாதிகளாகவும் சில உயர்ந்த சாதிகளாகவும் பாகுபாடு செய்யப்பட்டன. காலப்போக்கில் அனைத்துச் சாதிகளையும் பொது நிலையில் வலங்கை, இடங்கை என்னும் இரு பெரும் பிரிவில் அடக்கிப் பேசும் மரபு தோன்றியது. இவற்றால் சாதிகளின் உயர்வு தாழ்வுகளை மதிப்பிடுவதில் தொழில், பொருளாதார நிலை, தூய்மை ஆகியன முக்கியப் பங்கேற்றன.

## சாதி இலக்கியங்கள்:

சாதி இலக்கியங்கள் தத்தம் சாதிகளின் உயர்வினை வானளாவப் புகழ்ந்தன. அதே நேரத்தில் பிற சாதியினரைப் பழிக்கவும் செய்தன. கற்பனையின் துணையாலும் புராணங்களின் வாயிலாகவும் உயர்ந்த சாதிகளின் சமூக நிலைக்கு நிகராக நல்ல சமூக அந்தஸ்தைப் பெற முடியாத சாதிகளும் தம்மை உயர்த்திப் பேசும் உத்திகளைக் கையாண்டன. சூழ்நிலை காரணமாக அடக்கி ஆளப்பட்ட சாதியினரும் இவ்வுத்தியைக் கையாண்டனர்.

## கால்டுவெல்லின் வரலாற்றுப் பிரசுரம்:

1849-இல் டாக்டர் கால்டுவெல் திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள நாடார்களின் வரலாற்றை ஒரு சிறு பிரசுரமாக எழுதி வெளியிட்டார். இந்நூலைச் சில மாற்றங்கள் செய்து 1850-இல் இங்கிலாந்து நாட்டில் வெளியிடுவதற்காக எஸ்.பி.ஜி. (S.P.G) என்ற கிறிஸ்துவ நிறுவனத்திற்கு அனுப்பி வைத்தார்.

மேற்குறித்த நூலில் உயர் சாதியினருக்கு அடிமைப்பட்ட தாழ்ந்த சாதியினராக நாடார்கள் சித்திரிக்கப்பட்டு இருந்தனர்.

## நாடார்களின் பொருளாதார நிலை:

கி.பி. 18, 19 - ஆம் நூற்றாண்டுகளில் நாடார் குல மக்களில் பெரும்பாலோர் பொருளாதார நிலையில் மிகப் பின் தங்கியவர்களாகவே இருந்து வந்தனர். குறிப்பாகக் குமரி மாவட்டத்தில் வாழ்ந்த நாடார் குலத்தின் பெரும் பகுதியினர் உயர் சாதியினரின்

அடக்குமுறைகளுக்கு உள்ளாக்கப்பட்டுப் பல துன்பங்களை அனுபவித்து வந்தனர். தீண்டாமை, வரிக் கொடுமை போன்றவற்றால் பெரிதும் பாதிப்படைந்த இவர்களுள் பெரும்பாலோர் தங்கள் உரிமையைக் காத்துக் கொள்ளப் போராடினர். அப்போது குமரி மாவட்டம் திருவிதாங்கூர் மன்னர்களின் ஆட்சிக்கு உட்பட்டு இருந்தது.

குமரி மாவட்டத்தில் வாழ்ந்த நாடார் குல மக்கள் தங்களின் உரிமைகளைக் காப்பாற்ற இன உணர்வுடன் தொடர்ந்து பல ஆண்டுகள் போராடினர். அவர்களது போராட்டம் இரு வகைகளில் அமைந்திருந்தது.

1. திருவிதாங்கூர் மன்னர்களின் அடக்கு முறைகளை எதிர்த்து நடத்திய போராட்டம்.
2. உயர் சாதியினரின் கொடுமைகளை எதிர்த்து நடத்திய போராட்டம்.

நாடார் குல மக்கள் தங்களின் குல உயர்வை நிலை நிறுத்த இரு வகையான அணுகு முறைகளைப் பின்பற்றினர்.

1. ஒரு பிரிவினர் கிறிஸ்துவ சமயத்தைத் தழுவி மேல் நாட்டு இறைத் தொண்டர்களின் துணையோடு உரிமைகளைக் காக்கப் போராடினர்.
2. மறுபகுதியினர் வைகுண்ட சுவாமி என்னும் பெயர் தாங்கிய முத்துக்குட்டி சுவாமி (1809-1851) என்னும் சமூகச் சீர்திருத்தவாதியின் சமத்துவச் சிந்தனைகளால் ஈர்க்கப் பெற்று இனஉணர்வுடன், இழந்த தமது உரிமைகளைக் காக்கப் போராடினர்.

நாடார் குல மக்கள் தங்கள் சமுதாய அந்தஸ்தினையும் தங்கள் குலத்துப் பெண்களின் மானத்தையும் காக்க, தொடர்ந்து போராடிய மேற்குறித்த போராட்டங்கள் வரலாற்று ஆசிரியர்களால் 'தோள்சீலைக் கலகம்' என்று சுட்டப்படுகின்றது. டி.எச்.ஜார்ஜ்ஜின் குமரி மாவட்டப் பெண்ணுரிமைப் போராட்டம் என்ற நூலில் இக்கலகம் பற்றிய செய்தி இடம் பெற்றுள்ளது.

## நாடார்கள் துய்த்த துயரங்கள்:

திருவிதாங்கூரின் பிற்கால வரலாறு நாடார்குல மக்கள் எப்படி எல்லாம் அடிமைப்படுத்தப்பட்டு ஆளும் வர்க்கத்தினரால் கொடுமைப்படுத்தப்பட்டனர் என்ற செய்தியை விளக்கி நிற்கிறது. மார்த்தாண்டவர்மன் ஆட்சிக்கு வந்தபோது புரோகிதன் ஒருவனின் ஆலோசனைப்படி அனந்த பத்மநாப ஸ்வாமியின் வேள்விக்காக ஈழவர், நாடார், பரதவர் சமூகங்களைச் சார்ந்த பதினைந்து குழந்தைகளை உயிரோடு புதைத்ததாகத் தமிழ்நாட்டு வரலாறு என்ற நூலில் ராஜய்யன் குறிப்பிடுகிறார். (Rajaian, History of Tamil Nadu 1962, P.234)

## கால்டுவெல்லின் பிரசுரம் தோற்றுவித்த விளைவுகள்:

டாக்டர் கால்டு வெல்லின் பிரசுரம் நாடார் குல மக்களின் மேம்பாட்டிற்கும் திருச்சபையின் திருப் பணிகளுக்கும் நிதி திரட்டுவதைக் கருத்தில் கொண்டு எழுதப்பட்ட பிரசுரம் ஆகும்.

நாடார் குல மக்களின் ஒரு பிரிவினர், பின் தங்கிய நிலையில் இருந்ததை இப்பிரசுரம் விளக்கி நின்றது. மேலை நாட்டார் படிப்பதற்காக எழுதப்பட்ட இப்பிரசுரம், அது தோன்றிய காலத்தில் நாடார் குல மக்களிடம் இருந்து எந்த எதிர்ப்பையும் பெறவில்லை.

சட்டாம் பிள்ளை என்னும் புனைபெயர் கொண்ட அருமை நாயகம், திருநெல்வேலி திருச்சபையில் இருந்தவர். மனவேற்றுமை காரணமாகப் பின்னால் அத்திருச்சபையை விட்டுப் பிரிந்து சென்றவர்.

கால்டு வெல்லின் பிரசுரத்தை அவர் படித்ததும் சினம் கொண்டு பொங்கி எழுந்தார். முதன் முதலாக எழுந்த அவரது எதிர்ப்புக் குரலுடன் இணைந்து நின்று நாசரேத் பகுதியிலுள்ள வேறு பல நாடார்குல மக்களும் எதிர்ப்புக் குரல் கொடுத்தனர். இதன் விளைவாக கால்டு வெல்லின் நூலுக்குப் பல மறுப்புகள் எழுந்தன. நாடார்குல மக்கள் எழுத்து வடிவில் இந்த எதிர்ப்பை வெளியிடுவதில் முனைந்து ஈடுபட்டனர்.

## நாடார் குலத்தின் நூல் வடிவங்கள்:

1857-இல் சட்டாம் பிள்ளை எழுதிய மறுப்புப் பிரசுரம் நாடார்கள் உயர்ந்த சாதியினர் என்பதை எடுத்துப் பேசும் முதல் பிரசுரமாகத் திகழ்ந்தது. இதனைத் தொடர்ந்து நாடார்களின் வரலாற்றையும் குலச் சிறப்பையும் எடுத்துப் பேசும் ஏராளமான நூல்கள் தமிழ் நாட்டில் உலாவரத் தொடங்கின.

1871-இல் வின்பிரட் என்பவரால் 'சான்றோர் மரபு', என்னும் நூல் எழுதப்பட்டது. இந்நூல் நாடார்குல வரலாற்றைப் பேசும் முறையான முதல் நூலாகக் கருதப்படுகின்றது. இதனைத் தொடர்ந்து 'சான்றோர் குல மரபு காத்தல்' என்னும் நூலினை எஸ்.வின் பிரட் என்பவர் வெளியிட்டார்.

இதன் தொடர்ச்சியாகச் சாமுவேல் சற்குணர் என்பவர் சான்றோர் குலச் சிறப்பை எடுத்துப் பேசும் பிரசுரங்கள் பல வெளியிட்டதோடு சான்றோர் குல மக்களைத் 'திராவிட சத்திரியர்கள்' என்று குறிப்பிட்டுச் சத்திரியர் என்னும் வர்ணத்தோடு நாடார்களை இணைக்க முயன்றார்.

### நாடார்குல வரலாறு:

மேற்குறித்த முயற்சிகளுக்குப் பின்னர் கால்டுவெல்லின் நூல் கடும் கண்டனத்துக்கு உள்ளாகியது. நாடார் குல இனத்தவர் தங்களது பெருமைகளையும் உயர்வுகளையும் பலபடப் புகழ்ந்து நூல்கள் எழுதினர். இதனைப் பொறுக்காத பிற இனத்தவர்கள் கால்டு வெல்லை ஆதரித்துத் துண்டுப் பிரசுரங்களை வெளியிட்டனர். இதனால் பிற இனத்தவர்களின் எதிர்ப்புகளுக்கு இடையே நாடார்கள் தங்கள் குலப் பெருமையை எடுத்துரைக்கப் போராட வேண்டி இருந்தது.

டி.வி.துரைசாமி கிராமணி என்பவர் சத்திரியர் என்னும் வடசொல்லின் தமிழ் வடிவமே நாடார் என்று வாதிட முயன்றார்.

### வெங்கலராஜன் கதை தோன்றியதன் பின்புலம்:

நாடார்களின் குலமரபு பற்றிப் பல்வேறு புராணக் கதைகள் நாட்டுப்புற இலக்கிய வடிவில் இடம் பெற்றன. நாடார்களின் வரலாற்றைக் கற்பனை கலந்து கூறும் பல கதைப் பாடல்களும் நாட்டுப்புற இலக்கியங்களும் தோன்றின. இத்தகைய பின்னணியில் தோன்றிய கதைப் பாடல்களுள் ஒன்றாக வெங்கலராஜன் கதை அமைகின்றது.

டாக்டர் கால்டுவெல்லின் பிரசுரம் எழுதப்படுவதற்கு முன்னர், ஆளும் வர்க்கத்தாலும் உயர் சாதியினராலும் குமரி மாவட்டத்து நாடார்குல மக்கள் பெருமளவிற்கு அடிமைப்படுத்தப்பட்டுப் பல்வேறு கொடுமைகளுக்கு உள்ளாயினர்.

நாடார்குல மக்களின் மீது சுமத்தப்பட்ட வரிக் கொடுமைகளைப் பற்றி வைகுண்ட சுவாமிகள் எழுதிய 'அகிலத் திரட்டு' என்னும் நூல் விரிவாக விளக்கிப் பேசுகின்றது.

**"வட்டிக்கும் ஆயம் வலங்கை சான்றோர் கருப்புக்**
**கட்டிக்கும் ஆயம் கடுநீசன் வைத்தானே."**

(வைகுண்ட சுவாமிகள், அகிலத்திரட்டு மேற்கோள் - வெங்கலராஜன் கதை முன்னுரை - பக்கம் 3)

குமரி மாவட்டத்தில் அரசியல் நிலையிலும் சமுதாய நிலையிலும் இக்குலத்தினர் அதிக அளவிற்குத் துன்புறுத்தப்பட்டதால் அவர்களுள் பெரும்பாலோர் நெல்லை மாவட்டத்திற்குக் குடிபெயர்ந்து போனதாக 'வைகுண்டர் காட்டிய வாழ்க்கை நெறி' என்ற நூலில் பொன்னீலன் அவர்கள் எடுத்துரைப்பார். மேற்குறித்த நூலில் அமைந்த 'நாட்டார் வழக்காற்றியல்' என்ற கட்டுரையில் (பக்கம்-238) தே.லூர்து அவர்கள் மேற்குறித்த செய்தியினை வெளியிட்டுள்ளார்.

குமரி மாவட்டத்தைப் பொறுத்த வரையில் நாடார்குலப் பெண்கள் பெருமளவிற்கு உயர்சாதி மக்களால் அவமதிக்கப்பட்டனர். இடுப்புக்கு மேற்பகுதியை ஆடையால் அவர்கள் மறைக்கக் கூடாது என்ற மூடத்தனமான மரபு இம்மாவட்டத்தில் இருந்தது. இதனை எதிர்த்துப் பல காலங்கள் தொடர்ந்து ஐரோப்பியக் கிறிஸ்தவத் தொண்டர்களின் துணையோடு போராடி, மேலாடை அணியும் உரிமையினை இவர்கள் பெற்றுள்ளனர்.

நாடார்குல மக்கள் கூலியில்லாமல் அரசாங்க வேலைகள் செய்வதற்காகவும் கட்டாயப் படுத்தப்பட்டதாக அறிகின்றோம். இத்தகைய வேலைகளைச் செய்ய மறுத்தவர்கள் எவ்வாறு கொடுமைப்படுத்தப்பட்டனர் என்பதைத் 'தென்னிந்தியத் திருசபை வரலாறு' மிக விளக்கமாகப் பேசுகின்றது.

சாதாரண எளிய உரிமைகள் கூட குமரி மாவட்டத்தில் வாழ்ந்த பொருளாதார நிலையில் பின்தங்கிய நாடார் குல மக்களுக்கு மறுக்கப்பட்டன. குடை பிடிக்கக் கூடாது, செருப்பு அணியக் கூடாது, உயரிய ஆடை உடுத்தக் கூடாது என்றெல்லாம் கூட விதிமுறைகள் இருந்து வந்தன. ஒரு மாடிக்கு மேல் வீடு கட்டக் கூட அவர்கள் அனுமதிக்கப்பட வில்லை.

## நாடார்களின் அணுகுமுறைகள்:

நாடார்கள் தங்கள் குலப் பெருமையை மூன்று வகையில் நிலை நாட்ட முயன்றனர்.

1. நாடார் குலப் பொதுமக்கள் உயர் சாதி மக்களின் கொடுமைகளை எதிர்த்துப் போராடினர்.
2. நாடார் குலத்தின் கற்றறிந்த அறிஞர்கள் சாதியின் உயர்வைப் பேசும் நூல்களை எழுதினர்.
3. அதே சமயத்தில், பல்வேறு தடைகளை உடைத்தெறிந்து பொருளாதார நிலையில் இக்குலத்தினர் முன்னேற்றம் அடைய முயன்றனர்.

நாடார் குலத்தைச் சார்ந்த அறிஞர்கள் ஆராய்ச்சி நூல்கள், கட்டுரைகள், ஆகியவற்றின் வாயிலாக இவர்களுக்கு எதிராக எழுதப்பட்ட கோட்பாடுகளை எல்லாம் மறுத்துப் புதிய கருத்துகளை நிலை நாட்டிக் கொண்டு இருந்தனர். தங்களைப் பாண்டிய மன்னர்களின் வழி வந்தவர்கள் என்றும், 'திராவிட சத்திரியர்கள்', என்றும், 'சான்றோர்கள்', என்றும் வாதிட்டு நிறுவும் முயற்சியில் ஈடுபட்டிருந்தனர். இங்ஙனம் பல்வேறு வழிகளிலும், பல்வேறு நிலைகளிலும் தங்கள் குலப் பெருமையின் உணர்வை நிலைநாட்ட நாடார்கள் செய்த முயற்சி, அக்குல மக்களிடையே ஒருவித இன விழிப்புணர்வைக் கொழுந்து விட்டு எழச்

செய்தது. நாடார்குலப் பெருமை பேசும் இலக்கியப் படைப்புகள் முழு அளவில் வெளிவரத் தொடங்கின. இங்ஙனம் உருவான இலக்கியப் படைப்புகளுள் ஒன்றுதான் வெங்கலராஜன் கதை என்னும் இந் நாட்டுப்புறக் கதைப்பாடல் ஆகும். நாடார் குல அறிஞர்களின் கருத்துகள், பொருளாதார நிலையில் பின்தங்கிய இச்சாதியின் எளிய மக்களையும் சென்று அடைய வேண்டும் என்பதுதான் இத்தகைய இலக்கியம் தோன்றக் காரணம் எனலாம்.

நாடார் குல அறிஞர்கள் தங்கள் குலத்தின் உயர்வு பற்றிய பல கதைகளை உள்ளடக்கிய நாட்டுப்புற இலக்கியங்களைப் படைத்து மக்களின் மத்தியில் உலவவிட்டுப் பின்னர் அவற்றை ஏட்டில் எழுதி வைத்தனர்.

## வெங்கலராஜன் கதையின் சுவடி:

வெங்கலராஜன் கதைப்பாடல் அகத்தீஸ்வரம் ஆறுமுகப் பெருமாள் நாடாரின் குடும்பத்தாரிடமிருந்து 15-8-85 இல் பெறப்பட்டது. 37 இதழ்களில் 3 பத்திகளாகப் பிரித்துக் கொள்ளப்பட்டு இச்சுவடியில் இக்கதை முழுவதும் பிரதி செய்யப்பட்டுள்ளது. வலங்கையர்களின் வரலாற்றை உள்ளடக்கிய இச்சுவடி ஆசியவியல் நிறுவனத்தின் சுவடியியல் ஆய்வுப் புலத்தில் 17-b என்ற எண்ணில் பதிவு செய்யப்பட்டுள்ளது. இச்சுவடி கி.பி. 1926 பங்குனி மாதம் 21-ஆம் நாள் எழுதி முடிக்கப்பட்டதாக ஒரு குறிப்பு உள்ளது.

## வெங்கலராஜன் கதையின் நூல் அமைப்பு:

வெங்கலராஜன் கதைப்பாடலின் நூலாசிரியர் தமிழ்க் காப்பியங்களை முன்னுதாரணமாகக் கொண்டு இந்நூலை வடிவமைக்க முயன்றுள்ளார். கதைப் பாடல் என்பதனால் கதைப் பாடலுக்குரிய அனைத்து மரபுகளையும் பின்பற்றி நிற்கிறார்.

கதைப்பாடல் வரிசைகளில் அமைந்துள்ள வில்லுப்பாட்டு போன்றதோர் அமைப்பை நூலாசிரியர் இக்கதைப் பாடலுக்குத் தர முயன்றுள்ளார். வில்லுப் பாடல்களைப் போல ஒரே செய்தியை மடக்கி மடக்கிக் கூறும் உத்திகள் நூலில் பல இடங்களில் கையாளப்படுகின்றன.

வில்லுப்பாட்டில், இக்கதை பாதி நடந்து கொண்டிருக்கும் போது இடையில் வந்து அமர்ந்து கேட்கும் பார்வையாளர்களும் கதையை முழுவதும் புரிந்து கொள்ளும் வகையில் நூலில், ஏழு இடங்களில், முன்கதை நிகழ்ச்சிகள் தொகுத்து அளிக்கப்பட்டுள்ளன.

## நூலின் அமைப்பும் உட் பிரிவுகளும்:

இந்நூலின் அமைப்பைப் பின்வருமாறு வகைப்படுத்தலாம்.

### I. கதைப் பாடலின் தொடக்கம்:

1. தொடக்க நிலையில் அமைந்த காப்புச் செய்தி.
2. கதையின் தொடக்கத்தில் முன் வைக்கப்படும் கதைச் சுருக்கம்.
3. முன்னுரை போல் அமைந்துள்ள நாட்டுச் சிறப்பு.
4. கதைத் தலைவர்களின் பிறப்பு.
5. காளிதேவியின் வளர்ப்பு.

### II. கதைக் கருவின் வளர்ச்சி:

1. வலங்கையர்களின் போர்த் தொழில்களும் அவர்களின் வெற்றிச் சிறப்புகளும் சிறப்புப் பட்டங்களும்.
2. வலங்கையர்களின் அறிவாற்றல்.
3. மாற்றுத் தொழில் புரிய வலங்கையர்களின் மறுத்தலும், இரு வலங்கையர்கள் கொல்லப்படுதலும்.

### III. கதைத் திருப்பம்:

1. வலங்கையர்கள் இலங்கை அடைந்த வரலாறு.
2. இரசவாத வித்தையால் அடைந்த பொருளாதார முன்னேற்றம்.
3. வெள்ளையர்களால் வலங்கையர்களின் முன்னோர்கள் அழிந்துபடல்.

### IV. கதைப் பின்னலின் முதிர்ச்சியும் முடிவும்:

1. வெங்கலராஜனின் திருமணமும் குழந்தைப் பேறும்.
2. வஞ்சி மன்னன் படையெடுப்பும் திரைமுகத்தழகியின் இறப்பும்.
3. வெங்கலராஜன் ஊர் மாறிச் செல்லுதல்.
4. நளராஜனின் குற்றச் சாட்டும் சங்கு முகத்தழகியின் இறப்பும்.
5. அனைவரும் இறத்தல்; கதைப்பாடல் துன்பியலாக முடிதல்.

## I. கதைப் பாடலின் தொடக்கம்:

வெங்கலராஜன் கதைப்பாடலின் தொடக்கத்தில் சிவ பெருமானின் அருள் பற்றிப் பேசப்படுகிறது. வலங்கையர்களை வளர்த்த காளி நினைவுகூறப்படுகிறாள்.

## 1. அவையடக்கம் இடம் பெறவில்லை:

தமிழ்க் காப்பியங்களில் காப்புச் செய்யுளை அடுத்து இடம் பெறும் அவையடக்கம் இந்நூலில் இடம் பெறவில்லை. நூலின் ஆசிரியர் பணிந்து நின்று உலகின் முன் அடக்கத்துடன் கூறும் மொழி அவையடக்கம் எனப்படும்.

கவியில் சிறந்த கம்பர் இராமாயணம் என்னும் பெருங்கடலை, ஒரு பூனை நக்கி முழுவதும் குடிக்க முயன்ற முயற்சியுடன் காப்பியம் எழுதும் தன் முயற்சியை அவையடக்கத்தில் ஒப்பிட்டு நிற்றல் காண்கிறோம்.

இந்நூல் ஆசிரியர்,

"பார்பெறும் புவியோர் மெய்க்கப் பண்புடை வலங்கை வேந்தன்
தாரணி தனில் பிறந்த தமிழிசை பாட லுற்றேன்."

(வெங்கலராஜன் கதை - காப்பு - வரிகள் 3-4)

எனத் தன்னை அறிமுகம் செய்வதோடு அமைதி கொள்கிறார்.

## 2. கதைச் சுருக்கம்:

காப்புச் செய்யுளை அடுத்துக் கதைச் சுருக்கமாக ஓர் எண்சீர் விருத்த ஆசிரியப்பாவிற்குள் கதைச் சுருக்கத்தைச் சுருக்கமாக முடித்து விடுகிறார்.

இப்பாடலில், தெய்வக் கன்னியர் ஏழு பேர் சுனை நீர் ஆடியது, வித்தியாதர முனிவர் அவர்களுடன் உறவு கொண்டது, சிவன் அருளால் உலகில் வலங்கையர்கள் பிறந்தது ஆகிய செய்திகள் சுட்டப்படுகின்றன.

பிறகதைப் பாடல்களில் காப்புச் செய்யுளை அடுத்துக் கதைச் சுருக்கம் இடம் பெறுதல் என்ற மரபினைக் காக்கும் முயற்சியாக இது காணப்படுகிறது.

### 3. நாட்டுச் சிறப்பு:

சேரர், சோழர், பாண்டியர் என்ற மூன்று கூறில் ஒரு பகுதியாகப் பிரிந்த சோழ நாட்டின் இயற்கை வளமும் பொருள் வளமும் அரசனின் "சொல் மாறாத" பண்பும் நாட்டுச் சிறப்பில் புகழப்படுகின்றன. சிவபெருமானின் அருளால் சிறப்புடன் நாடு விளங்குவதாக நூலாசிரியர் குறிப்பிடுகிறார்.

### 4. கதைத் தலைவர்களின் பிறப்பு:

வலங்கையர்களின் முன்னோர்களது பிறப்பு உயர்வாகக் காட்டப்படுகிறது. சிவபெருமானின் அருளால், ஏழு தெய்வக் கன்னியருடன் வித்தியாதர முனிவர் உறவு கொண்டு, வலங்கையர்களின் வம்சத்தைத் தோற்றுவிக்கிறார். அந்த ஏழு தெய்வக் கன்னியர்களுக்கும் ஏழு குழந்தைகள் பிறப்பதாகக் கதை சுட்டி நிற்கிறது. வலங்கையர்களின் தாய்மார்கள் தெய்வலோகத்தைச் சார்ந்தவர்கள் என்று கூறுவதற்கு அவர்களது பிறப்பில் உயர்வு கற்பிப்பது நோக்கம் ஆகலாம். வித்தியாதர முனிவருடன் உறவு கொண்டு குழந்தைகள் பிறந்தனர் என்று சுட்டுவதற்குக் குழந்தைகள் மனத் தூய்மை கொண்ட முனிவரது வம்சத்தினர் என அவர்களது பிறப்பில் தூய்மை கற்பிப்பது நோக்கம் ஆகலாம்.

### 5. காளிதேவியின் வளர்ப்பு:

குழந்தைகள் ஏழு பேரை ஈன்றெடுத்து முனிவரின் கையில் ஒப்படைத்துவிட்டுத் தெய்வக் கன்னியர்கள் வானுலகம் சென்று விடுகின்றனர். வித்தியாதர முனிவர் தொடக்க நிலையில் மணிமேகலையில் வரும் ஆபுத்திரனைப் பசு வளர்த்தமை போன்று, பசுவின் பால் தந்து வளர்க்கிறார். பின்னர் அவர்கள் காளி தேவியால் வளர்க்கப்படுகின்றனர்.

"புத்திரரைத் தான் வளர்ப்பாய் பொற்கொடியே எனக்கொடுத்து
வாங்கியே காளியம்மை மக்களையும் கொண்டுவந்து
தாங்கியெடுத்தே அணைத்து"

(வெங்கலராஜன் கதை - வரிகள் - 435-437)

எனக் காளிதேவி வளர்த்ததாக நூலாசிரியர் குறிப்பிடுகிறார். காளிதேவியால் வளர்க்கப்பட்டு வாலிபமான வலங்கையர்கள் காளிக்குத் துணையாக நின்று தேவர்களைச் சிறைப்பிடித்த தாருதன் என்னும் அசுரனை அழித்துத் தங்களின் போர்த்தொழில் திறமையை வெளிக்காட்டுகின்றனர்.

## II. கதைக் கருவின் வளர்ச்சி:

வானுலக மங்கையர்களான தெய்வக் கன்னியர், காளி, சிவன் ஆகிய வானுலகத் தெய்வங்கள் வானுலகைச் சுற்றி வந்த கதைத் தொடக்கம், பூமியில் நடைமுறை வாழ்க்கையில் ஏற்படும் சிக்கல்களை எதிர்கொண்டு கதைப்பாடலாக வளர்கிறது.

ஐந்து பேராக இருந்த வலங்கையரின் வம்சம் ஏழுநூறு பேராக விருத்தி அடைகிறது. வலங்கையர்களின் குலத் தொழில்களாகப் போர்த் தொழில், பனைத் தொழில், வாணிகம் ஆகியன விளங்கின.

போர்த் தொழிலில் ஈடுபட்ட வலங்கையர்கள் கரிகால் சோழனின் படையில் சேர்ந்து சோழனின் வேற்று நாட்டுப் படைகளை வெல்ல அருந்துணை புரிகின்றனர். சம்பரன், கலியாணன், அமந்திகன் ஆகியோரை வெல்ல முக்கியக் காரணமாக விளங்குகின்றனர். யாரும் வெல்ல முடியாத அமந்திகனை வலங்கையர்கள் வென்றதால், மனம் மகிழ்ந்த கரிகால்சோழன், அமந்திகராஜன் என்னும் சிறப்புப் பழட்டத்தை வலங்கையர்களுக்கு அளிக்கிறான்.

## 2. வலங்கையர்களின் அறிவாற்றல்:

கரிகால் சோழன் ஆண்ட சோழ நாடு ஒருமுறை மழை வளம் குன்றி வாடி நின்றது. கற்புக்கரசியாக விளங்கிய ஒரு தச்சனின் மனைவியை அழைத்து, அவளது கற்பாற்றலால், "மழை பெய்யுமாறு அவளை வேண்டுக" என வலங்கையர்கள் சோழ மன்னனை வேண்டினர்.

வலங்கையர்களின் அறிவுரையை ஏற்று மன்னனும், நாட்டை மழை வளம் கொழிக்கச் செய்தான். அரசனுக்கு அறிவுரை கூறும் அந்தஸ்து உள்ளவர்களாக வலங்கையர்கள் இங்குக் காட்டப்படுகின்றனர்.

## 3. வலங்கையரின் மறுப்பும் - அழிவும்:

சோழ நாடு மழை வளம் கொழித்து நின்றது; அணையே உடைந்து போனது. அணையின் உடைப்பைச் சரி செய்ய விரும்பிய கரிகால்சோழன், வலங்கையர்களை மண் சுமக்குமாறு ஏவினான்.

உயர்ந்த போர்த்தொழில் செய்யும் வலங்கையர்கள் மண் சுமக்கும் இழிந்த தொழிலைச் செய்ய உறுதியுடன் மறுத்து விட்டனர்.

சினம் கொண்ட கரிகால்சோழன் வலங்கையர் இருவரை யானையின் காலால் மிதிக்கச் செய்து கொன்று விடுகிறான். சாவுக்கும் அஞ்சாமல், கொண்ட கொள்கையில் பிடிப்புடையவர்கள் வலங்கையர்கள் என்பதை நிறுவுவதற்கு எடுத்த முயற்சி இது எனலாம்.

## III. கதைத் திருப்பம்:

### வலங்கையர்கள் இலங்கை அடைந்த வரலாறு:

கரிகாலன் ஆட்சி புரிந்த சோழ நாட்டை விட்டு, வலங்கையர்கள் இலங்கை சென்று வாழத் தொடங்குகின்றனர். இலங்கைக்கு வந்த வித்தியாதர முனிவராகிய அவர்களின் தந்தை, மூலிகைச் சாறு கொண்டு இரும்பைப் பொன் ஆக்கும் இரசவாத வித்தையைக் கற்றுக் கொடுக்கிறார்.

வலங்கையர்கள் இரும்பைப் பொன்னாக்கி, அதை மறைக்க வாழைத் தோட்டத்திற்குச் சென்று பொன்னைப் புதைக்கின்றனர். வாழைத் தோட்டம் விளைவித்த கனிகள் பொன்னிறமாக மினுங்கிக் காட்சி அளிக்கின்றன.

இதை அறிந்த வெள்ளையர்கள் இரும்பைப் பொன்னாக்கும் இரசவாத வித்தையைத் தங்களுக்குக் கற்றுத் தருமாறு வலங்கையர்களிடம் வேண்டுகின்றனர். “பொன் காசுகளில் தங்கள் உருவத்தைப் பதித்து, அரசு காசு வெளியிட வேண்டும்”, என்ற நிபந்தனையுடன் வலங்கையர்கள் வெள்ளையர்களுக்கு இரசவாத வித்தையைக் கற்றுக் கொடுக்கின்றனர்.

வெள்ளையர்களால் தங்களுக்கு ஆபத்து வரலாம் என அஞ்சிய வலங்கையர்கள் தங்களது பேரனாகிய வெங்கலராஜனுக்கு இவ்வித்தையைக் கற்றுக் கொடுக்கின்றனர்.

வலங்கையர்கள் அஞ்சியவாறே வெள்ளையர்களால் அவர்கள் கொல்லப்படுகின்றனர்.

பொருளாதாரத்தில் பின்தங்கி நின்ற வலங்கையர் குலம் முன்னேற்றம் அடைந்த காரணத்தையும், பின்புலத்தையும் எடுத்துக் கூறுவதற்காக இரசவாத வித்தை இக்கதைப் பாடலில் புகுத்தப்பட்டுள்ளது எனலாம்.

## IV. கதைப் பின்னலின் முதிர்ச்சியும் முடிவும்:

வெள்ளையர்களால் தங்களின் முன்னோர்களை இழந்த வெங்கலராஜன் இலங்கையை விட்டு வெளியேறிச் சாமிக்காட்டு விளை என்னும் இடத்தில் வந்து கோட்டை கட்டி வாழ்கிறான். அவனுக்குத் திரைமுகத்தழகி, சங்குமுகத்தழகி என்ற இரு பெண் குழந்தைகள் பிறந்து வளர்கின்றனர்.

அப்பெண் குழந்தைகளின் இளமைப் பருவத்திற்கு முன்னர் வரை அவர்களுடைய வாழ்க்கை வரலாற்றுச் செய்தி எதுவும் இக்கதைப் பாடலில் இடம் பெறவில்லை.

இளமைப் பருவம் பூத்து நின்ற திரைமுகத்தழகி ஆறாட்டு எனப்படும் தீர்த்த வாரித் திருவிழா காணத் தன் தந்தையின் கூற்றையும் மீறிச் செல்கிறாள். அங்கே, அவளது பேரழகை வஞ்சி மன்னன் கண்டு வியக்கிறான். வெங்கலராஜனிடம் பெண் கேட்டுத் தூது அனுப்புகிறான்.

வெங்கலராஜன் இரும்பைப் பொன்னாக்கும் இரசவாத வித்தை மூலம் பொருளாதார நிலையில் மிக உயர்ந்து விளங்கியதால் பெண் தர மறுக்கிறான்.

சினம் கொண்ட வஞ்சி மன்னன் வெங்கலராஜனின் கோட்டையை நோக்கிப் படையெடுக்கிறான். பொருளாதாரத்தில் உயர்ந்து அரசன் என்ற அந்தஸ்துடன் கோட்டையைக் கட்டி வாழ்ந்தாலும், வெங்கலராஜனிடம் படைபலம் இல்லை.

இச் சிக்கலுக்குத் தீர்வு காண தனது மரணம் தான் துணை நிற்கும் என முடிவு செய்த திரைமுகத்தழகி, தன் தலையை அறுத்துத் தன்னைக் கொன்று விடுமாறு, தன் தந்தையாகிய வெங்கலராஜனிடம் வேண்டுகிறாள்.

தொடக்கத்தில் தயங்கிய வெங்கலராஜன் இறுதியில் திரைமுகத்தழகியின் தலையை வெட்டிக் கோட்டைக்கு வெளியே எறிகிறான். தன் ஆசை நிறைவேறாத வஞ்சி மன்னன் திரைமுகத்து அழகியின் தலையைத் தானே அடக்கம் செய்வதில் அமைதி காண்கிறான்.

வெங்கலராஜன் சாமிக்காட்டு விளை என்னும் தான் வாழ்ந்த இடத்தை விட்டுப் புறப்பட்டு குறும்பூர் என்னும் ஊரில் தன் மகள் சங்குமுகத்தழகியுடனும் உறவினர்களுடனும் குடியேறுகிறான். அங்குக் கோட்டை கட்டி வாழ்கிறான்.

சங்குமுகத்தழகியின் நீண்ட ஒரு தலைமுடியைக் கண்டு வியந்து நளராஜன் சங்குமுகத்தழகியைத் திருமணம் செய்ய விரும்புகிறான். ஆனால் வெங்கலராஜன் தனக்கு நிகரான அந்தஸ்தை நளராஜன் பெற்றிருக்கவில்லை எனக் கூறிப் பெண் தர மறுத்து விடுகிறான்.

பெண் தர மறுத்ததால் நேர்ந்த அவமானம் காரணமாக நளராஜன் வெங்கலராஜனையும், அவளது மகளையும் அழிக்கச் சதித் திட்டம் தீட்டுகிறான்.

செங்கிடாய்க்காரன் என்னும் துஷ்ட தெய்வத்தை வேள்வியின் மூலம் வரவழைக்கிறான். துஷ்ட தெய்வம் சங்குமுகத்தழகியின் குடத்திற்குள் மாங்கனி வடிவம் கொண்டு ஒளிகிறது.

சங்குமுகத்தழகி, 'கனி திருடியக் கள்ளி' எனக் குற்றம் சாட்டப்படுகிறாள். அவமானம் தாங்காத சங்குமுகத்தழகியின் தந்தையும், உறவினரும் தற்கொலை செய்து கொண்டு இறந்து விடுகின்றனர்.

சங்குமுகத்தழகி தன் கற்பின் ஆற்றலால் மண்மாரி பொழியச் செய்து நளராஜனையும் அவனது நாட்டையும் அழித்து விடுகிறாள். இறுதியில் தானும் இறந்து விடுகிறாள்.

## முடிவுரை:

வெங்கலராஜன் என்னும் இக்கதைப்பாடலில் நல்ல உள்ளமும் அமைதியான வாழ்க்கையும் கொண்ட தலைமை மாந்தர்களும், பெண் பாத்திரப் படைப்புகளும் கொலை செய்யப்படுகின்றனர். அல்லது தற்கொலை செய்து கொள்கின்றனர்.

சினம் கொண்டு வலங்கையர் முன்னோர்கள் இருவரின் சாவிற்குக் காரணமாக இருந்த கரிகால்சோழனும், பெண் தர மறுத்ததால் வெங்கலராஜனின் மேல் போர்த் தொடுத்துத் திரைமுகத்தழகியின் சாவிற்குக் காரணமாக இருந்த வஞ்சி மன்னனும், இக்கதைப் பாடலில் துயர முடிவு கொள்ளவில்லை. மாறாக சங்குமுகத்தழகி கிடைக்காததால் சதித்திட்டம் தீட்டிய நளராஜன் மண் மாரியால் இறந்து விடுகிறான்.

இங்ஙனம் நூலின் அமைப்பு எளிய நீரோடை போன்று அதிக சலசலப்பு இன்றி பலரின் துன்பியல் முடிவோடு முடிவடைகிறது எனலாம்.

பாடம்-2

# வெங்கலராஜன் கதையில் நாட்டுப்புற மரபுகள்

## முன்னுரை:

தமிழ் மொழியில் ஏறத்தாழ எண்ணூறு நாட்டுப்புறக் கதைப்பாடல்கள் உள்ளன. அக்கதைப் பாடல்கள் சில குறிப்பிட்ட பொதுவான மரபுகளைப் பின்பற்றி நிற்றலைக் காண முடிகிறது. வெங்கலராஜன் கதை பின்பற்றி நிற்கும் மரபுகளை அவற்றின் பொருள் அமைதி, நோக்கம், கதைத் திருப்பம் கதையை முன் வைக்கும் பாங்கு ஆகியவற்றின் அடைப்படையில் ஆறு வகைகளாகப் பகுக்கலாம்.

## I. கதை தொடர்பான மரபுகள்:

கதை தொடர்பான மரபுகளை அவற்றின் பொருள் அமைதிக்கு ஏற்றவாறு இரு வகைப்படுத்தலாம்.

1. கதைத் தொடக்கத்தில் கதைச் சுருக்கம் இடம் பெறல்.
2. கதைச் சுருக்கத்தினை அடுத்து நாட்டுவளம் இடம் பெறல்.

## II. கதை மாந்தர் தொடர்பான மரபுகள்:

இம் மரபுகளை இரு வகையாகப் பகுக்கலாம்.

1. கதைத் தலைவர்களின் பிறப்பு தொடர்பானவை.
2. கதைத் தலைவர்களின் வளர்ப்பு முறை தொடர்பானவை.

## III. பட்டியல்கள் தொடர்பான மரபுகள்

இம் மரபுகளை இரு வகைகளாகப் பகுக்கலாம்.

1. பெயர்களைப் பட்டியல் இடுதல்.
2. பயணத்தின் இடையே வரும் ஊர்களைப் பட்டியல் இடுதல்.

## IV. சமூக வளர்ச்சி தொடர்பான மரபுகள்:

இம் மரபுகளை இரு வகைப்படுத்தலாம்.

1. பொருளாதாரத்தில் பின்தங்கிய நிலையில் தோன்றும் உரிமைப் போராட்டங்கள்.
2. பொருளாதாரத்தில் முன்னேறிய நிலையில் தோன்றும் பாலியல் போராட்டங்கள்.

## V. நிகழ்ச்சிகள் தொடர்பான மரபுகள்:

இம் மரபுகளை மூன்று வகைப்படுத்தலாம்.

1. புராண, வரலாற்று நிகழ்ச்சிகளுக்கு முன்னுரிமை.
2. முன் நிகழ்ச்சிகளைத் தொகுத்துக் கூறும் மரபுக்கு முன்னுரிமை.
3. கதை நிகழ்ச்சிகளை இரண்டு வகைகளாகப் பகுத்து முற்பகுதியில் முன்னோர்களின் வரலாற்றிற்கும் பிற்பகுதியில் கதைமாந்தர்களின் வரலாற்றிற்கும் இடம் தருதல்.

## VI. இறப்பு தொடர்பான மரபுகள்:

இறப்பு தொடர்பான மரபுகள் சங்கிலித் தொடர் போல ஒன்றை அடுத்து மற்றொன்றும், ஒன்றோடு இணைந்து மற்றொன்றும் அமைதல் மரபாக உள்ளது.

1. தீய தேவதைகளின் துணையோடு திட்டமிடுதல்.
2. பழி வாங்குதல்.
3. பாதிக்கப்பட்டவர்கள் சாபம் இடுதல் அல்லது பெண்கள் கற்பின் ஆற்றலை வெளிப்படுத்துதல்.
4. கொலை அல்லது தற்கொலை.
5. ஒப்பாரி இடம் பெறுதல்.
6. இறந்தவர்கள் தெய்வத்திடம் வரம் பெறுதல்.
7. இறந்தவர்கள் தெய்வமாதல்.

## I. கதை தொடர்பான மரபுகள்:

பிற கதைப் பாடல்களைப் போல வெங்கலராஜன் கதையின் தொடக்கத்தில் கதைச் சுருக்கம் இடம் பெறுதல் காண்கிறோம். அதையடுத்து, நாட்டின் வளமும் நாட்டின் சிறப்பும் கூறப்படுகின்றன.

கதைச் சுருக்கத்தில் ஈசன் அருள் பெற்ற மேல் உலகப் பெண்கள் ஏழு பேர் கங்கையில் நீராடுதல், வித்தியாதர முனிவருடன் புணர்ச்சி கொள்ளுதல், வலங்கையர்கள் பிறத்தல், ஆகிய நிகழ்ச்சிகள் இடம் பெறுகின்றன.

"சீர்சிறந்த வளநாடு செல்வம்வளர்ந் தோங்கும் நாடு
கார் சிறந்த திருநாடு கனமாரி பொழியும் நாடு
பார்சிறக்கும் நன்னாடு பாண்டிமன்னர் வாழுநாடு"

(வெங்கலராஜன் கதை - வரிகள் - 8-10)

வெகங்கலராஜனின் முன்னோர்கள் பாண்டிய நாட்டினர். பாண்டிய நாடு உலகம் போற்றும் நல்ல நாடாக விளங்கியது. மழை பொழியும் இயற்கை வளமும், செல்வம் செழித்த செயற்கை வளமும் அங்கு மிகுந்து இருந்தன.

நாட்டில் இயற்கை எழில் மிகுந்து இருந்தது. புன்னை மலரும், செந்தாழை மலரும் பூத்துக் குலுங்கின. அஃறிணை உயிர் இனங்கள் கூட மகிழ்ச்சியில் மிதந்து இருந்தன.

"மயிலினங்கள் வாழும் நாடு வண்டுகள் இசை பாடும் நாடு
குயிலினங்கள் வாழும் நாடு குதித்துமந்தி தாவும் நாடு"

(வெங்கலராஜன் கதை - வரிகள் - 12-13)

ஆறில் ஒரு பங்கு வரியாகப் பெறப்பட்டது. அண்டை நாட்டை ஆண்ட குறுநில மன்னர்கள் பாண்டிய அரசர்க்கு அடங்கி ஆட்சி புரிந்தனர். நெல் வளமும், கரும்பு வளமும் மிகுந்து இருந்தது. விண்ணுலகத் தெய்வக் கன்னியரும், விண்ணை விட்டு இறங்கி வந்து பாண்டிய நாட்டின் சுனைகளில் நீராடும் அளவிற்கு அந்நாடு வளமும், புகழும் பெற்று இருந்தது.

## II. கதை மாந்தர் தொடர்பான மரபுகள்:

இம்மரபுகளை இரு வகையாகப் பகுக்கலாம். கதைத் தலைவர்களின் பிறப்பு தொடர்பானவை. கதைத் தலைவர்களின் வளர்ப்பு தொடர்பானவை.

### வெங்கலராஜனின் முன்னோர் பிறப்பு:

வெங்கலராஜனின் முன்னோர் பிறப்பு ஏறத்தாழ நூற்று எண்பது வரிகளில் விரித்துரைக்கப்படுகிறது. வெங்கலராஜனின் முன்னோர் பிறப்போடு புராணக்கதை மரபு, இயற்கை இறந்த நிகழ்ச்சிகளும் இணைத்துக் காட்டப்படுகின்றன. இவர்களின் குலம் 'வலங்கையர் குலம்' என்ற தொடரால் வர்ணிக்கப்படுகிறது.

வான் உலகத் தெய்வப் பெண்கள் ஏழு பேர் பாண்டிய நாட்டின் சுனையில் நீராட வருகின்றனர்.

இத் தெய்வப் பெண்களின் குணம், செயல், எழில் உடல் ஆகியவற்றைக் கண்ட வித்தியாதர முனிவர் தனது தனித் தன்மை மிக்க தவ வலிமையுடன் கூடிய அறிவையும் விஞ்சி அவர்கள் மேல் காம இச்சையும் மயக்கமும் கொள்கிறார். இப் பெண்களுடன் கொஞ்சி விளையாட ஆசைப்படுகிறார்.

அவர்களது அழகும் முகமும் கண்டு புலம்பித் துன்புற்றுப் பரிதவித்து ஏங்குகிறார். அப் பெண்களின் இடையில் அணியும் அரைஞாணாகவும், இடுப்பில் கட்டும் சேலையாகவும், கையில் அணியும் வளையாகவும், கழுத்தில் அணியும் அணிகலன்களாகவும், கிடந்து புரள ஆசைப்படுகிறார். மயக்கம் தரும் கூந்தல் அழகுடைய இப்பெண்களின் விழியில் இடும் கண் மையாக இருப்பதைத் தன் பெரும் பேறாகக் கருதுகிறார்.

"பொட்டுக் குறியும் முகமுங்கண்டு புலம்பிப் பரிதவித் தேங்கிடுவார்
வட்டத் தனத்தையும் அழகுங்கண்டு மோகவிறிகொண்டு புலம்பிடுவார்
இந்த மடவார்கள் இடைதனிலே ஏத்த அரைஞாணாய்ப் புரளேனோ
சொந்த மடவார்கள் அரை தனிலே சேலையாட் டாகச் சேரேனோ
கையில் வளையாகப் புரளேனோ, கழுத்தில் வளையாகப் புரளேனோ
மையார் குழலார்கள் விழியிலிடும் மையா யிருந்தாலும் பேறுமுண்டே."

(வெங்கலராஜன் கதை, வரிகள் - 45-50)

சிவபெருமானின் திருவருளால் தெய்வக் கன்னியர் ஏழு பேரும் மயங்க வைக்கப் படுகின்றனர். அந்த ஏழு கன்னியர்களுடன் முனிவர் உடல் உறவு கொள்கிறார். ஏழு கன்னியர்களுக்கும், தலைக்கு ஒன்று வீதம் ஏழு மைந்தர்கள் பிறக்கின்றனர். இவர்கள் 'வலங்கையர்கள்' என்று அழைக்கப்படுகின்றனர். தெய்வக் கன்னியர் ஏழு பேரும் தாங்கள் பெற்ற ஏழு குழந்தைகளையும், தந்தையாகிய வித்தியாதர முனிவரிடம் ஒப்படைத்து விட்டு வானுலகம் சென்று விடுகின்றனர்.

## 2. குழந்தைகளின் வளர்ப்பு:

இறைவனின் அருளால் மன்னவனுடைய பசுக்கள் இந்த ஏழு குழந்தைகளையும் பாலூட்டி வளர்க்கின்றன.

இக்குழந்தைகளை வளர்க்கும் பொறுப்பைக் காளி தேவி ஏற்றுக் கொள்கிறாள். காளியின் பார்வையில் இக் குழந்தைகள் சிறப்புடன் வளர்கின்றன.

பசுக்களின் பால் குறைவதைக் கண்ட மன்னன், அதற்கான காரணத்தை அறிய முயல்கிறான். இடையர்கள் மூலம் உண்மையை அறிகிறான். அரசனின் படை

குழந்தைகளைக் காணத் திரண்டு வரும் போது, காளிதேவியின் படைகள் பாண்டிய மன்னனுடன் மோதுகின்றன. மன்னனின் படைகள் அஞ்சி, உண்மையை விளங்கி நிற்கின்றன.

குழந்தைகள் காளியின் மேற்பார்வையில் இளைஞர்களாக வளர்கின்றனர். காளி இவ் இளைஞர்களின் துணையுடன் தாருகாசுரனை வதம் செய்கிறாள். அரக்கர்களை அழிக்கும் அளவிற்கு அவர்கள் ஆற்றல் மிக்கவர்களாக விளங்குகின்றனர்.

காளியின் குழந்தைகள் நீர் உண்பதற்காக ஒரு குளத்திற்குச் செல்கின்றனர். ஆனால் அக்குளம் நீர் இன்றிக் காட்சி அளிக்கிறது.

குளத்தின் நீரை முழுவதும் குடித்து விட்டு ஒரு முனிவனும், அவனது மனைவியும் பக்கத்திலிருந்த செடிக்கு அருகே ஒளிந்திருந்தனர்.

காளி தேவி, அவர்கள் இருவரையும் தலை கீழாகப் பூமியில் நடுகிறாள். அவர்கள் ஆண் பனையாகவும், பெண் பனையாகவும் மாறுகின்றனர்.

காளி வலங்கையர்களுக்குப் பனையேறும் தொழிலைக் கற்றுத் தருகிறாள். தன்னிடம் இருந்த கருவிகளை அவர்களுக்குத் தொழில் செய்ய உதவும் கருவிகளாகத் தருகிறாள்.

வலங்கையர்கள் இளைஞர்களாக வளர்ந்த பின்னர் சோழ மன்னன் கரிகாலனைக் கண்டு அவனுக்குப் போர்த் தொழிலில் உதவி புரிகின்றனர். சோழ நாடு மழை இல்லாமல் வறண்ட போது, தச்சன் என்பவனின் கற்புடைய மனைவியை வரவழைத்து, 'மழை பெய்யுமாறு கூறச்செய்க' என அரசனுக்கு அறிவுரை கூறுகின்றனர்.

அவர்களின் அறிவுரையின்படி அரசன் நடக்க, பெரும் மழை பெய்து, காவிரியின் கரை உடைகின்றது. ஈழவன் ஒருவனின் தூண்டுதலினால் கூடையில் மண் சுமந்து உடைப்பினை அடைக்குமாறு கரிகாலன் வலங்கையர்களை வேண்டுகிறான்.

வலங்கையர்கள் குலத் தொழிலைத் தவிர, வேறு எந்த இழி தொழிலையும் செய்ய மாட்டோம் எனக் கூறி மண் சுமக்க மறுக்கின்றனர். அதனால் சினம் கொண்ட மன்னன் வலங்கையர்களுள் இருவரின் தலைகளை யானையின் காலில் இட்டு இடறச் செய்கின்றான். யானை இடற உருண்டோடிய வலங்கையர்களின் தலைகள் "கூடை தொடோம்" என்று கூறிக் கொண்டே ஓடுகின்றன. எஞ்சிய ஐவரும் காளியிடம் முறையிடுகின்றனர். காளி சோழ நாட்டில் மழை பெய்யாமல் தடுக்கிறாள்.

கால வளர்ச்சியில் வலங்கையர்கள் ஐந்து பேரின் வம்சம் எழுநூறு பேராகப் பெருகுகிறது.

வலங்கையர் ஐவரில் ஒருவன் இலங்கையில் வாழத் தொடங்குகிறான். அவனது தந்தை வித்தியாதர முனி அங்குச் செல்கிறார். மூலிகைச் சாறு கொண்டு இரும்பைப் பொன்னாக்கும் ரசவாத வித்தையை முனிவர் வலங்கையனுக்குக் கற்றுக் கொடுக்கிறார்.

அந்த வலங்கையன் பொன்னாக்கப்பட்ட இரும்பை மண்ணில் புதைத்து, அதன் மீது வாழைத் தோட்டம் இடுகின்றான். வாழையின் குலை செம்பொன் போல மின்னுகிறது. இதைக் கண்ட வெள்ளையர்கள் அந்நிலத்தைத் தோண்டுமாறு ஆணை இடுகின்றனர். அங்குப் பொன் கிடைக்கிறது.

வெள்ளையர்கள் அந்த வலங்கையனிடம் இரும்பைப் பொன்னாக்கும் ரசவாத வித்தையைக் கற்றுத் தருமாறு கேட்கின்றனர். அதற்கு வலங்கையன் வெள்ளையர்கள் வலங்கையரின் அச்சுப் பொறித்த நாணயத்தை வெளியிடச் சம்மதித்தால் அந்த ரசவாத வித்தையைக் கற்றுத் தருவதாக வாக்களிக்கிறான்.

வெள்ளையர்களால் தன் உயிருக்கு ஊறு நேரும் என வலங்கையன் அஞ்சுகிறான். ஆதலின் தனது பேரன் வெங்கலராஜனுக்கு இவ் வித்தையைக் கற்றுக் கொடுக்கிறான்.

வலங்கையன் அஞ்சியவாறே, மூலிகை விவரத்தை அறிந்த பின்னர், வெள்ளையர்கள் வலங்கையனின் தலையை வெட்டி விடுகின்றனர்.

வெள்ளையர்களின் கொடுமைக்கு அஞ்சி வெங்கலராஜன் நாஞ்சில் நாட்டிற்கு வந்து மணவைப் பதியை அடுத்த சாமிக்காட்டுவிளை என்ற இடத்தில் வெங்கலக் கோட்டையிட்டுத் தங்குகிறான்.

வெங்கலராஜனுக்கு இரண்டு பெண்கள் பிறக்கின்றனர். அவர்கள் வயதில் பேரழகுடன் காட்சி அளிக்கின்றனர். அவர்களில் ஒருத்தி திரைமுகத்தழகி, இன்னொருத்தி சங்குமுகத்தழகி. இவ்விரு பெண்களும் பறக்கை நகரில் மதுசூதனப் பெருமாளுக்கு நடைபெற்ற ஆறாட்டு விழாவைக் காணச் செல்கின்றனர்.

இம்மகளிரின் அழகு கண்ட வஞ்சி மன்னன் அவர்களை மணக்கத் தூது அனுப்புகிறான். தங்களின் குலப் பெருமை கூறி மணம் செய்து தர வெங்கலராஜன் மறுக்கிறான். ஆதலின் வெங்கலராஜனின் கோட்டையின் மீது வஞ்சி மன்னன் போர் தொடுக்கிறான். மகளின் வேண்டுகோளின்படி, படைபலம் இல்லாத வெங்கலராஜன் அவனது மகள் திரைமுகத்தழகியின் தலையை அறுத்துக் கோட்டைக்கு வெளியே எறிகின்றான். வஞ்சி மன்னன் அத்தலையை நல்லடக்கம் செய்து விட்டுத் திரும்புகின்றான்.

வஞ்சி மன்னனின் தொல்லைக்கு அஞ்சி மற்றொரு மகள் சங்குமுகத்தழகியை அழைத்துக் கொண்டு குறும்பூர் என்ற ஊரில் வெங்கலராஜன் குடியேறுகிறான். அங்கு சங்கு முகத்தழகி குளித்து விட்டுக் கோட்டை மீது நின்று முடியை உலர்த்துகிறாள். அவளது நீண்ட கூந்தல் முடி ஒன்று தெரிவில் வந்து கொண்டிருந்த குறும்பூர் மன்னனின் பல்லக்கில் வந்து விழுகிறது. அம்மன்னன் அவளது முடியின் நீளத்தை அறிகிறான்.

தன்னாட்டுப் பெண்களுக்கு இத்தகைய நீண்ட கூந்தல் இல்லை என்பதை அறிந்த மன்னன் சங்குமுகத்தழகியை மணம் முடிக்க வெங்கலராஜனுக்குத் தூது அனுப்புகிறான். வெங்கலராஜன் மணம் மறுத்த போது சூழ்ச்சியால் தன் எண்ணத்தைக் குறும்பூர் மன்னன் நிறைவேற்ற விரும்புகின்றான்.

வேள்வி செய்து, செங்கிடாய்க்காரன் என்ற தீய தேவதையை எழுப்புகிறான். செங்கிடாய்க்காரன் மாங்கனி வடிவத்தில் சங்குமுகத்தழகியின் குடத்தினுள் நுழைகிறான். அரசனுக்குரிய மாங்கனியைச் சங்குமுகத்தழகியின் குடத்திலிருந்து எடுத்த காவலர்கள் அவளைக் 'கனி திருடிய கள்ளி' எனக் குற்றம் சாட்டி அரசனின் முன் கொண்டு நிறுத்துகின்றனர். இதையறிந்த வெங்கலராஜன் அவமானத்தால் கோட்டையை அடைத்து உள்ளே இருந்து உயிர் துறக்கின்றான். அரசனின் இழிமொழிகளைப் பொறாத சங்குமுகத்தழகி ஈசனை வேண்டுகிறாள். மன்னனின் நகரத்தில் மண்மாரி பொழிகிறது. அந்நகரை அழித்துத் தானும் உயிர் துறக்கின்றாள்.

வெங்கலராஜன் கதையில் தலைவர்களின் வளர்ப்பு முறையில் இடம் பெறும் பசுக்கள் குழந்தைகளை வளர்க்கும் நிகழ்ச்சி, மணிமேகலையில் ஆபுத்திரனைப் பசு வளர்க்கும் காட்சியை நினைவுபடுத்துகிறது. சங்குமுகத்தழகி மாங்கனியைத் திருடியதாக குற்றம் சாட்டப்படும் நிகழ்ச்சி, சங்க இலக்கியத்தில் நன்னன் என்ற அரசனின் காவல் மரம் ஆகிய மாமரத்தின் கனியைக் கன்னி ஒருத்தி களவாடிய நிகழ்ச்சியை நினைவுபடுத்துகிறது. 'பெண் தரமறுத்தல்', மறம் எனப்படும் மகட்பாற் காஞ்சியை நினைவுபடுத்துகிறது.

சங்க இலக்கியத்தில் அக் கன்னி கொலை செய்யப்படுகிறாள். வெங்கலராஜன் கதையில் சங்குமுகத்தழகி மன்னனின் நகரைத் தன் கற்பின் ஆற்றலால் அழித்துத் தானும் உயிர் துறக்கிறாள்.

## III. பட்டியல்கள் தொடர்பான மரபுகள்:

இம் மரபுகளை இரு வகையாகப் பகுக்கலாம், 1. பெயர்களைப் பட்டியல் இடுதல். 2. பயணத்தின் இடையே வரும் ஊர்களைப் பட்டியல் இடுதல்.

## 1. பெயர்களைப் பட்டியலிடும் மரபு:

மனிதர்கள், இடங்கள், மரங்கள், மலர்கள் ஆகியவற்றின் பெயர்களைப் பட்டியல் இட்டுக் கூறும் மரபு காப்பியங்களிலும் நாட்டுப்புறக் கதைப் பாடல்களிலும் நீண்ட தனிப்பாடல்களிலும் இடம் பெறுதல் காண்கிறோம்.

தொன்மையான சமுதாயத்திற்கு அறிவு புகட்ட இத்தகைய பட்டியல்கள் பெரிதும் துணை செய்தன எனலாம். வாய்மொழி இலக்கியங்கள் கல்விச் சாதனங்களாகப் பயன்பட்ட காலகட்டங்களில் பல்வேறு பொருட்கள் தொடர்பான செய்திகளைப் படிப்போர்க்குப் புகட்டுவது இதன் நோக்கம் ஆகும்.

வெங்கலராஜன் ஊர் மாறிச் செல்லும் போது, ஏற்றிய பொருள்களின் பட்டியல்களில் பொன், பணம், திரவியம், கொப்பரை, துணி வகைகள், பெட்டிகள் இடம் பெறுகின்றன. குறுவை நெல், கறுப்பு நெல், செந்நெல், காடை, கழுத்தன், கனகச் செம்பா, செண்பக மார்த் தாண்டன், சீரகச் செம்பா, தட்டாரை, வெள்ளை, ஆனைக் கொம்பன் ஆகிய நெல் வகைகள் இடம் பெறுகின்றன.

பாளப் பொன், பசும் பொன் எனப் பொன் வகைகள் இடம் பெறுகின்றன. உப்பு, புளி, சீனி, கற்கண்டு, வெல்லம் ஆகிய உணவு வகைகள் இடம் பெறுகின்றன.

சாமிக்கட்டுவிளையை விட்டு வெங்கலராஜன் கடந்து செல்லும் பாதை பற்றிய வர்ணனையில் கன்னார் ஓடை, ஊத்துக்குழி, உத்த சாஸ்தாங் கோவில், ஆத்துப் போக்கு மேடு, புத்தளம், குஞ்சிப் பிள்ளைவிளை, எனப் பல இடங்களின் பெயர்கள் இடம் பெறுகின்றன.

இவை போன்று வெங்கலராஜன் கதையின் வரிகள் 1535-1542, 1566-1570, 1587-1591, 1660-1669, 1733-1739, 1744-1773 ஆகிய இடங்களில் பெயர்களின் பட்டியலின் நிரல் நீண்டு காட்சி அளிக்கிறது.

இங்ஙனம் பட்டியல் இடும் முறை உலக இலக்கியங்கள் அனைத்திலும் இடம் பெறுதல் காண்கிறோம்.

ஹோமரின் காப்பியத்தில் கப்பல்களின் பட்டியல்கள் இடம் பெறுகின்றன. வர்ஜிலின் காப்பியத்தில் மலர்களின் பட்டியல்கள் இடம் பெறுகின்றன. மில்டனின் காப்பியத்தில் எதிரிப் படையில் இணைந்த வீரர்களின் பட்டியல்கள் இடம் பெறுகின்றன.

இராமாயணத்தில் அசுரர்களின் பெயர்கள் பட்டியல்களாகத் தொகுத்துத் தரப்பட்டுள்ளன. சிலப்பதிகாரம் முழுவதும் கோயில்கள், குடியிருப்புகள் முதலிய பட்டியல்களின் நிரல்கள் பரந்துபட்டுக் காணப்படுகின்றன. சங்க இலக்கியமான குறிஞ்சிப் பாட்டில் 99 மலர்களின் பட்டியல் இடம் பெறுகிறது. முக்கூடற்பள்ளு என்ற இலக்கியத்தில் நெல்களின் பெயர்கள் தொகுத்துப் பட்டியலாகத் தரப்பட்டுள்ளன.

## 2. பயணத்தின் இடையே வரும் ஊர்களைப் பட்டியல் இடுதல்:

வெங்கலராஜன் குடும்பத்தினர் இலங்கையை விட்டுச் சாமிக்காட்டு விளைக்குச் சென்ற பயண நிகழ்ச்சி, குறும்பூருக்கு சென்ற பயண நிகழ்ச்சி, வஞ்சி மன்னனும் குறும்பூர் மன்னனும் மணத்தூது அனுப்பும் போது தூதுவன் கடந்து சென்ற வழிகள் ஆகியவை கூறும் இடத்தில் ஊர்களின் நீண்ட பட்டியல் தரப்படுகிறது.

## IV. சமூக வளர்ச்சி தொடர்பான மரபுகள்:

இம் மரபுகளை இரு வகைப்படுத்தலாம்.

1. பொருளாதாரத்தில் பின் தங்கிய நிலையில் தோன்றும் உரிமைப் போராட்டங்கள்,
2. பொருளாதாரத்தில் முன்னேறிய நிலையில் தோன்றும் பாலியல் போராட்டங்கள்.

## பொருளாதாரத்தில் பின் தங்கிய நிலையில் தோன்றும் உரிமைப் போராட்டங்கள்:

பொருளாதார நிலையில் பின் தங்கி நின்றபோது பலமற்ற வலங்கையர்கள் தம் குலத் தொழில் அல்லாத வேறு வேலைகளில் ஈடுபடுத்தக் கட்டாயப்படுத்தப்பட்டனர். அச்சூழலில் தங்களின் சமூக அந்தஸ்தினைக் காப்பாற்றுவதற்காக அவர்கள் அரசனின் ஆணையை எதிர்த்துப் போராட வேண்டியது இருந்தது. குலத் தொழிலே சாதியை நிர்ணயிக்கும் அளவு கோலாக இருந்தமை அதற்குக் காரணம்.

வலங்கையர்கள் அவர்களின் குலத்தொழிலை விட்டு, மண் சுமக்குமாறு கட்டாயப் படுத்தப்பட்டபோது உறுதியுடன் நின்று மறுத்து விடுகின்றனர். அரசனின் ஆணைக்கு இணங்க மறுத்த வலங்கையர்களுக்கு யானைக் காலால் இடறிக் கொல்லும் மரண தண்டனை அளிக்கப்பட்டது. வலங்கையர்கள் அஞ்சாமல், தயங்காமல், உறுதியுடன் நின்று அதனை ஏற்று நின்றனர்.

இப்போராட்டத்தையும், அது தொடர்பான கசப்பான உண்மைகளையும் இக்கதைப் பாடல் தமிழக வரலாற்றில் கரிகாலன் சோழன் ஆண்ட காலப் பின்னணிக்கு எடுத்துச் செல்கிறது.

திருவிதாங்கூர் பின்புலத்தைச் சோழ நாட்டுப் பின்புலனாகவும், மன்னர்களின் செயலைச் சோழ மன்னன் கரிகாலனின் செயலாகவும் மாற்றி இக்கதைப் பாடல் உருவாக்க முயன்றுள்ளது. தம்மைத் தண்டித்த ஆளும் வர்க்கத்தை எதிர்த்துப் போராடி வெற்றிகாண முடியாத வலங்கையர்கள், அடிமை வேலைக்கு ஆட்படுத்தித் தண்டித்த கரிகாலனைக் காளி தண்டித்ததாகக் கூறி அமைதி காணுதலை இங்குக் காண்கிறோம்.

## 2. பொருளாதாரத்தில் முன்னேறிய நிலையில் தோன்றும் பாலியல் போராட்டங்கள்:

பொருளாதார நிலையில் வளர்ச்சி அடைந்த சூழலில் வலங்கையர்களின் வம்சாவழியில் வந்த வெங்கலராஜன் ஆளும் வர்க்கத்திற்கு மேலாகத் தனக்குச் சமூக அந்தஸ்து இருப்பதாகக் கருதுகிறான். ஆளும் வர்க்கத்தினர் பெண் கேட்டுத் தூது அனுப்பிய போது பெண் தர மறுக்கிறான். ஆளும் வர்க்கத்திற்கும், வெங்கலராஜனுக்கும் இடையே ஏற்பட்ட போராட்டம் சமூகப் போராட்டமாகப் பின்னர் பாலியல் முரண்பாடாகப் பரிணமித்து நிற்கிறது.

வலங்கையர்கள் பொருளாதார நிலையில் தாழ்ந்து நின்றபோது தன்மானம் தலை தூக்குகிறது. தன்மானத்தைக் காக்க மரண தண்டனையை ஏற்று நின்றமைக்குத் தன்மானம் தூண்டிய மனஉறுதி காரணம்.

பொருளாதார நிலையில் உயர்ந்து நின்றபோது அரசர்களைவிடத் தாங்கள் உயர்ந்தவர்கள் என்ற மேலாண்மை உணர்வு தலை நிமிருகிறது. அரசர்க்கும் கூடப் பெண் தர மறுத்தமைக்கு, இம்மேலாண்மை உணர்வே காரணம்.

## V. நிகழ்ச்சிகள் தொடர்பான மரபுகள்:

இம் மரபுகளை மூன்று வகைப்படுத்தலாம்.

1. புராண வரலாற்று நிகழ்ச்சிகளுக்கு முன்னுரிமை. 2. முன் நிகழ்ச்சிகளைத் தொகுத்துக் கூறும் மரபுக்கு முன்னுரிமை. 3. கதை நிகழ்ச்சிகளை இரண்டு வகைகளாகப் பகுத்து முற்பகுதியில் முன்னோர்களின் வரலாற்றிற்கும், பிற்பகுதியில் கதை மாந்தர்களின் வரலாற்றிற்கும் இடம் தருதல்.

## 1. புராண வரலாற்று நிகழ்ச்சிகளுக்கு முன்னுரிமை:

வெங்கலராஜன் கதை புராண நிகழ்ச்சி, வரலாற்று நிகழ்ச்சி, நிகழ்காலப் பிரச்சனைகள் ஆகிய மூன்றின் கலப்பு ஆகும்.

வெங்கலராஜனின் முன்னோர்களின் தாய்மார்கள் ஏழு பேரும் தெய்வலோகத்தின் கன்னியர்களாகக் காட்டப்படுகின்றனர். அவர்களுக்கும் வித்தியாதர முனிவருக்கும் பிறந்த குழந்தைகள் காளி தேவியால் வளர்க்கப்படுகின்றனர்.

"இந்திரனார் சொற்கேட்டு எழுந்திருந்து தேவரெல்லாம்
பூமிதனில் போயிரென்று புத்தி சொன்னார் தேவரெல்லாம்"

(வெங்கலராஜன் கதை - வரிகள் - 454-455)

என முனிவரையும் அவரது மனைவியரையும் பனைமரமாக ஆக்கிய நிகழ்ச்சியில் இந்திரன், தேவர்கள் பற்றிய பேச்சு இடம் பெறுகிறது.

வலங்கையர்கள் கரிகாலச் சோழர்களின் பகைவர்களை அழித்து உதவும் நிகழ்ச்சிகளில் சம்பரன் என்னும் அசுரனைப் பற்றிய பேச்சு இடம் பெறுகிறது. சம்பரன் என்னும் மாயாவியைக் கரிகாலச் சோழன் வலங்கையரின் உதவியுடன் வெட்டி தலை அறுத்த நிகழ்ச்சியில் புராணச் செய்தியும் வரலாற்றுச் செய்தியும் கலந்து ஊடாடுகின்றன.

## 2. நிகழ்ச்சிகளைத் தொகுத்துக் கூறும் மரபுக்கு முன்னுரிமை:

வெங்கலராஜன் கதைப் போக்கில், ஏழு இடங்களில் முன் நிகழ்ச்சிகளைத் தொகுத்துக் கூறும் மரபு இடம் பெறுகின்றது. வில்லிசை வாயிலாகக் கதையைக் கூறிக் கொண்டே போகும்போது இடையில் வந்து கேட்போரும் எளிதாகப் பின்பற்றுவதற்குத் துணை செய்வது இதன் நோக்கம்.

கரிகால் சோழனிடம் அவனது அமைச்சர் வலங்கையர்களின் புகழை நிரல்பட எடுத்துரைக்கிறார். வலங்கையர்கள் முற்காலத்தில் போர்த் தொழில் புரிந்து பெற்ற வெற்றிகள் இங்கு நினைவு கூறப்படுகின்றன.

1. வலங்கையர்கள் தாருகன் என்னும் அரக்கனைக் கொன்று கூளிகணம் என்னும் பேய்க் கணங்களுக்கு அரக்கனின் இரத்தத்தை உண்ணக் கொடுத்தமை.

2. சாமிக்கரன் விகடனையும் அவனது படைகளையும் தலைகளை வெட்டி அரசனின் அடையாளச் சின்னமாகிய கொடி விருதைப் பெற்றமை.

3. சம்பரன் என்னும் மாயாவி அரக்கனோடு வீரத்துடன் போரிட்டு அவனது தலையை வெட்டி வென்று வந்தமை; அவனது ஆறு மணிக் கேடயத்தைப் பறித்து வந்தமை.

4. அமந்திகன் என்னும் அரசனையும், அவனது ஆயத்தாரையும் மணி பல்லவத் தீவு சென்று, வென்று அவனது கேடயத்தைப் பறித்துக் கொண்டு வந்தமை.

5. வாணிகர்களின் வேண்டுதலை ஏற்று, கறையான் என்பவனை வென்றமை; நன்றி உணர்வு கொண்ட வாணிகர்கள் தங்களின் மகிழ்ச்சியை வெளிக்காட்ட வலங்கையர்களைத் தோளில் வைத்துச் சுமந்து வந்தமை; அதனால் 'தோளேறும் பெருமாள்' என்ற பட்டம் பெற்றமை.

6. சிவபெருமானிடம் வரம் பெற்றமை.

7. காளியிடம் வீரத்திற்காகப் பாராட்டு பெற்றமை.

இவற்றை எல்லாம் கரிகாலனின் அமைச்சர்கள் எடுத்துக் கூறுகின்றனர். வலங்கையர்களை அழித்தால் உலகில் மனுநீதி செத்துவிடும். ஆதலின் வலங்கையர்களைக் கொல்ல வேண்டாம் எனக் கரிகால் சோழனுக்கு அவனது அமைச்சர்கள் அறிவுரை கூறுகின்றனர்.

வெங்கலராஜனின் மக்கள் ஆறாட்டு என்னும் தீர்த்தவாரித் திருவிழா காணச் செல்லும் போது; ஐந்து வலங்கையர்கள் ஏழுநூறு பேராக வழி வழியாகப் பெருகிய நிகழ்ச்சியும், இரண்டு பேரைக் காவிரிக் கரையில் கரிகால் சோழன் கொலை செய்த நிகழ்ச்சியும் நினைவு கூரப்படுகின்றன.

வலங்கையரின் குலப்பெருமையை வெங்கலராஜன் கூறும்போது அவனின் முன்னோர்கள் பச்சை மூலிகையின் உதவியோடு இரும்பைப் பொன்னாக்கிய நிகழ்ச்சியும் அம்மூலியைப் பற்றி வெள்ளையர்களுக்குக் கற்றுக் கொடுத்ததைப் பாராட்டி வலங்கையரின் உருவத்தைத் தங்கக் காசில் பதித்து வெள்ளையர்கள் காசு வெளியிட்ட நிகழ்ச்சியையும் வஞ்சி மன்னன் திரைமுகத்தழகியைப் பெண் கேட்டபோது, பெண் தர மறுத்த வெங்கலராஜன் அவள் தலையை வெட்டி, கோட்டைக்கு வெளியே எறிந்த நிகழ்ச்சியையும் நினைவு கூர்தல் காண்கிறோம்.

இங்ஙனம் முன் நிகழ்ச்சிகளைத் தொகுத்துக் கூறும் முறை வெங்கலராஜன் கதையில் 821 முதல் 834, 944 முதல் 951, 1231 முதல் 1236 ஆகிய வரிகளிலும் காண முடிகிறது. கதை நிகழ்ச்சியின் முன் பகுதி வெங்கலராஜனின் முன்னோர்களைப் பற்றியது; பின் பகுதி வெங்கலராஜனைப் பற்றியது. இரண்டும் தனித்தனி இரு கதைப் பாடல்களாகவும் உலா வருவதையும் காண முடிகிறது.

## VI. இறப்பு தொடர்பான மரபுகள்:

வெங்கலராஜன் கதை ஓர் இறப்பு வகைக் கதை. கதையில் வரும் வெங்கலராஜன், வெங்கலராஜனின் முன்னோர்கள் இருவர், வெங்கலராஜனின் இளைய மகள் திரைமுகத்தழகி அவளது தமக்கை சங்குமுகத்தழகி ஆகிய அனைவரும் தன்மானம் காக்க இறந்து படுகின்றனர்.

## வெங்கலராஜன் கதைப் பாடலுக்கும் பிற கதைப் பாடல்களுக்கும் இடையேயான ஒற்றுமைகள்:

வெங்கலராஜனின் முன்னோர்கள் ஆன வலங்கையர் இருவர் யானையின் காவால் கொலை செய்யப்படுகின்றனர்.

வெங்கலராஜன், அவனது இளைய மகள் திரைமுகத்தழகி, மூத்த மகள் சங்கு முகத்தழகி ஆகிய மூவரும் தற்கொலை செய்து கொள்கின்றனர்.

தமிழில் வெளிவந்துள்ள பெரும்பாலான கதைப் பாடல்களில் - இறப்பு வகைக் கதைகளில், தலைமை மாந்தர்கள் கொலை செய்யப்படுவதாக அல்லது தற்கொலை செய்து கொள்வதாகக் காட்சிகள் இடம் பெறுவது போன்றே, வெங்கலராஜன் கதையிலும் கொலையும், தற்கொலையும் இடம் பெறுகின்றன.

கதை மாந்தர்கள் இறந்தபோது ஒப்பாரி வைத்தல் கதைப் பாடலின் மரபாக உள்ளது. வெங்கலராஜன் கதைப் பாடலிலும் இம்மரபு உள்ளது. இரும்பைப் பொன்னாக்கும் மூலிகை ரகசியத்தை வெள்ளையர்கள் அறிந்ததும், வெங்கலராஜனின் தாத்தா வெட்டப்பட்டுக் கொலை செய்யப்படுகிறார். அப்போது ஒப்பாரி இடம் பெறுகிறது. (வரிகள் 1210 முதல் 1223 முடிய)

எங்கே தான் நான் போவேன் என்னுடைய அப்பச்சரே
பொன்னை வகுத்தவரே புகழ்க்காசி இட்டவரே...!
வண்ணமுகம் காணாமல் மதிமயங்கி வாடுவனோ
பொன்னோ என் அப்பச்சரே புவிஇழந்து போனீரே!

(வெங்கலராஜன் கதை - வரிகள் 1215-16, 1221-23.)

மேற்குறித்த அனைத்து நிகழ்ச்சிகளும், கருப் பின்னல்களும் தமிழ்க் கதைப் பாடல்களுக்கும் வெங்கலராஜன் கதைப் பாடல்களுக்கும் இடையே காணப்படும் ஒற்றுமைக் கூறுகள் ஆகும்.

## வேற்றுமைக் கூறுகள்:

பெரும்பாலான கதைப் பாடல்களில் இறந்து போன கதை மாந்தர்கள் இறைவனிடம் வரம் பெறும் காட்சி இடம் பெறுகிறது. ஆனால், வெங்கலராஜன் கதையில் வெங்கலராஜனின் முன்னோர் ஆன வலங்கையர் இருவர், வெங்கலராஜன், சங்குமுகத்தழகி ஆகியோர் எந்த வரமும் பெற்றதாக இக்கதைப் பாடலில் குறிப்பிடப்படவில்லை.

தமிழில் அமைந்துள்ள பெரும்பாலான கதைப் பாடல்களில் இறந்துபட்ட கதை மாந்தர்கள் தங்களின் இறப்புக்குக் காரணமானவர்களைப் பழி வாங்கும் நிகழ்ச்சி இடம் பெறுதல் காண்கிறோம். ஆனால் வெங்கலராஜன் கதைப் பாடலில் சங்கு முகத்து அழகியைத் தவிர, வேறு யாரும் பழி வாங்குவதாகக் காட்டப்படவில்லை. இறப்புக்குப் பின்னர் சங்குமுகத்தழகி மட்டுமே தன் இறப்புக்குக் காரணமான குறும்பூர் மன்னனைப் பழி வாங்குகிறாள்.

திரைமுகத்தழகி தனது இறப்புக்குப் பின்னர் வரம் பெறுவதாக வெங்கலராஜன் கதை குறிப்பிடுகிறது. ஆனால் அவள் தன் இறப்புக்குக் காரணமானவர்களைப் பழிவாங்கவில்லை.

இறப்பு வகைக் கதைப் பாடல்களில் இறப்பு, வரம் பெறல், பழிவாங்கல், தெய்வமாதல் ஆகிய கதைக் கூறுகள் இடம் பெறுதல் மரபாக உள்ளது. ஆனால் வெங்கலராஜன் கதையில் இக்கதைக் கூறுகள் நெகிழ்வுத் தன்மை கொண்டே விளங்குகின்றன.

பெரும்பாலான கதைப்பாடல்களில் பிள்ளையில்லாதிருத்தல், பிள்ளை வரம் வேண்டிக் கோயில் செல்லுதல், கருவுற்ற பெண்ணின் பத்துமாத மேனி வர்ணனை, வேதனையுடன் பிள்ளை பெறுதல் ஆகிய கதைக் கூறுகள் இடம் பெறுதல் மரபாக உள்ளது. ஆனால் வெங்கலராஜன் கதையில் இக்கதைக் கூறுகள் இடம் பெறவில்லை. இவை இடம் பெறாமைக்கு வெங்கலராஜனின் முன்னோர்களின் பிறப்பு, தெய்வக் கன்னியர் ஆகிய புராண மாந்தர்களோடு தொடர்பு படுத்தப்பட்டமை காரணம் ஆகலாம்.

தமிழ்க் கதைப் பாடல்களில் தலைமை மாந்தர்களின் பிறப்பைப் பற்றிக் கூறும் போது, பிறப்புக்குக் காரணமாக இருக்கும் ஆண்கள் தேவர்களாகவும், பெண்கள் மண் உலகத்தில் பிறந்தவர்களாகவும் காட்டப்படுதல் மரபாக உள்ளது. ஆனால், வெங்கலராஜன் கதையில் வெங்கலராஜனின் முன்னோர்களின் பிறப்புக்குக் காரணமாக இருக்கும் ஆண் மண்ணுலகில் வாழும் முனிவர்; பெண்கள் வானுலகில் வாழும் தெய்வ கன்னியர்கள் என, பிற கதைப் பாடல்களில் இருந்து தலைமை மாந்தர்களின் பிறப்புச் செய்தி முரண்பட்டு அமைந்துள்ளது. இவை தமிழ்க் கதைப் பாடல்களுக்கும் வெங்கலராஜன் கதைப் பாடல்களுக்கும் இடையே காணப்படும் வேற்றுமைக் கூறுகள் ஆகும்.

பாடம்-3

# வெங்கலராஜன் கதையில் பாத்திரப் படைப்புகள்

வெங்கலராஜன் கதை ஓர் எளிய, ஆற்றொழுக்கான நீரோடை போன்று அமைந்துள்ள கதை. அதிகக் கதைத் திருப்பங்களுக்கும் கருப் பின்னல்களுக்கும் இக் கதையில் அதிக வாய்ப்பு அளிக்கப்படவில்லை. ஆதலின் பாத்திரப் படைப்பு முறையில் அதற்குரிய உத்திகள் அதிகமாகக் கையாளப்படவில்லை. கதைக்குத் தரப்பட்ட முக்கியத்துவம், பாத்திரப் படைப்பின் நுட்பங்களை நளினமாக முன் வைப்பதற்குத் தரப்படவில்லை.

## பாத்திரங்களின் வகைகள்:

வெங்கலராஜன் கதையில் இடம் பெறும் பாத்திரங்களை அவர்களின் பண்பு, செயல்பாடுகள், நோக்கம், ஆகியவற்றை மையமாகக் கொண்டு நான்கு வகைகளாகப் பகுக்கலாம்.

1. தலைமைப் பாத்திரங்கள்
2. பெண் பாத்திரங்கள்
3. எதிர்நிலைப் பாத்திரங்கள்
4. துணைநிலைப் பாத்திரங்கள்

## தலைமைப் பாத்திரங்கள்:

தலைமைப் பாத்திரங்களில் வெங்கலராஜனின் முன்னோர்கள், வெங்கலராஜன் ஆகியோர் சிறப்பிடம் பெறுகின்றனர்.

## பெண் பாத்திரங்கள்:

பெண் பாத்திரங்களில் திரைமுகத்தழகி, சங்குமுகத்தழகி ஆகியோர் சிறப்பிடம் பெறுகின்றனர்.

## எதிர்நிலைப் பாத்திரங்கள் - இருவகையினர்:

1. கேடு விளைவித்தவர்கள்
2. சதித் திட்டம் தீட்டியவர்கள்

எதிர் நிலைப் பாத்திரங்களில் வெங்கலராஜனின் முன்னோர்களுக்கும் வெங்கலராஜனுக்கும் வெங்கலராஜனின் பெண் மக்கள் இருவருக்கும் கேடு விளைவிக்க முயன்ற, கேடு விளைவிக்கச் சதித் திட்டம் தீட்டிய மாந்தர்கள் எதிர்நிலைப் பாத்திரங்களில் சிறப்பிடம் பெறுகின்றனர்.

## கேடு விளைவித்தவர்கள்:

கேடு விளைவிக்க முயன்றவர்களுள் அரசனின் ஆணைக்கு அடங்கி நடக்காததால் வலங்கையரின் முன்னோர்களுக்குக் கொலைத் தண்டனை அளித்த கரிகாலச் சோழன் முதல் இடம் பெறுகிறான்.

வெங்கலராஜன் மகள் திரைமுகத்தழகியை மணம் செய்ய விரும்பினான் வஞ்சி மன்னன். பெண் தர மறுத்த வெங்கலராஜன் மேல், போர் தொடுத்துத் திரைமுகத்தழகியின் சாவுக்கு அவன் காரணமாக விளங்குகிறான்; அதனால் வஞ்சி மன்னன் எதிர்நிலைப் பாத்திரங்களுள் சிறப்பிடம் பெறுகிறான்.

## சதித் திட்டம் தீட்டியவர்கள்:

வெங்கலராஜனின் இன்னொரு மகள் சங்குமுகத்தழகியை மணம் செய்ய விரும்பினான் நளராஜன். பெண் தர மறுத்த வெங்கலராஜன் மேல் போர் தொடுக்காமல், அவனது மகளின் மேல் களவுக் குற்றம் சாட்டி, அவளது சாவுக்குக் காரணமாக அவன் விளங்குகிறான். அதனால் நளராஜ மன்னன் எதிர்நிலைப் பாத்திரங்களுள் சிறப்பிடம் பெறுகிறான்.

## துணை நிலைப் பாத்திரங்கள்:

வெங்கலராஜனின் கதை ஓட்டத்திற்குத் துணை நிற்கும் பாத்திரங்களை அவற்றின் வகைமையை மையமாகக் கொண்டு ஐந்து வகைப்படுத்தலாம்.

1. தெய்வ நிலையில் அமைந்த பாத்திரங்கள்
2. மனித நிலையில் அமைந்த பாத்திரங்கள்
3. மிருக நிலையில் அமைந்த பாத்திரம்
4. பூதகணங்கள் நிலையில் அமைந்த பாத்திரங்கள் உயர்திணையான துஷ்ட தெய்வம், அஃறிணை வடிவம் கொண்டு, பாத்திரத்தின் செயல்பாடுகளுக்கு உரிய மதிப்பு பெறல்; மாங்கனி வடிவம் கொள்ளுதல்.

## தெய்வநிலையில் அமைந்த பாத்திரங்கள்:

தெய்வ நிலையில் அமைந்த பாத்திரங்களுள் சிவன், காளி தெய்வ கன்னியர் ஆகியோர் சிறப்பிடம் பெறுகின்றனர்.

## மனித நிலையில் அமைந்த பாத்திரங்கள்:

மனித நிலையில் அமைந்த பாத்திரங்களுள் கரிகால் சோழனின் அமைச்சர்கள், வஞ்சி மன்னன், நளராஜன் ஆகிய மன்னர்களின் தூதுவர்கள், வெங்கலராஜனின் முன்னோர்களிடம் உதவி பெற்ற வாணிகர்கள், வித்தியாதர முனிவர் ஆகியோர் சிறப்பிடம் பெறுகின்றனர். இவர்கள் தவிர ஏழு தெய்வக் கன்னியர்கள், கற்பரசியாக வரும் தச்சனின் மனைவி, காளியால் பனைமரம் ஆக்கப்பட்ட முனிவரின் மனைவி, வெங்கலராஜனின் தாய் பொன்னம்மை ஆகிய பெண் பாத்திரங்களும் உள்ளனர்.

## மிருக நிலையில் அமைந்த பாத்திரம்:

மிருக நிலையில் அமைந்த பாத்திரமாக வலங்கையரின் முன்னோர்களைக் காலால் இடறிய யானை சிறப்பிடம் பெறுகிறது. அது பேசும் பாத்திரம் இல்லை. ஆனால், வலங்கையர்களின் முன்னோர்களின் இறப்புக்குக் காரணமாக விளங்கி, கதைத் திருப்பத்திற்கு விதை ஊன்றிப் பலராலும் பேசப்படும் பாத்திரம்.

## பூத கணங்கள் நிலையில் அமைந்த பாத்திரங்கள்:

பூத கணங்கள் நிலையில் அமைந்த பாத்திரங்களுள் செங்கிடாய்க்காரன், தாருகாசுரன், சம்பரன் ஆகியோர் சிறப்பிடம் பெறுகின்றனர். இவர்கள் தலைமைப் பாத்திரங்களுக்குக் கேடு விளைவித்து அல்லது சதித் திட்டங்களைத் தீட்டி, கதை ஓட்டத்தைத் திசை திருப்பியவர்கள்.

## உயர்திணையாகக் கருதத்தக்க துஷ்ட தெய்வம் அஃறிணை வடிவம் கொள்ளுதல்:

அஃறிணையாக விளங்கும் மாங்கனி உண்மையில் மாங்கனி அன்று. சங்குமுகத்தழகியின் மேல் களவுக் குற்றம் சாட்டுவதற்காகச் செங்கிடாய்க்காரன் உருமாறிய வடிவம்.

செங்கிடாய்க்காரன் மாங்கனி வடிவம் எடுத்துச் சங்கு முகத்தழகியின் இறப்புக்குக் காரணமாக விளங்குதலின் மாங்கனியும் இக்கதை ஓட்டத்தில் முக்கிய இடம் வகிக்கிறது.

செங்கிடாய்க்காரனின் சதித் திட்டத்தின் கொடிய வடிவமே அந்த மாங்கனி. சங்க இலக்கியத்தில், நன்னனின் காவல் மரமாகிய மாமரத்தின் மாங்கனி, அதைப் பறித்த ஒரு பெண்ணின் சாவுக்குக் காரணமாக அமைந்தது போல, இங்கும் செங்கிடாய்க்காரனின் வடிவத்தை மறைத்து நின்ற மாங்கனி, சங்கு முகத்தழகியின் சாவிற்கும் தன் மகள் களவுக் குற்றம் சாட்டப்பட்டதால் அவமானம் தாங்காமல் இறந்த வெங்கலராஜனின் சாவுக்கும் வித்திடுதல் காண்கிறோம்.

## தலைமைப் பாத்திரப் படைப்புக்கள்:

வெங்கலராஜன் கதை இரு கூறுகளைக் கொண்டது.

1. வெங்கலராஜனின் பிறப்புக்கு முந்தியது.
2. வெங்கலராஜனின் பிறப்புக்குப் பிந்தியது.

வெங்கலராஜன் வலங்கையர் எனப்படும் நாடார் இனத் தலைவனாகச் சித்திரிக்கப்படுகிறான். கதை முழுவதிலும் நாடார் என்ற சொல் பயன்படுத்தப்பட வில்லை. அதற்குப் பதிலாக வலங்கையர்கள், சான்றோர்கள், காரணவர், பரிபாலகர் ஆகிய சொற்கள் பயன்படுத்தப்படுகின்றன.

வலங்கையர்கள், இடங்கையர்களைக் காட்டிலும் சாதியில் உயர்ந்தவர்கள் என்பதை எடுத்துரைக்க அமைந்த சொல் ஆகும். அறிஞர், படை வீரர் ஆகிய பொருள்படும் சான்றோர் என்னும் பெயர், அவர்களின் அறிவையும், வீரத்தையும் எடுத்துரைக்க அமைந்த சொல் ஆகும். சமுதாயத் தலைவர், அல்லது சமுதாய முன்னேற்றத்திற்குக் காரணமாக விளங்குபவர் என்னும் பொருள்படும் பெயர் அவர்களின் சமுதாய மேலாண்மையை எடுத்துரைக்க அமைந்த சொல் ஆகும். 'மக்களைக் காப்பாற்றும் மன்னன்' என்பது பரிபாலகம் என்ற சொல்லின் பொருளாகும்.

உயர்ந்த சாதியால், சிறந்த அறிவால், நாட்டைக் காக்கும் வீரத்தால், சமுதாய அந்தஸ்தால், தலைமைப் பொறுப்பால், காப்பாற்றும் பண்பால் என எல்லா வழிகளிலும் எல்லா நிலைகளிலும் பிறப்பாலும் குலத்தாலும் உயர்ந்தவர்கள் என்பதை இப் பெயர்கள் விளக்கி நிற்றலை அறிய முடிகிறது.

## வெங்கலராஜனின் பிறப்புக்கு முந்தியது:

வெங்கலராஜனின் பிறப்பிற்கு முன் விளங்கிய வலங்கையர்கள் பொருளாதாரத்தில் பின் தங்கி இருந்தனர். அவர்கள் போர்த் தொழில், பனைத் தொழில், வாணிகம் ஆகியத் தொழில்களைச் செய்து வந்தனர். கரிகால் சோழனின் படையில் சேர்ந்து எண்ணற்ற

வெற்றிகளைத் தேடித் தந்தனர். அவர்கள் தந்த வெற்றியால் மகிழ்ந்த கரிகால் சோழன் 'அமந்திக ராஜன்' என்ற பட்டத்தை வலங்கையர்க்கு அளித்து, அவர்களைப் பெருமைப் படுத்தினான். காளியுடன் இணைந்து தாருகாசுரன் என்ற கொடிய அரக்கனை வலங்கையர்கள் அழித்தனர். அதனால் மனம் மகிழ்ந்த காளி, 'ஜகவீர ராஜன்' என்ற சிறப்புப் பட்டத்தை வலங்கையர்களுக்கு அளித்தாள். வலங்கையர்கள் வாணிகர்களுக்கு நேர்ந்த இன்னல்களைக் களைந்தனர். அதனால் மனம் மகிழ்ந்த வாணிகர்கள் வலங்கையர்களைத் தோள் மேல் சுமந்து சென்றனர். அதன் காரணமாகத் 'தோளேறும் பெருமாள்' என்ற பட்டம் வலங்கையர்களுக்கு அளிக்கப்பட்டது.

கொள்கைப் பிடிப்பில் வெற்றி கண்டமைக்காக 'வீரமாத்தாண்டன்' என்னும் பட்டம் சோழ மன்னனால் அவர்களுக்கு அளிக்கப்படுகிறது.

'ஜகவீர ராஜன்', என்ற பட்டம் தெய்வத்தால் அளிக்கப்பட்ட பட்டம்; 'அமந்திக ராஜன்', 'வீரமார்த்தாண்டன்' என்ற பட்டங்கள் அரசனால் அளிக்கப்பட்ட பட்டங்கள். 'தோளேறும் பெருமாள்' என்ற பட்டம் வாணிகர்களால் அளிக்கப்பட்ட பட்டம். இப் பட்டங்கள் இவர்களின் குலப் பெருமையை நிலைநாட்ட அளிக்கப்பட்ட பட்டங்கள்; பல்வேறு கோணங்களில் இருந்தும் வலங்கையரின் சமூகத்தினருக்குக் கிடைத்த சமுதாய அங்கீகாரங்கள்.

போர்த் தொழிலில் சிறந்து விளங்கிய வலங்கையர்கள் கரிகால் சோழனால், ஒரு முறை உடைந்த அணையை அடைப்பதற்கு மண் சுமக்குமாறு ஏவப்பட்டனர். ஆனால் அத் தொழிலைச் செய்ய அவர்கள் மறுத்து விட்டனர். தங்கள் தொழிலை விட இழிந்த தொழிலைச் செய்யப் பிறந்தவர்கள் அல்லர் என்ற மன உறுதியுடன் தங்கள் கருத்தை அரசனுக்குச் சொல்லிவிடுகின்றனர். கதையின் பல இடங்களில் கவிக் கூற்றாக வீரச்சான்றோர்கள் என்னும் பொருள்படும் 'வண்டச் சான்றோர்' என்ற சொல் வலங்கையரைக் குறிக்கப் பயன்படுத்தப்படுகிறது.

தாங்கள் உயர்ந்த போர்த் தொழில் செய்யும் சத்திரியர்கள் என்பதை அவர்களின் மன உறுதி வெளிப்படுத்தி நிற்கிறது; இழி தொழில் செய்ய மாட்டோம் என்பதை அறிவிக்கும் முகமாக, மன உறுதியை வெளிப்படுத்தும் சொற்கள் பெய்துரைக்கப்படுகின்றன.

மண் சுமக்க மறுத்த வலங்கையரின் கூற்றால் சினம் கொண்ட கரிகாலச் சோழன் இரு வலங்கையர்களை யானையின் காலில் இட்டு, தலையை இடறுமாறு கூறி அவர்களுக்கு மரண தண்டனை அளிக்கிறான்.

மன்னனின் ஆணையைக் கேள்வியுற்ற வலங்கையர்கள்

"தந்தி தன்னை ஏவினங்கள் தலையெல்லாம் இடறிடினும்
உந்தன் திரு வாணை மன்னா ஒருநாளுங் குட்டைதொடோம்".

(வெங்கலராஜன் கதை, வரிகள் - 777-778.)

என அவர்கள் தங்களின் மன உறுதியை, வன்மையுடன் தெளிவு படுத்துகின்றனர். 'புகழ் எனின் உயிரையும் கொடுக்கும்' வீரயுகப் பண்பை, வலங்கையர்களிடம் இங்குக் காண்கிறோம்.

பொருளாதார நிலையில் பின்தங்கிய வெங்கலராஜனின் முன்னோர்கள், புகழுக்காகவும் தன் மானத்திற்காகவும் கொள்கைப் பிடிப்பிற்காகவும் உயிரையும் விடத் துணிபவர்கள் என்பதை இவை நிறுவி நிற்கின்றன. வலங்கையர்கள் அரச வம்சத்தினர் அல்லது அரச வம்சத்துக்கு இணையான போர்த் தொழில் புரியும் சத்திரியர்கள் என்ற அவர்களின் மேலாண்மைச் சிந்தனை, இழி தொழில் செய்ய மறுத்தமைக்குக் காரணம் எனலாம்.

## பெண் பாத்திரப் படைப்புக்கள்:

பொருளாதாரத்தில் முன்னேறிய நிலையில், அவர்களது மனநிலையில் மாற்றம் காணப்படுகிறது. சமூகக் கட்டமைப்பில் உயர்ந்து நிற்கும் தங்களது செம்மார்ந்த மேலாண்மையை நிறுவும் முயற்சியில் இக் கதைப் பாடலின் தலைமைக் கதை மாந்தர்கள் ஈடுபடுகின்றனர்.

மறம் எனப்படும் 'மகட்பாற்காஞ்சி' என்னும் பொருளமைதியைக் கொண்டு இச் செய்திகள் விரித்துரைக்கப்படுகின்றன.

வெங்கலராஜன் ஆளும் அரசருடன் கொள்ளும் பாலியல் முரண்பாடுகள் பெண் பாத்திரப் படைப்புக்களை மையமிட்டு அமைதல் காண்கிறோம்.

வெங்கலராஜன் கதைப் பாடலில் இடம் பெறும் மொத்தத் தலைமைப் பெண் பாத்திரப் படைப்புக்கள் இரண்டு.

1. திரைமுகத்தழகி
2. சங்குமுகத்தழகி

மேற்குறித்த இரு பெண்களும் வெங்கலராஜன் பெற்ற பெண் குழந்தைகள் ஆவர். இவ்விருவருள் மூத்தவள் சங்குமுகத்தழகி. இளையவள் திரைமுகத்தழகி.

"பூவைசங்கு முகத்தழகி ஏதோ சொல்வாள்
அருமையுடனே என்னுடன் பிறந்த தங்கை
அவளை யறுத்துநீர் கோட்டைக்கு அப்பால் எறிந்தீர்
ஐயாவே தங்கைதனையு மிழந்ததோமே நாமன்

(வெங்கலராஜன் கதை - வரிகள் - 1693-1696.)

ஆனால் நூலின் முன்னுரையில் பெண்களின் இந்த உறவு முறை மாற்றிக் குறிப்பிடப் பட்டுள்ளது. (முன்னுரை பக்கம் - XXVII)

வெங்கலராஜன் வெள்ளையர்களின் கொடுமைக்கு அஞ்சி நாஞ்சில் நாட்டிற்கு வருகிறான். அங்கு மணவைப் பதியை அடுத்த சாமிக் காட்டுவிளை என்ற இடத்தில் வெங்கலக் கோட்டையிட்டுத் தங்கியிருக்கின்றான். ஒருமுறை அவனது இரு பெண்களும் பறக்கை நகரில் மதுசூதனப் பெருமாளுக்கு நடைபெற்ற ஆறாட்டு விழாவைக் காணச் செல்கின்றனர்.

அங்கு அப் பெண்களை வஞ்சி மன்னன் காண்கிறான். அம்மகளிரின் அழகைக் கண்ட மன்னன் அவர்களை மணக்க விரும்புகிறான்.

வெங்கலராஜன் தனது குலப் பெருமையைக் கூறி வஞ்சி மன்னனுக்குத் தனது பெண் திரைமுகத்து அழகியை மணம் செய்து தர மறுக்கிறான்.

இதனால் கடும் சினம் கொண்ட வஞ்சி மன்னன் வெங்கலராஜன் கோட்டைமீது படையெடுக்கிறான்.

வெங்கலராஜன் படைபலம் இல்லாதவன். ஆதலின் தோல்வி பெறும் வாய்ப்பு அவனுக்கே அதிகமாக இருந்தது. இச்சூழலில் வெங்கலராஜன் மகள் திரைமுகத்து அழகி இக்கதைப் பாடலில் தந்தையோடு உரையாடுகிறாள்.

ஆறாட்டு எனப்படும் தீர்த்தவாரித் திருவிழாவை காணச் செல்ல விரும்பிய தனது மகள் திரை முகத்து அழகிக்கு அங்குச் செல்ல வேண்டாம் என வெங்கலராஜன் அறிவுரை கூறியிருந்தான்.

"ஆறாட்டு காணப்போற அழகுதிரை முகத்தழகி
ஆறாட்டு காணவேண்டாம் அனர்த்தம்வரும் என்மகளே"

தந்தை வெங்கலராஜன் திருவிழாவின் போது அனர்த்தம் வரும் வழிகளை விளக்கி நின்றான்.

"ஏராரும் பூவுலகில் மக்கா எல்லோரும் அதில் வருவார்
ஆருபிள்ளை ஆர்எனவே அல்லோரும் பார்த்திடுவார்
வாரார்பூங் குழலாளே வல்வினையை விளையாதே
ஈழத்து நாடுவிட்டு இங்கேவந்தோ மென்மகளே."

(வெங்கலராஜன் கதை - வரிகள் - 1470-1473)

அரசரின் வேண்டுகோளும் வற்புறுத்துதலும் திரைமுகத் தழகியின் முழுக் கவனத்தையும் ஈர்க்கவில்லை. அதனால் வெங்கலராஜன் தன் மகளைப் பின்வருமாறு வற்புறுத்தி வேண்டத் தொடங்கினான்.

"நாடாளும் ராஜாவும் நல்லமகளே அதில்வருவார்
சாடாதே என்மகளே சல்லியத்தை விளையாதே
புத்திசொன்னால் கேள்மகளே பொல்லாப்பு வருத்தாதே"

(வெங்கலராஜன் கதை - வரிகள் - 1475-1477)

ஆறாட்டு கண்டு வந்ததன் விளைவு அரசனுக்கும் வெங்கலராஜனுக்கும் போராக உருவெடுத்தது. வஞ்சியின்

"மன்னவரும் படையும்வந்து வளைத்தார் கோட்டைதனை"

இச்சூழலில் திரைமுகத்து அழகி தன் கருத்தை முன்வைக்கிறாள்.

"என்னுடைய அப்பச்சரே இலங்கும்வெங்கல ராஜாவே
பெண்ணிருக்கும் இடமதிலே பிழைகேடு வருமெனவே
கண்மணியே அப்பச்சரே காசினியில் பழமொழி"

(வெங்கலராஜன் கதை - வரிகள் - 1629-1631)

பழமொழியை எடுத்துரைத்த திரைமுகத்தழகி விதியின் ஆற்றலையும் எடுத்துரைக்கிறாள்.

"வாட்டமில்லா அப்பச்சரே வரும்விதிக்கு விலக்குமுண்டோ
மலங்காதே ராஜாவே வரும்விதிராத் தங்காது."

(வெங்கலராஜன் கதை வரிகள் - 1633, 1640)

வருவது வந்தே தீரும். வரும் விதியை விலக்க யாராலும் முடியாது. வந்து விட்ட விதியை, "ஒருநாள் இரவு மட்டும் தாமதமாக வா" என்று வேண்டினாலும் அது நடக்காது எனத் திரைமுகத்தழகி தன் தந்தைக்கு ஆறுதல் கூறுகிறாள்.

போரையும் போரால் விளையும் தீமைகளையும் தவிர்க்க வழி ஒன்றும் கூறுகிறாள். இப்போது நேர்ந்துள்ள எல்லாப் பிரச்சனைகளுக்கும் தான் தான் காரணம் ஆதலின், "என் தலையை அறுத்து எறிந்து விடுங்கள்" எனத் தந்தை வெங்கலராஜனை வேண்டுகிறாள்.

தன் மகளின் தலையை அறுத்தால் ஊரார் வசை சொல்லுவார்கள் என வெங்கலராஜன் தயங்குகிறான். அதற்குத் திரைமுகத்தழகி ஆறுதலும் அறிவுரையும் தருகிறாள்.

"என் மரணம் ஒன்றே இப்பிரச்சனை தீர வழி; நான் நீங்கள் விளைவித்த பயிர். நீங்கள் இட்ட பயிரை நீங்கள் அறுப்பதற்கு உரிமை இருக்கிறது. இதில் எந்த அவமானமும் இல்லை அவப்பெயரும் இல்லை" எனத் தன் மரணத்திற்கு வழி கூறுகிறாள்.

பெற்ற மகளின் தலையை அறுப்பது பிரம்மன் இட்ட கட்டளை போலும் என எண்ணி, வெங்கலராஜன் திரைமுகத்தழகியின் தலையை அறுத்துக் கோட்டைக்கு வெளியே எறிகிறான்.

திரைமுகத்தழகியின் இந்த அறிவுரை வலங்கையர் குலத்தவரின் தன்மானத்தையும் கௌரவத்தையும் காக்க எடுத்த முயற்சி எனத் துணியலாம்.

இதே போன்று சங்குமுகத்தழகியின் கூந்தல் அழகில் மனத்தைப் பறிகொடுத்த நளராஜன் என்னும் மன்னன் வெங்கலராஜனிடம் பெண் கேட்டுத் தூது அனுப்புகிறான்.

வெங்கலராஜன் தனது குல உயர்வைக் கூறி, பெண் தர மறுக்கிறான். அவமானம் அடைந்த நளராஜன் சங்குமுகத்தழகியின் மேல் மாங்கனி திருடியதாகக் களவுக் குற்றம் சாட்டுகிறான்.

சங்குமுகத்தழகியின் குடத்திலிருந்து மாங்கனி எடுக்கப்பட்ட போது சங்குமுகத்து அழகி பதறுகிறாள். அவளது கண்கள் கலங்குகின்றன.

"அருணஞ்சிவன் கற்பனையோ அயன்விதித்த படிதானோ
ஏதுவிதியோ அறியோம் என்னுடைய தோழியரே"

(வெங்கலராஜன் கதை வரிகள் - 2206-2207)

"யாருடைய கொடுவினையோ, யாரேனும் பில்லி, சூனியம், செய்வினைகள் ஆகியன வைத்திருப்பார்களோ" என மனம் உடைந்து கூறினாள்.

"நாட்டையர சாளுகின்ற நளராசன் செய்வினையோ
நான்முகனார் விதிப்படியோ நாடெல்லாம் நாமலைய
அறமெலிந்து சங்குமுகத்தழகி அகமெலிந்து முகம்வாடி
வெறிகொண்ட பித்தரைப்போல் வேறுமுகமாய் இருந்தாள்."

(வெங்கலராஜன் கதை, வரிகள் - 2228-2231)

தன் மீது பழி சுமத்திய நளராஜன் இழி மொழிகளால் சங்குமுகத்தழகியை வசைபாடி நின்றான்.

"சுனியதனைக் களவாண்ட கள்ளிதனைப் பிடியுமென்றார்"

மன்னன் சங்குமுகத்தழகியைக் கைது செய்யுமாறு ஆணையிட்டான். இதனைக் கேள்வியுற்ற வெங்கலராஜன் அவமானம் தாங்காமல் தன் கோட்டைக்குள்ளே இருந்த அனைவரோடும் தற்கொலை செய்து கொண்டான்.

சங்குமுகத்தழகி சோகத்தின் உச்சத்தில் நின்று நளராஜனை வசைபாடி சபிக்கத் தொடங்கினாள்.

"தேசமதில் உனைப்போலே சிரத்தைகெட்ட பேர்களில்லை
நாசம்வருங் காலமதில் நல்லறிவு உனக்கில்லையே
மோசம்வரும் வேளையிலே முட்டிக்குனிந் தாயில்லையே
பெண்டுகளுக்கு ஏறாத புத்தியோ மூழுமூகடா
வண்டுமது உண்ணுவதை மண்டுகம் பொசித்திடுமோ"

(வெங்கலராஜன் கதை, வரிகள் - 2318-2322)

நளராஜன் சங்குமுகத்து அழகியை மானபங்கம் செய்து விடுவதாகவும் அழகிய கூந்தலை அறுத்து எறிந்து விடுவதாகவும் அவமானப் படுத்திப் பேசினான். சங்குமுகத்தழகி பொங்கி எழுகிறாள்.

"அற்பத்திலே நீமுடிவாய் அரும்பாவி உன்னாடு
மண்மாரி பொழியுமடா மாபாவி நளராஜா"

(வெங்கலராஜன் கதை, வரிகள் - 2352, 2353)

தன்னுடைய தந்தையும் உறவினர்களும் இறந்ததற்கு நளராஜனே காரணம் எனக் குற்றம் சாட்டுகிறாள்.

"உன்னாலே என்தகப்பன் உடன்பிறந்த சுத்தமெல்லாம்
வண்ணமுடன் என்னாலே மாண்டாரே எல்லோரும்"

(வெங்கலராஜன் கதை, வரிகள் - 2357-2358)

நளராஜனுக்கும் அவனது நாட்டுக்கும் கேடு வரும் என எச்சரிக்கிறாள். பெண்ணால் நாடுகள் அழிந்ததைச் சுட்டிக் காட்டுகிறாள்.

"போம்காலமோ உனக்குப் பிழைகேடு வந்ததடா
முன்னிருந்தோர் பெண்ணாலே முடிந்ததுவும் அறியாயோ
உன்னாலே நீமுடிவாய் உன்வங்கிசமும் மிகமுடியும்"

கண்ணகி காரணமாகப் பாண்டிய நாடு தீக்கு இரையானதையும் சீதைக்குத் தீங்கு இளைத்தன் காரணமாக இராவணனும் இலங்கையும் நாசம் அடைந்ததையும் பாஞ்சாலியை மானபங்கம் செய்ததன் காரணமாகக் கௌரவர்கள் அழிந்து போனதையும் சங்குமுகத்தழகி இங்குக் குறிப்பால் உணர்த்தி நிற்றலைக் காண்கிறோம்.

"உன் நாடு கூகை அடையும் குட்டிச் சுவராகும். நீ செய்த தீவினை உன்னை வந்து சூழும். உன் அரண்மனையில் வௌவால்கள் அடையும். உன் வாழ்க்கையே குன்றிப் போகும். நீ இறந்து போவாய்" எனச் சாபம் இடுகிறாள்.

"கூகை அடையுதடா குட்டிச்சுவ ராகுதடா
மாய்கையால் மாயவினை வந்துஉன்னைச் சூழுதடா
வௌவால் அடையுதடா வாழ்வுகுன்றி நீமுடிவாய்"

(வெங்கலராஜன் கதை, வரிக்கள் - 2354-2356)

தான் இட்ட சாபத்தை நிறைவேற்ற தெய்வங்களை வேண்டி நிற்கிறாள்.

"அன்றுபுரம் எரித்தவனே அம்மையுமை பங்காளா
படைத்த பிரமாவே பார்பதியே அறியலையோ
குடையாய் மலையெடுத்த கொற்றவரே அறியலையோ
எங்கள்குலத் தெய்வாரே இயல்முனியே அறியலையோ
மங்கைபத்திர காளியம்மா மாதாவே அறிந்திலையோ"

(வெங்கலராஜன் கதை, வரிகள் - 2366-2370)

என எல்லா தெய்வங்களிடமும் முறை இடுகிறாள். சங்குமுகத்தழகியின் வேண்டுதலின்படி நளராஜனின் நாடு அழிகிறது. மண் மாரி பொழிந்து நளராஜனின் கோட்டையும் மண் மூடிப் போகிறது. இறுதியில் சங்குமுகத்தழகியும் இறந்து விடுகிறாள்.

இக்கதைப் பாடலில் சங்குமுகத்தழகி குற்றம் செய்யாமலேயே தண்டிக்கப்படுகிறாள். எதிர்நிலைப் பாத்திரங்களின் சதித் திட்டங்களினால் அவமானத்துக்கு உள்ளாகிறாள். ஆதலின், தன்னை இழிவுபடுத்தி நின்ற நளராஜனை தெய்வங்களின் துணையோடு பழி வாங்குகிறாள்.

திரைமுகத்தழகி, சங்குமுகத்தழகி ஆகிய தலைமைப் பெண் பாத்திரங்கள் அல்லாமல் சில துணைநிலைப் பெண் பாத்திரங்களும் இக்கதைப் பாடலில் இடம் பெறுகின்றன. அப்பாத்திரங்கள் வருமாறு:

1. வித்தியாதர முனிவரின் மனைவியாக வரும் ஏழு தெய்வக் கன்னியர்.
2. தன் கற்பாற்றலால் மழை பொழிய வைத்த தச்சனின் மனைவி.
3. காளி தேவியால் பனைமரம் ஆக்கப்பட்ட ஒரு முனிவரின் மனைவி.
4. வெங்கலராஜனின் தாய் பொன்னம்மை.

இவர்கள் துணைநிலைப் பாத்திரப்படைப்பு என்னும் தலைப்பில் விளக்கப்பட்டுள்ளனர்.

## எதிர்நிலைப் பாத்திரப் படைப்புகள்:

வலங்கையர்களின் தன் மானத்திற்கும் மேலாண்மைக்கும் சவாலாக விளங்கும் மூன்று அரசர்கள் - கரிகால் சோழன், வஞ்சி மன்னன், நளராஜன் ஆகியோர் இக்கதைப் பாடலின் எதிர்நிலைப் பாத்திரங்கள் ஆவர்.

இவர்களுள் கரிகால் சோழன் போர்த் தொழிலில் வலங்கையரின் உதவிகளைப் பெற்று அவர்களுக்குச் சிறப்புப் பட்டங்களையும் அளிக்கிறான்; அதே வேளையில் தன் ஆணைக்கு அடங்க மறுத்த வலங்கையர்களுள் இருவரை யானையின் காலில் இட்டுக் கொல்லவும் செய்கிறான்.

கரிகால் சோழன் வலங்கையர்களுக்குச் சிறப்புப் பட்டம் அளித்தமைக்கு வலங்கையரின் உதவி பெற்று மனம் மகிழ்ந்தமை காரணம். வலங்கையரைக் கொன்றமைக்குக் கரிகால் சோழனின் தன் முனைப்பு (Ego) காரணம். அரசரின் தன்முனைப்பு காரணமாகக் கொலை செய்ய ஆணையிடுகிறான். வெங்கலராஜன் கதை

என்னும் இக்கதைப் பாடலில் எதிர்நிலைப் பாத்திரமாகச் சோழன் காட்சியளிப்பதற்கு மேற்குறித்த செயல்பாடுகள் காரணம். அவனைப் பொறுத்த அளவில் அவன் முழுமையான எதிர்நிலைப் பாத்திரம் (வில்லன்) இல்லை. சூழ்நிலை காரணமாகவும், ஈழவன் ஒருவனின் தூண்டுதல் காரணமாகவும் எதிர்நிலைப் பாத்திரம் ஆக்கப்படுகிறான்.

வஞ்சி மன்னன் வெங்கலராஜனின் மகள் திரைமுகத்தழகியை முறைப்படிப் பெண் கேட்கிறான். அவனுக்கு வெங்கலராஜன் பெண் தர மறுத்ததால் அவனது தன்முனைப்பு காயப்படுகிறது. அதனால் போர் தொடுக்கிறான்; அதன் மூலம் திரைமுகத்தழகியின் சாவுக்குக் காரணம் ஆகிறான்.

வெங்கலராஜனின் மேலாண்மை உணர்வு, திரை முகத்தழகியின் இறப்பும், வஞ்சி மன்னனை ஓர் எதிர்நிலைப் பாத்திரமாகக் காட்டி நிற்கிறது.

வஞ்சி மன்னனைப் போன்றே, நளராஜனும் வெங்கலராஜனின் மகள் சங்குமுகத்தழகியை முறைபடிப் பெண் கேட்டவன். வஞ்சி மன்னனுக்குப் பெண் கொடுக்க மறுத்தது போலவே நளராஜனுக்கும் வெங்கலராஜன் பெண் தர மறுக்கிறான்.

ஆனால் நளராஜன் தன்னுடைய தன் முனைப்பு அதிகம் காயப்பட்டதாக உணர்கிறான். ஆதலின், வெங்கலராஜனுக்கும் அவனது மகள் சங்குமுகத்து அழகிக்கும் குறுக்கு வழியில் கேடு செய்யச் சதித் திட்டம் இடுகிறான். ஆதலின் நளராஜன் சூழ்நிலை காரணமாக எதிர்நிலைப் பாத்திரம் ஆக்கப்பட்டவன் அல்லன்; மாறாக, சதித் திட்டத்தைத் திட்டமிட்டுச் செய்து சங்குமுகத்தழகியின் மேல் களவுக் குற்றம் சாட்டுகிறான். தான் அவமானப் பட்டதற்கு வெங்கலராஜனையும் அவனது மகள் சங்குமுகத்தழகியையும் அவமானப்படுத்துகிறான். அவர்கள் இருவரின் இறப்புக்கு மட்டுமன்றி அவர்களின் உறவினர்களின் இறப்புக்கும் காரணம் ஆகிறான்.

## துணைநிலைப் பாத்திரப் படைப்புகள்:

வெங்கலராஜனின் கதை ஓட்டத்திற்குத் துணை நிற்கும் பாத்திரங்களை அவற்றின் வகைமையை மையமாகக் கொண்டு ஐந்து வகைப்படுத்தலாம்.

1. தெய்வ நிலையில் அமைந்த துணைநிலைப் பாத்திரங்கள்
2. மனித நிலையில் அமைந்த துணைநிலைப் பாத்திரங்கள்
3. மிருக நிலையில் அமைந்த துணைநிலைப் பாத்திரங்கள்
4. பூதகணங்கள் நிலையில் அமைந்த துணைநிலைப் பாத்திரங்கள்
5. பாத்திரத்தின் செயல்பாடுகளுக்கு உரிய மதிப்புப் பெற்ற மாங்கனி.

தெய்வநிலையில் உள்ள பாத்திரங்கள், இக்கதைப் பாடலின் தலைமை மாந்தர்களின் பிறப்புக்கும் வளர்ப்புக்கும் காரணமாக நின்று, கதையோட்டத்தைத் தொடங்கி வைக்கின்றன. மிருக நிலையில் விளங்கும் யானை வலங்கையரின் தலையை இடறிக் கொன்றது மூலம், கதைத் திருப்பத்தைத் தொடங்கி வைக்கிறது. செங்கிடாய்க்காரன் ஆகிய பூதகணம் தீயன செய்து, கதை முடிவுக்கு வித்திடுகிறது. செங்கிடாய்க்காரனின் மாங்கனி உருவம், நளராஜனின் அழிவிற்கும், அவனது நாட்டின் அழிவிற்கும், வெங்கலராஜன், அவனது மகள் சங்குமுகத்தழகி ஆகியோரின் இறப்பிற்கும் வித்திடுகிறது.

## தெய்வ நிலையில் அமைந்த துணைநிலைப் பாத்திரங்கள்:

தலைமைக் கதை மாந்தர்களாகிய வெங்கலராஜனின் முன்னோர்களை வளர்த்தவள் காளி. அவர்கள் பிறப்புக்குக் காரணமாக இருந்தவர்கள் தெய்வக் கன்னியர்கள். வெங்கலராஜனின் முன்னோருக்கு அருள் புரிந்தவர் சிவன். போர் முகத்தில் எவர் வரினும் வென்று அவர்களைக் கொன்று நின்றவர்கள் வலங்கையர்கள். அவர்கள் காளியின் படைக்குத் துணை நின்றவர்கள்.

வலங்கையர்களின் பிறப்பின் பெருமையை எடுத்து உரைப்பதற்கும், வளர்ப்பின் சிறப்பைச்சுட்டி நிற்பதற்கும், போர்த் தொழிலில் புகழ் பெற்றவர்கள் வலங்கையர்கள் என நிறுவி, அவர்களின் புகழ் பாடுவதற்கும், தெய்வநிலைப் பாத்திரங்கள் துணை நிற்கின்றன.

## மனித நிலையில் அமைந்த துணைநிலைப் பாத்திரங்கள்:

### ஆண் துணைநிலைப் பாத்திரங்கள்:

மனித நிலையில் அமைந்த ஆண் துணைநிலைப் பாத்திரங்களுள் கரிகால்சோழ மன்னனின் அமைச்சர், நளராஜனின் தூதுவர், வாணிகர், வித்தியாதர முனிவர் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள்.

### பெண் துணைநிலைப் பாத்திரங்கள்:

மனித நிலையில் அமைந்த பெண் துணைநிலைப் பாத்திரங்களுள் ஏழு தெய்வக் கன்னியர், மழை பெய்யச் செய்த தச்சனின் மனைவி, பனை மரமான முனிவனின் மனைவி, வெங்கலராஜனின் தாய் பொன்னம்மை ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள்.

### ஆண் துணைநிலைப் பாத்திரங்களின் செயல்பாடுகள்:

மண் தோண்ட மறுத்த வெங்கலராஜனின் முன்னோர்களை யானையின் காலில் இட்டு கரிகால் சோழன் கொலை செய்ய ஆணை இட்ட போது அவனது அமைச்சர்கள்

தலையிடுகின்றனர். அவர்களின் செயல்பாடுகள் இரு வகையின.

1. வலங்கையரின் புகழ்பாடி, மன்னனைத் திருத்த முயலுதல்.
2. "சோழ மன்னா உந்தன் மனுநீதிதான் ஒழியும்" என அறிவுரை கூறி மன்னனை எச்சரித்தல்.

நளராஜனின் தூதுவர்கள் பெண் தர மறுத்த வெங்கலராஜனிடம், படையெடுக்கும் செய்தியை அறிவிக்கும் சூழலில் இடம் பெறுகின்றனர். வாணிகர்களின் துயரத்தை வெங்கலராஜன் துடைத்தபோது அவனைப் பாராட்டித் தோள் மேல் சுமந்த போது, வாணிகர்களைப் பற்றிய பேச்சு இடம் பெறுகிறது.

வித்தியாதர முனிவர் வலங்கையர்களின் முன்னோர்களை ஈன்றெடுத்த குல விளக்கு. சிவனின் அருள் பெற்று ஏழு தெய்வக் கன்னியர்கள் மூலம், ஏழு வலங்கையர் குலத் தோன்றல்கள் உருவாக அவர் மூல காரணம் ஆகிறார்.

### 3. மிருக நிலையில் அமைந்த துணைநிலைப் பாத்திரம்: யானை

வலங்கையர்களின் முன்னோர்களுள் இருவரை மிதித்துக் கொன்ற மிருகம் யானை. யானையின் இச்செயல்பாட்டால் வலங்கையர்கள் வேறு இடத்துக்குக் குடி பெயர்கின்றனர். இதன் மூலம் யானை கதைத் திருப்பத்திற்குக் காரணமாக அமைகின்றது.

### 4. பூத கணங்கள் நிலையில் அமைந்த துணைநிலைப் பாத்திரங்கள்:

இவர்கள் மூன்று வகையினர்.

1. வரம் தரும் தேவர்கள்
2. சதித் திட்டம் தீட்டும் செங்கிடாய்க்காரன்
3. காளியுடன் போர் புரியும் தாருகாசுரன்

சங்குமுகத்தழகி மண் மாரி பொழிந்து, நளராஜனையும் அவனது நாட்டையும் அழித்து விட்டுத் தானும் இறந்து விடுகிறாள். அப்போது அவளுக்குத் தேவர்கள் வரம் தருகின்றனர்.

### அஃறிணைப் பாத்திரமான மாங்கனி:

நளராஜன் வேள்வி செய்து துஷ்ட தெய்வமான செங்கிடாய்க்காரனை வரவழைக்கிறான். செங்கிடாய்க்காரன் மாங்கனி வடிவம் கொண்டு தண்ணீர் சுமந்து வந்த சங்குமுகத்தழகியின் குடத்தினுள் ஒளிந்து கொள்கிறான்.

சங்குமுகத்தழகி 'கனியைத் திருடிய கள்ளி' எனக் குற்றம் சாட்டப்பட்டமைக்கு, மாங்கனி காரணமாக அமைகிறது. அவமானம் தாங்காமல் வெங்கலராஜனும் அவரது உறவினரும் சங்குமுகத்தழகியும் இறந்துபடுதற்கு அந்நிகழ்ச்சியே காரணம் ஆகிறது.

சங்குமுகத்தழகி அடங்காத சினம் கொண்டு மண் மாரி பொழியச் செய்து நளராஜனும் நளராஜனின் நாடும் அழிந்து போவதற்கு இந்நிகழ்ச்சியே காரணம் ஆகிறது.

"மண்மாரி கல்மாரி மாய்த்தியாய் எரிய
பெண்பழியால் கல்மாரி பெய்திடவும் முடிந்திடவும்
ஆதிபரன் உதவி செய்தார் அழகுசங்கு முகத்தழகி
நீதியினால் மண்மாரிபெய்ய நேரிழையாளு மிறக்க"

(வெங்கலராஜன் கதை., வரிகள் - 2390-2393)

என நியாயத்தை நிலைநாட்ட ஆதிபரனே நேரில் வந்து அருள் பாலித்த நிகழ்ச்சியும் மாங்கனியால் நிகழ்ந்தது.

## முடிவுரை:

வெங்கலராஜன் கதை பல்வகைப்பட்ட பாத்திரப் படைப்புகளை முன் நிறுத்தி எழுதப்பட்ட கதைப் பாடல் எனலாம். ஆனால் குறிப்பிட்ட ஒரு பாத்திரத்தின் பண்பு நலன்களை விளக்குவதற்கும் பண்பு நலன்களை விளக்கும் நிகழ்ச்சிகளை விரிவாக முன் வைப்பதற்கும் படைப்பாளர் விரிவான முயற்சியில் ஈடுபடவில்லை. அரசர்க்கு அறிவுரை கூறிய அமைச்சர்கள் வலங்கையரின் புகழ் பாடியதைப் போல, அவர்களின் பண்பு நலன்களை எடுத்துரைக்க முயலவில்லை.

பாடம்-4

# வெங்கலராஜன் கதையின் துன்பியல் முடிவு

முன்னுரை:

தமிழ் மொழியில் உள்ள அறுபதுக்கும் மேற்பட்ட தமிழ்க் கதைப் பாடல்களை ஆராய்ந்த ஸ்டுவர்ட் கதைப் பாடல்களை இரு வகையாகப் பகுத்துக் காட்டுகிறார்.

1. பிறப்பு வகைக் கதைப் பாடல்கள்
2. இறப்பு வகைக் கதைப் பாடல்கள்

அவருடைய வகைமையுள் இறப்பு வகையில் வெங்கலராஜன் கதை அடங்கும்.

இறப்பு வகைக் கதைகளின் மாதிரி வகைமையைப் பின்வருமாறு ஸ்டுவர்ட் பகுத்துக் காட்டுகிறார்.

## இறப்பு வகைக் கதைப் பாடல்கள்:

**1. பின்புலம்:** இவ்வுலகில் நிகழ்வதாக அமைக்கப்படும் குறிப்பிட்ட நிலவியல் எல்லை, நாடு, நகர்ச் சிறப்பு போன்றவை வருணிக்கப்படும்.

**2. பிறப்பு:** மனிதர்களிடையே நிகழ்வது, வேதனை நிரம்பியது பிள்ளையில்லாதிருத்தல், பிள்ளைவரம் வேண்டிப் பல கோயில்களுக்குச் செல்லுதல், வரம் பெற்றுக் கருவுறுதல், பத்து மாத வருணனை, மருத்துவச்சி பிள்ளைப் பேற்றைக் கவனித்தல், பிள்ளை பெறல் போன்றவை விளக்கப்படும். பிள்ளை வளர்ப்பு முறை, கலைகளைக் கற்றல், திருமணம் முதலியன இடம் பெறும்.

**3. முரண்பாடு:** பெரும்பாலும் நிலம், செல்வம் சமூக ரீதியான மனிதன், மனிதனின் உரிமை, பெண் போன்றவற்றிற்காகப் போராடுவதாக அமையும்.

**4. இறப்பு:** வன்முறை, கொலை, தற்கொலை, கைலாயம் சென்று வரம் பெற்றுப் பூமி திரும்புதல் ஆகியன இடம் பெறும்.

**5. முடிவு:** வழிபடத் தூண்டுதல், பகைவர்களைப் பழிவாங்கல், கோயிலில் குடிகொண்டு திருவிழாக்களில் வழிபாடு பெறுதல் என்ற வளர்ச்சி நிலைகளைக் கொண்டு விளங்கும்.

## இன்பியல், துன்பியல் முடிவுகள் - ஒரு பார்வை:

ஆங்கில மொழித் திறனாய்வாளர்கள் தங்கள் மொழியில் எழுந்த நாடக இலக்கியங்களை மையமிட்டு வகுத்துக் கொண்ட கதை முடிவுகள் இரண்டு வகைப்படும்.

1. இன்பியல் முடிவு
2. துன்பியல் முடிவு

எனினும் இத் திறனாய்வு முறை, தமிழ் மொழியின் காப்பியங்கள், தொடர்நிலைச் செய்யுள்கள், புதினங்கள், சிறுகதைகள், நாடகங்கள், கதைப் பாடல்கள் என அனைத்து இலக்கிய வகைகளுக்கும் பொருந்துமாறு அமைந்துள்ளது எனலாம்.

இக்கதை முடிவுகள், கதையின் தலைமை மாந்தர்களுக்கு ஏற்படும் முடிவை வைத்தே நிர்ணயிக்கப்படும். வில்லன் எனப்படும் எதிர்நிலைப் பாத்திரங்களின் முடிவுகளோடு இது தொடர்பு படுத்தப்படுவதில்லை.

அறம் நிலைக்கவும், பாவம் ஒழியவும் தலைமை மாந்தர்கள் செய்யும் போராட்டங்களில் எதிர்நிலைத் தலைவர்கள் அழிந்து விடுகின்றனர். எனினும், எதிர்நிலைத் தலைவர்களின் முடிவுகளுடன் இன்பியல் முடிவுகள், துன்பியல் முடிவுகள் என்னும் வகைமைகள் தொடர்பு படுத்தப்படுவதில்லை. தனிப் பாடல்களும் இவ் வகைமைக்குள் அடங்குவதில்லை.

தமிழ் இலக்கிய வரலாற்றில் முதற் காப்பியமாக விளங்கும் சிலப்பதிகாரத்தில் காப்பியத்தின் தலைமை மாந்தரான கோவலன் கொலையுண்ணப் படுகிறான். காப்பியத்தைத் துன்பியல் முடிவுடன் முடிக்க முடியாத இளங்கோவடிகள், இமய மலையில் இருந்து கண்ணகியின் சிலை வடிக்கக் கல் கொண்டு வந்து, அப்பத்தினித் தெய்வத்திற்கு வழிபாடு நிகழ்த்துவதுடன் காப்பியத்தை முடிக்கிறார்.

சீவக சிந்தாமணியில் கட்டியங்காரனும் இராமாயணத்தில் இராவணனும் அவனது உறவினர்களும் மகாபாரதத்தில் துரியோதனனும் அவனது உறவினர்களும் கொல்லப்பட்டுத் துன்பியல் முடிவு கொள்கின்றனர். இவர்கள் அனைவரும் வில்லன் எனப்படும் எதிர்நிலைத் தலைவர்கள். ஆதலின் இக் காப்பியங்கள் துன்பியல் முடிவு கொண்டனவையாகக் கருதப்படவில்லை.

இராமாயணம் இராமரின் பட்டாபிஷேகத்தோடு முடிவடைகிறது. பாண்டவர்களின் அரசு பொறுப்பு ஏற்பதோடு மகாபாரதம் முடிவடைகிறது. இவை இன்பியல் முடிவு கொண்ட காப்பியங்களாக மதிக்கப்படுவதற்கு இம் முடிவுகள் காரணம்.

## துன்பியல் முடிவு பெறும் வெங்கலராஜன் கதை - ஓர் உளவியல் பார்வை:

வெங்கலராஜன் கதை துன்பியல் நோக்கி நகர்ந்து சென்றமைக்குரிய காரணங்களாக நான்கினைக் கூறலாம்.

1. இக்கதைப் பாடல் படைக்கப்பட்டதன் நோக்கம்.
2. தலைமை மாந்தரான வெங்கலராஜனின் மனப் போக்கு.
3. கரிகால் சோழன், வஞ்சி மன்னன், நளராஜன் ஆகிய எதிர்நிலைத் தலைவர்களின் செயல்பாடுகள்.
4. திரைமுகத்தழகி, சங்குமுகத்தழகி ஆகியோரின் மன உணர்வுகள்.

## 1. கதைப் பாடல் படைக்கப்பட்டதன் நோக்கம்:

வெங்கலராஜன் கதை என்னும் இக்கதைப் பாடல் இரு கூறுகளைக் கொண்டு விளங்குகிறது.

1. வெங்கலராஜனின் முன்னோர்களின் கதை.
2. வெங்கராஜனின் கதை.

இவ்விரண்டு கூறுகளும் வலங்கையர்கள் எனப்படும் நாடார் குலத்தின் உயர்வை எடுத்துரைக்கும் நோக்கம் கொண்டவை.

வெங்கலராஜனின் முன்னோர்களின் கதை, பொருளாதாரத்தால் பிற்பட்ட அவர்களின் மன நிலையையும் மன உறுதியையும் தெளிவுபடுத்தி நிற்கிறது.

போர்த் தொழிலையும் பனைத் தொழிலையும் வாணிகத்தையும் தங்களின் குலத் தொழில்களாகக் கொண்டு வாழ்ந்து வந்த இவர்கள் ஒருமுறை மண் சுமக்குமாறு ஏவப்படுகின்றனர்.

அதற்கு முன்னர், கரிகாலச் சோழனின் படைகளில் சேர்ந்து அவனது பகைவர்களை அழித்து நின்றனர். இது அரசனுக்கு உதவும் தொழிலாகவும் கௌரவம் மிக்க தொழிலாகவும் வலங்கையர்களால் கருதப்பட்டது.

வலங்கையர்கள் பெற்ற வெற்றிக்குக் கரிகால் சோழனால் பாராட்டும் பரிசும் சிறப்புப் பட்டங்களும் கிடைத்த போதும் வலங்கையர்கள் பூரித்து நின்றனர்.

அதே வலங்கையர்களைக் கரிகால சோழன், அணை உடைந்ததால் காவிரியில்

ஏற்பட்ட வெள்ளப் பெருக்கைத் தடுக்க மண் சுமக்குமாறு ஏவுகிறான். ஆனால் அவர்களது தன்மானம் தாக்கப்பட்டதாக அவர்கள் உணர்கின்றனர்.

அரசனுக்குத் துணை நிற்கும் போர்த்தொழில் வேலையில் இருந்து கீழே இறக்கப்பட்டு, மண் சுமக்கும் இழி தொழிலைச் செய்வதாக அவர்கள் மனக்காயம் கொள்கின்றனர். ஆதலின் "கூடை தொடாப் போராட்டத்தில்" இறங்குகின்றனர். அரசன் ஆணைக்குக் கீழ்ப்படிய மறுக்கின்றனர்.

அரசன் வலங்கையர்களை நோக்கி,

"மறுத்துமொழி பேசாமல் மண்சுமவும் வலங்கையரே"

(வெங்கலராஜன் கதை, வரிகள் - 702.)

என ஏவியபோது,

"மண்சுமவும் என்னுமன்னா மரியாதி கொடுத்தீரே
மன்றுதனில் குட்டைதொட்டு மண்சுமப்ப தில்லையென்றால்"

(வெங்கலராஜன் கதை, வரிகள் - 703-704)

என மன உறுதியுடன் அரசனின் ஆணைக்குக் கீழ்ப்படிய மறுத்துவிடுகின்றனர்.

சினம் கொண்ட கரிகால் சோழன் வலங்கையர் இருவரை யானையின் காலால் இடறிக் கொல்லுமாறு கொலைத் தண்டனைக்கு உத்தரவிடுகிறான்.

அதைத்கேட்ட வலங்கையர்கள், "மரணத்தை ஏற்போம்; ஆனால் குலத்துக்கு இழுக்கான வேலையைச் செய்ய முடியாது" எனத் திட்டவட்டமாகப் பதில் கூறுகின்றனர்.

"குட்டைதொட வேணுமென்ற கொற்றவனே கேளும்
குலத்துக்கிழுக் கானவேலை கூறாதே மன்ன....
அடித்தாலுங் குட்டைதொட்டு மண்ணதையும் வெட்டி
ஆறுடைப்புக் காவேரியில் வேலைசெய்யோம் நாங்கள்."

(வெங்கலராஜன் கதை, வரிகள் - 711, 712, 722, 723)

வலங்கையர் இருவருக்குக் கொலைத் தண்டனை நிறைவேற்றப்படுகிறது. யானையால் மிதிபட்டு உருண்டோடும் தலைகளும், "குட்டை தொடோம்" எனக் கூறிக்கொண்டே உருண்டோடுகின்றன.

கொலைத் தண்டனை நிறைவேற்றுவதற்கு முன் கரிகாலச் சோழனின் அமைச்சர்கள் மன்னனுக்கு அறிவுரை கூறுகின்றனர். அவ்வறிவுரைகள் வலங்கையர்களின் குலப் பெருமையாலும் புகழ் மொழியாலும் நிரம்பி வழிகின்றன.

வலங்கையர்களுக்கு மரண தண்டனை நிறைவேற்றப்படுமானால் சோழ நாட்டில் மனுநீதி அழிந்து விடும் என அமைச்சர்கள் எச்சரிக்கை செய்கின்றனர்.

வலங்கையர்கள் இருவரை அழிப்பதாலேயே நாட்டின் மனுநீதியே அழிந்து விடும் எனக் கூறும் அளவிற்கு வலங்கையர்களின் குலப்பெருமை இந்நூலில் பேசப்படுகிறது.

அரசனுக்கு அடிபணியாத வலங்கையர்களின் பிடிவாதம் வலங்கையரின் "கொள்கைப் பிடிப்பு" என்றும், "உயிரிழப்பினும் உறுதி தவறாமை" என்றும் மிக உயர்வாகப் போற்றிப் புகழப்படுகிறது.

குல உயர்வைப் புகழ எழுந்த நூல் இது என்பதை இந்நூல், வாய்ப்புள்ள இடங்களில் எல்லாம் குறிப்பாகவும் வெளிப்படையாகவும் சொல்லாலும் செயலாலும் நிறுவி நிற்பதை நம்மால் உணரமுடிகிறது.

"மனமுறிவின் அடித்தளம் புறச் சூழல்களால் அமைத்துத் தரப்படாதவரை அகமன முறிவுகள் வெளிப்படுவதில்லை."

என மன உணர்வு பற்றியும், பால் உணர்வு பற்றியும் ஆய்வு செய்த பிராய்டு (Freud) கூறுவர்.

வலங்கையர்களுக்குப் படைத்தொழிலில் கிடைத்த வெற்றியும் புகழும் நம்பிக்கை மிகுதியால் தோன்றிய மன எழுச்சியைத் தந்து நிற்கின்றன. மண் சுமத்தல் என்னும் தொழில் அவர்களுக்கு இழி தொழிலாகத் தோன்றியமையால் நம்பிக்கையின்மையால் தோன்றிய மன முறிவைத் தந்து நிற்கிறது.

## 2. வெங்கலராஜனின் மனப்போக்கு:

பொருளாதாரத்தில் பின்தங்கி நின்ற வலங்கையரின் குலம் இரும்பைப் பொன்னாக்கும் இரசவாத வித்தையால், கோட்டை கட்டி வாழும் வளம் பெற்ற குலமாக மாறி விடுகிறது.

கோட்டையும் பணபலமும் கொண்ட வெங்கலராஜன் தன்னைச் சமுதாயத்தில் மிக உயர்ந்த அந்தஸ்து உள்ள மனிதனாகக் கருதுகிறான். அமைச்சரவையோ படை பலமோ ஆட்சிப் பொறுப்போ இல்லாத சூழ்நிலையிலும் தன் சமுதாய அந்தஸ்தை அரசர்களைக் காட்டிலும் உயர்வாக எடை போடுகிறான்.

வெங்கலராஜனின் இச்செம்மாந்த மன உணர்வு அரசர்கள் பெண் கேட்டு வந்து நின்ற போதும், பெண் தர மறுக்கும் எதிர்ப்பு உணர்வினை அவனுக்கு அளித்து நிற்கிறது.

இக்கதைப் பாடலில் வெங்கலராஜனுக்குத் திரைமுகத்தழகி, சங்குமுகத்தழகி என இரண்டு பெண்கள் உள்ளனர். அவ்விருவரின் அழகையும் இளமையையும் வெங்கராஜனின் செம்மாந்த மனப்போக்கையும் மையமிட்டு இக்கதை துன்பியலை நோக்கி நகர்கிறது.

இக்கதைப் பாடலின் உள்நோக்கம் வலங்கையர் குல உயர்வைச் சுட்டுவது என்னும் ஒரு நிலைக் குறிகோளில் மையப்பட்டுக் கிடக்கிறது. ஆதலின், வஞ்சி மன்னனும் நளராஜனும் முறையே திரைமுகத்து அழகியையும் சங்குமுகத்து அழகியையும் பெண் கேட்டு வெங்கலராஜனிடம் தூது அனுப்பிய போது, வெங்கலராஜன் பிடிவாதமாக மறுத்து விடுகிறான்.

கதையாசிரியர், வெங்கலராஜனிடம் பின்வரும் பண்புகளையும், மனஉணர்வுகளையும் பதிய வைக்கிறார்.

1. விட்டுக் கொடுக்கும் மனநிலையின்மை.
2. சூழ்நிலையைப் புரிந்து கொள்ளும் மனப்பாங்கின்மை.
3. விளைவுகளைப் பற்றிய சிந்தனைக்கு முன்னுரிமை தராமை.
4. காரண காரிய விளைவுகளைத் தொலை நோக்கு திட்டத்துடன் அணுகாமை.

வெங்கலராஜன் விரும்பியிருந்தால், விரும்பிப் பெண் கேட்ட அரசர்களுக்குப் பெண் கொடுத்திருக்கலாம். அதன் மூலம் அரசர்களுக்கு இணையான மிகமிக உயர்ந்த அந்தஸ்தைச் சமுதாயத்தில் பெற்றிருக்கலாம்.

ஆனால், கதையாசிரியர் வெங்கலராஜனின் மனத்தில் அரசனை விட மிக உயர்ந்தவன் என்ற ஆணவம் கலந்த பெருமித உணர்வை வேண்டுமென்றே திட்டமிட்டுப் பதியம் போடுகிறார்.

இக்கதையைத் துன்பியல் முடிவை நோக்கி நகர்த்த விரும்பும் கதையாசிரியரின் உள்நோக்கம் இதற்குக் காரணம் ஆகலாம். துன்பியல் முடிவு ஒன்று தான் வலங்கையர்களின் அசைக்க முடியாத மன உறுதியையும் தங்கள் குல உயர்வைக் காக்க உயிரையும் விடுகின்ற கொள்கைப் பிடிப்பையும் பறை சாற்றி நிற்க வல்லது என இதன் கதையாசிரியர் கருதி இருக்கலாம்.

## 3. எதிர் நிலைத் தலைவர்களின் செயல்பாடுகள்:

வெங்கலராஜனின் மகள் திரைமுகத்தழகியின் அழகு, திருமணம் செய்ய வேண்டும் என்ற ஆர்வத்தை வஞ்சி மன்னனின் மனத்தில் உருவாக்குகிறது. ஆனால் அதனை நிதானத்துடனும், பொறுமையுடனும் அணுகும் மனநிலை வஞ்சி மன்னனிடம் காணப்படவில்லை.

உளவியலார் மனித மனத்தில் தோன்றும் ஆர்வத்தை இரு வகையாகப் பகுப்பர்.

1. முதல் நிலை ஆர்வம்
2. துணை நிலை ஆர்வம்

பொறுமையின் எல்லையைக் கடந்த ஆர்வம் முதல் நிலை ஆர்வம் எனப்படும். முதல்நிலை ஆர்வத்தால் தூண்டப்பட்டுத் தோன்றும் ஆர்வம் துணைநிலை ஆர்வம் எனப்படும்.

ஆர்வ உணர்வு காயப்படும்போது ஒருபுறம் அச்சம் தோன்றும்; மறுபுறம் துயரம் தோன்றும். இவை இரண்டும் மனத்தில் நம்பிக்கையின்மையை உருவாக்குகின்றன. உள்ளம் அமைதியை இழந்து தவிக்கிறது.

வெங்கலராஜன் பெண்தர மறுத்ததால் வஞ்சி மன்னனின் மனத்தில் தோன்றிய ஏக்கமும் மன உளைச்சலும் அவனுக்கு மனமுறிவையும் ஏமாற்றத்தையும் தந்து நிற்கின்றன.

வஞ்சி மன்னனின் துயரத்திற்கும் கோபத்திற்கும் அவனது நம்பிக்கை குறைந்தது மட்டுமே காரணம் அன்று; நம்பிக்கை குறைந்ததை மனம் தாங்க மாட்டாமையே அதற்குக் காரணம்.

காமத்தாலும் அவமானத்தாலும் மன முறிவு கொண்ட வஞ்சி மன்னன் மனக்குழப்பத்திற்கும் மனத்துயரத்திற்கும் ஆளாகிறான். தன் துயரத்திற்குக் காரணமான வெங்கலராஜனின் மேல் தாக்குதல் தொடுக்கும் முடிவை எடுக்கிறான்.

துயரம் கொண்ட மனம் எதிர்க்கும் துணிவை இழந்தபோது குழப்பத்திற்கு ஆட்படும் என அகோல்கர் "சமுதாய உளவியல்" (ப-86) என்ற ஆங்கில நூலில் குறிப்பிடுவார்.

ஆனால் இங்கு அவமானத்திற்கும் துயரத்திற்கும் உள்ளானவன் ஓர் அரசன். ஆதலின் அவன் தாக்குதல் தொடுக்கும் முடிவை எடுக்கிறான். படைபலம் இல்லாத வெங்கலராஜனின்

மேல் பலம் மிக்க படையைக் கொண்ட வஞ்சி மன்னன் போர் தொடுக்க எடுத்த முடிவு உளவியல் ரீதியாக அவன்பட்ட அவமானத்திற்கு பழிவாங்கும் அவனது வெறியை எடுத்துரைக்கிறது எனலாம். செல்லரித்துப் போன வஞ்சி மன்னனின் மன உணர்வுகள் போர் தொடுப்பதன் மூலம் ஆறுதல் அடைகின்றன.

வெங்கலராஜன் பெண்தர மறுத்ததால் வஞ்சி மன்னனும் நளராஜனும் தொடக்கத்தில் ஏமாற்ற உணர்வுக்கு உட்படுகின்றனர்.

'ஏமாற்ற உணர்வு சினத்தை வெளிப்படையாக உணர்த்தாமல் உள்ளேயே புழுங்குகின்ற ஒரு மனநிலை" என உளவியலார் கூறுவர்.

வஞ்சி மன்னன், நளராஜன் ஆகிய இருவரும் கொண்ட ஏமாற்ற உணர்விற்கு அவர்களின் பால் உணர்வு (காம உணர்வு) காரணம்.

"பால் உணர்வே அனைத்து ஆசைகளிலும் ஆவேசமிக்க, உணர்வுத் துடிப்புடைய ஆசை. அது ஆசைகளின் ஆசை. அது மனிதனின் விருப்பத்தால் தோன்றும் துணிவாற்றலை மையப்படுத்தி நிற்பது. பால் உணர்வு இன்பத்தின் முடிநிலையாகக் கருதப்படுதலின் அதனை அடைவது இயல்பான முயற்சிகளின் முடிநிலைக் குறிக்கோளாகக் காதல் வயப்பட்டோரால் கருதப்படுகிறது" என ஆர்தர் சோபனர் "விருப்பமும் கொள்கையும் உருவாக்கும் உலகு" (The world as will and Idea) - மூன்றாம் பகுதி - பக்கம் - 314. என்ற நூலில் குறிப்பிடுவார்.

"பால் உணர்வு நிறைவேறும்போது அது கொள்ளும் பூரிப்பில் எல்லாவற்றையும் அடைந்ததாக மனம் மகிழ்கிறது. அதனை இழந்தபோது கொள்ளும் மனமுறிவில் அனைத்தையும் இழந்து விட்டதாகத் துயர் உறுகிறது." என அவர் அந்நூலில் மேலும் விளக்கி நிற்பர்.

வஞ்சி மன்னனும், நளராஜனும் எதிர்மறைச் சிந்தனை கொண்டமைக்கு அவர்களது எதிர்பார்ப்பில் ஏற்பட்ட ஏமாற்றமும் அதனால் ஏற்பட்ட விரக்தி உணர்வும் காரணம் எனலாம்.

வஞ்சி மன்னன் படையெடுக்க முடிவு செய்தமைக்குத் தான் பட்ட அவமானத்திற்கு முழு முனைப்போடு பழி வாங்க எண்ணியது காரணம்.

பாலுணர்வுப் போராட்டத்தில் நம்பிக்கை தோன்றுமானால் உயர்வு மனப்பான்மை தோன்றும். நம்பிக்கை உருக்குலைந்து அரசன் என்ற உரிமை உணர்வு தோன்றுமானால் ஆதிக்க உணர்வு தோன்றும்.

வஞ்சி மன்னன் கொண்ட அவமானம் அவனுக்கு முதலில் தாழ்வு மனப்பான்மையைத் தந்து நின்றது. தன் ஆட்சிக்கு உட்பட்ட பகுதியில் வாழும் ஒரு சாதாரண மனிதனின் பெண்ணைத் திருமணம் செய்து கொள்ள எண்ணிய போது அவனுக்குப் பெருந்தன்மை உணர்வு இருந்தது. ஆனால் வெங்கலராஜன் பெண் தர மறுத்த போது, வஞ்சி மன்னனுக்குப் பொறாமை உணர்வு தலைதூக்குகிறது.

பெண் தர மறுத்து, தன் மனத்தை நோகச் செய்த ஒரு மனிதனின் உள்ளத்தில் பழிவாங்கும் உணர்வு மேலோங்கி நிற்கும் என்பது உளவியலாரின் கருத்து.

இழி குணமும் காம மிகுதியும் கூட்டு சேரும் போது, பழி வாங்கும் உணர்வு தோன்றும் என உளவியலார் மேலும் கூறுவர். பழி வாங்கும் உணர்வின் தாய் பொறாமை உணர்வு ஆகும்.

"பொறாமையும் சுயநலமும் தீங்கிழைக்கும் வேட்கையும் கொண்ட உணர்வு, தான் விரும்புகின்ற பொருளை வைத்திருப்பவரை இலக்காகக் கொண்டது. அவர்க்குத் துன்பம் தரும் விருப்பத்தையும் கொண்டது. பொறாமை முற்றிலும் தாழ்வு மனப்பான்மையால் தோன்றுகின்ற உணர்வு" என ஹெல்மட் சூக் "சமுதாய நடத்தை பற்றிய கொள்கையில் பொறாமை" (பக்கம்-15) என்ற நூலில் குறிப்பிடுவர்.

பொறாமை உணர்வும் பொறாமை உணர்வால் தோன்றிய பழி வாங்கும் உணர்வும் வஞ்சி மன்னனின் கொடிய செயலுக்கும் நளராஜனின் தீய செயலுக்கும் விதை விதைக்கின்றன.

வஞ்சி மன்னன் தான் கொண்ட ஒருதலைக் காதலில் வெற்றி பெற்றிருந்தால் அவனுக்கு மகிழ்ச்சியும் பூரிப்பும் ஏற்பட்டு இருக்கும். இவ்வுணர்வுகள் அவனது பெருந்தன்மையைப் பெருமைப்படுத்தி இருக்கும். ஆனால் அவனது ஒருதலைக் காதல் வெற்றி பெறவில்லை. அதே போன்று நளராஜனின் ஆசையும் நிறைவேறவில்லை.

இவ்விரு அரசர்களும் தாங்கள் அடைந்த அவமானத்தில் இருந்தும் பழியில் இருந்தும் விடுபட அவர்கள் முதலில் எடுத்தது தற்காப்பு முயற்சி. பெண் தர மறுத்ததால் தோன்றிய பழிவாங்கும் உணர்வு அவர்களது தாக்குதல் முயற்சி.

வஞ்சி மன்னன், நளராஜன் ஆகியோரது செயல்பாடுகள், இக்கதைப் பாடலை துன்பியல் முடிவை நோக்கி நகர்த்திச் செல்கின்றன.

## 4. திரைமுகத்தழகி, சங்குமுகத்தழகி ஆகியோரின் மன உணர்வுகள்:

வெங்கலராஜன் ஒரு துன்பியல் தலைவன். அவனது இரண்டு பெண் குழந்தைகளும் அவனுடைய கருத்துகளையும் மன உணர்வுகளையும் அப்படியே பிரதிபலிப்பவர்கள். தாயும் இல்லை; வேறு துணையும் இல்லை. தந்தையைச் சார்ந்து வாழ வேண்டிய கட்டாய நிலை. ஆதலின் தங்களுக்கென்று தனிப்பட்ட சிந்தனையோ கருத்தோ விருப்பமோ உணர்வுகளோ கொண்டவர்களாக அவர்கள் சித்திரிக்கப்படவில்லை. நீரின் ஓட்டத்தை ஏற்று அவ்வழியே செல்லும் படகுகளைப் போல, ஊசியின் வழியே செல்லும் நூலைப் போல அவர்கள் தந்தையின் சிந்தனை வழியே சென்று நின்றவர்கள்.

சிக்கல் என ஒன்று வரும்போது அவர்கள் இத்தகைய சிந்தனையைக் கொண்டு இருந்தார்கள். ஆனால் ஆறாட்டு காணப் போக வேண்டாம் எனத் தந்தை சொன்ன போது அதன் காரணத்தை முழுவதும் புரிந்து கொள்ளும் மனப் பக்குவம் இல்லாமையால் திரைமுகத்தழகி ஆறாட்டு எனப்படும் தீர்த்தவாரித் திருவிழாவைக் காணச் செல்கிறாள். அங்கே அவளது அழகைக் கண்டு வஞ்சி மன்னன் வியப்படைகிறான்.

திரைமுகத்தழகியை முறைப்படிப் பெண் கேட்டு, வெங்கலராஜனுக்குத் தூது அனுப்புகிறான். வஞ்சி மன்னனைவிடத் தான் தகுதியில் உயர்ந்தவன் என்ற தன் முனைப்புக் காரணமாக வெங்கலராஜன் பெண் தர மறுக்கிறான்.

அரசனாகிய தனக்குத் தன் அரசாட்சியின் கீழ் வாழும் ஒருவன் பெண் தர மறுப்பதோ என்ற தன் முனைப்புக் காரணமாக வஞ்சி மன்னன் வெங்கலராஜன் மீது போர் தொடுக்கிறான்.

படைபலம் இல்லாத வெங்கலராஜன் திரைமுகத்தழகியின் தலையை அறுத்துக் கொலை செய்து விட முடிவு எடுக்கிறான். திரைமுகத்தழகி வெங்கலராஜனின் விருப்பத்தை விரும்பி நிறைவேற்றுவதற்கு ஆலோசனையும் தருகிறாள். தானே விரும்பி இறக்கத் துணிகிறாள்.

இதே போன்று வெங்கலராஜனின் இன்னொரு மகள் சங்குமுகத்தழகியின் நீண்ட ஒரு தலைமுடியைக் கண்டு வியந்து, அவளைப் பற்றிய விவரம் அறிந்து, நளராஜன் என்னும் மன்னன் அவளை மணக்க விரும்புகிறான். முறைப்படிப் பெண் கேட்டு வெங்கலராஜனுக்குத் தூது அனுப்புகிறான்.

நளராஜனை விட உயர்ந்த அந்தஸ்தில் இருப்பதாகக் கருதிய வெங்கலராஜன் பெண் தர மறுக்கிறான். அவமானம் தாங்காத நளராஜன் வேள்வி செய்து செங்கிடாய்க்காரன் என்ற துஷ்ட தெய்வத்தை வரவழைக்கிறான். வெங்கலராஜனையும் அவனது மகளையும் பழிவாங்கச் சதித்திட்டம் தீட்டுகிறான்.

அவனை மாங்கனி வடிவம் எடுக்கச் செய்து, சங்குமுகத்தழகியின் குடத்திற்குள் ஒளியச் செய்கிறான். இச்சூழ்நிலையை முன் வைத்துச் சங்குமுகத்தழகி 'கனியைத் திருடிய கள்ளி' எனக் குற்றம் சாட்டப்படுகிறாள். அவமானம் தாங்காத வெங்கலராஜனும், அவனது உறவினர்களும் தற்கொலை செய்து கொள்கின்றனர்.

தன்னை அவமானப்படுத்திய நளராஜனையும் அவனது நாட்டையும் தன் கற்பின் ஆற்றலால் மண்மாரி பொழியச் செய்து, சங்குமுகத்தழகியும் அழிக்கிறாள். இறுதியில் தானும் தற்கொலை செய்து கொள்கிறாள்.

வெங்கலராஜன் என்னும் இக்கதைப் பாடலில் தலைமை மாந்தர்கள் அனைவரும் கொலை செய்யப்படுகின்றனர் அல்லது தற்கொலை செய்து கொள்கின்றனர்.

உளவியலாரின் கருத்துப்படி, எதிரிகளுக்கு எதிராகத் தோன்றிய சினம், செல்லுபடியாகாத போது, தனக்கு எதிராகத் திருப்பப்படுகிறது. அச்சூழலில் வாழ்வின் வறட்சி வெறுப்பைத் தோற்றுவிக்கிறது. இறப்பு இனிதாகப்படுகிறது.

மனமுறிவின் முடிநிலையில் நின்றபோது அவர்கள் வெறுப்போடு ஏற்க விரும்பும் முடிவு அது. மன முறிவை ஒத்துக் கொண்டதற்கு அவர்கள் காட்டும் அடையாளம்.

துயரை மேலும் தாங்க முடியாமல் மனம் மறுத்த போதும், தோல்வியை ஒத்துக் கொண்ட போதும் தற்கொலை உணர்வு தோன்றுவதாக வெல்ஸ் "மன முறிவுகளின் பகுப்பாய்வு" (The Anatomy of Frustration, - பக்கம் 55) என்ற நூலில் குறிப்பிடுவர்.

எல்லா நம்பிக்கைகளும் இழந்த நிலையில் மனம் இறப்பை நாடுகிறது. வாழ்தற்கான விருப்பம் மறுக்கப்படும் போது இறப்பு இனிமை நிறைந்ததாகத் தோன்றுகிறது. அச்சூழலில் இறப்பு மகிழ்வும் அமைதியும் தருவதாக அமைகிறது என ஆர்தர் ஷோபனர் "விருப்பமும் கொள்கையும் உருவாக்கும் உலகு" (The world as will and Idea, volume I, Page-514) எனத் தற்கொலை மனநிலை தோன்றும் சூழலை விளக்கி நிற்பர்.

மனிதனுக்கு அமைந்த குழப்பமான சூழலில் வாழ்க்கை தரும் மனநிறைவின்மையே இறக்கும் எண்ணத்தைத் தருகிறது. அவன் வாழும் விருப்பத்தைத் துறக்கிறான் என்பது இல்லை; வாழ்வை மட்டுமே துறக்க விரும்புகிறான். மன நிறைவற்ற சூழலில் இறக்கும் விருப்பம் தோன்றுவதை ஆர்தர் ஷோபனர் இங்ஙனம் மேலும் விளக்கி நிற்பர்.

மனிதனுக்குத் தோன்றும் இவ்விறக்கும் விருப்பம் அவனது குறிக்கோளை அடைய வழி வகுப்பதில்லை. வாழ மறுக்கும் எண்ணம் வாழ்வின் துயர்க் கொடுமையால் தோன்றியதன்று; இன்பத்தை அடையாத போது வாழ்வில் தோன்றிய வெறுப்பால் தோன்றியது.

இறக்க விரும்பும் சங்குமுகத்தழகி, வெங்கலராஜன் ஆகியோர் வாழ விரும்பவில்லை என்பது இல்லை; வாழ்க்கைச் சூழல் மன நிறைவோடு இல்லை என்பது தான் காரணம்.

உடலை அழிக்க நினைவதன் மூலம் மனிதர்கள் வாழும் விருப்பத்தைத் துறக்கிறார்கள் என்பது பொருளல்ல; வாழ்வை மட்டுமே அவர்கள் துறக்க முடிவு செய்கின்றனர் என பால் சிவெக் "துயரம் பற்றிய தத்துவச் சிந்தனை" (The Philosophy of evil, Page-159) என்ற நூலில் தற்கொலை செய்து கொள்ளும் சூழலை விளக்கி நிற்பர்.

வாழ்விற்குரிய எல்லா வாய்ப்புக்களும் தவறிவிட்ட சூழலில், இறப்பை நாடுவதே பாதுகாப்பான நீடித்த தீர்வாகக் கருதப்படுகிறது என வொல்ட் "மன அழுத்தத்தில் மனிதன்" (Man under Stress, Page-19) என்ற நூலில் மன அழுத்தம் தற்கொலைக்குத் தூண்டி நிற்கும் பின்புலங்களைப் பற்றி எடுத்துரைப்பர்.

வெங்கலராஜன் பெண் தர மறுத்ததைத் தவிர வேறு எந்த முரண்பட்ட செயல்பாடுகளையும் மேற்கொள்ளவில்லை. ஆனால் அவமானம் தாங்காமல் பழி வாங்க எண்ணிய நளராஜனால் அவனது மகள் சங்குமுகத்தழகி 'கனி திருடிய கள்ளி' எனப் பொய்க் குற்றம் சாட்டப்படுகிறாள்.

தவறே செய்யாத தன் மகள் பழிக்கும் அவமானத்திற்கும் உள்ளானதை எண்ணி மனம் வருந்திய வெங்கலராஜனின் மனம், வாழும் திண்மையை இழக்கிறது. அதனால் தோன்றிய அவலம் அவனைத் தற்கொலை செய்யுமாறு தூண்டுகிறது.

வீண் பழியினால் அவனது தன்மானம் தாக்குதலுக்கு உள்ளாகிறது. தன் மகள் குற்றவாளி இல்லை என அவனால் நிறுவ முடியவில்லை.

## முடிவுரை:

வெங்கலராஜனின் தற்கொலை முயற்சி அவனது தன்மானத்தைத் தற்காக்கும் முயற்சி. நளராஜனின் செயல்பாடுகள், அவனது பெருமித உணர்வை வெங்கலராஜன் தகர்க்க முயன்றதால் நளராஜன் மேற்கொண்ட தாக்குதல் முயற்சி. பெண் தர மறுத்ததால் மனம் பூரித்து நின்ற வெங்கலராஜனின் மதுகை உணர்வு நளராஜனுக்குப் பொறாமை உணர்வை உருவாக்குகிறது.

சதித்திட்டம் தீட்டி நளராஜன் பழிவாங்கியமைக்கு அவனது இப்பொறாமை உணர்வும் அவன் பெற்ற அவமான உணர்வுகளும் காரணங்கள். நளராஜனின் செயல்பாடுகள் வெங்கலராஜனின் பூரிப்பைச் சாடும் பொறாமை உணர்வால் தோன்றியவை.

திரைமுகத்தழகியைப் பெண் தர மறுத்த போது, வஞ்சி மன்னன் போர்த் தொடுத்த சூழலில், திரைமுகத்தழகியை வெங்கலராஜன் கொல்ல நினைத்தமைக்குப் பலம் மிக்க படை தன்னிடம் இல்லை என்ற தாழ்வு மனப்பான்மை காரணம் ஆகலாம்.

பாடம்-5

# வெங்கலராஜன் கதை - ஒரு மதிப்பீடு

## முன்னுரை:

புராண நிகழ்ச்சிகளையும் வரலாற்று நிகழ்ச்சிகளையும் சமகால வாழ்வியல் நிகழ்ச்சிகளையும் ஒன்றாக இணைத்துப் பின்னப்பட்ட ஒரு நாட்டுப்புற இலக்கியம் வெங்கலராஜன் என்னும் இக்கதைப் பாடல் ஆகும். நாடார் குலப் பெருமையை முன் நிறுத்துவது இந்நூலின் குறிக்கோள் ஆகும்.

## குலப்பெருமையை முன்னிறுத்துவதற்கான காரணங்கள்:

1849-இல் டாக்டர் கால்டுவெல் திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள நாடார்களின் வரலாற்றை ஒரு சிறு பிரசுரமாக எழுதி வெளியிட்டார். இந்நூலில் நாடார்கள் உயர் சாதியினருக்கு அடிமைப்பட்ட தாழ்ந்த சாதியினராகச் சித்திரிக்கப்பட்டு இருந்தனர்.

கி.பி. 18, 19-ஆம் நூற்றாண்டுகளில் நாடார் குல மக்களில் பெரும்பாலோர் பொருளாதார நிலையில் மிகப் பின் தங்கியவர்களாக இருந்தனர். உயர் சாதியினரின் அடக்கு முறைகளுக்கு உள்ளாக்கப்பட்டுப் பல துன்பங்களை அவர்கள் அனுபவித்து வந்தனர். தீண்டாமை, வரிக் கொடுமை போன்றவற்றால் பெரிதும் பாதிப்படைந்தனர்.

நாடார் குலத்தைச் சார்ந்த ஆண், பெண் ஆகியோருக்கு ஆடை அணிகள் அணிவதில் பல கட்டுப்பாடுகள் இருந்தன. உடம்பின் மேல்பாகங்களை மூடி மறைக்கும் தோள் சீலையினைப் பெண்கள் அணியக் கூடாது. முட்டுக்குக் கீழ் ஆடை அணியக் கூடாது என்பன போன்ற கொடிய கட்டுப்பாடுகள் இருந்தன.

கோயில் வேள்வியின் போது நரபலி இடும் வழக்கம் அக்காலத்தில் இருந்தது. தாழ்ந்த குலக் குழந்தைகளோடு, நாடார் குலக் குழந்தைகளும் - மொத்தம் பதினைந்து பேர் உயிரோடு புதைக்கப்பட்டனர்.

சமுதாய அந்தஸ்தை நிறுவவும் பெண்களின் மானத்தைக் காக்கவும் தங்கள் குலம் தாழ்ந்த குலம் இல்லை என்பதை நிறுவவும் பல்வேறு வகையான முயற்சிகள் எடுக்கப்பட்டன; போராட்டங்கள் நிகழ்த்தப்பட்டன; தங்கள் குல உயர்வைக் கூறும் ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டன; பொருளாதார நிலையில் உயர்வு பெற்றால்தான் தங்கள் இனத்தவருக்குச் சமுதாய அந்தஸ்து கிடைக்கும்; தங்களின் அடிமை நிலை ஒழியும் எனக் கருதிப் பொருளாதார முன்னேற்றத்திற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

## குல உயர்வைக் காட்டும் முயற்சிகள்:

வெங்கலராஜன் கதை, "நாடார் குல உயர்வை எடுத்துரைத்தல்" என்ற தனது குறிக்கோளை நோக்கித் தெளிவாகவும் உறுதியுடனும் பயணம் செய்கிறது. இந்நூல் தனது இந்தக் குறிக்கோளை நிறைவேற்ற எடுத்துக் கொண்ட முயற்சிகளைப் பின்வருமாறு வகைப்படுத்தலாம்.

1. பிறப்பால் உயர்ந்தவர்களாகக் காட்டுதல்.
2. அரச குலத்தில் தோன்றியதாகச் சுட்டி நிற்றல்.
3. பொருளாதார நிலை உயர்ந்த போது, அரசர்களை விட உயர்ந்தவர்களாகக் காட்ட முனைதல்.
4. இழி தொழில் செய்வதை விட இறப்பது மேல்; மானம் காக்க மரணம் அடைவது மேல் ஆகிய கொள்கைப் பிடிப்பு உடையவர்களாகக் காட்டுதல்.
6. பிற சாதியினரை இழித்துக் கூறித் தங்கள் சாதியை உயர்த்திக் காட்ட முனைதல்.
7. சிறப்புப் பட்டங்கள் பெறுதல்.

## பிறப்பால் உய்ந்தவர்களாகக் காட்டுதல்:

இச்சுவடி கூறும் கதை ஏர்வாடி என்று அழைக்கப்படும் ஏராடி என்ற இடத்திலிருந்து தொடங்குகின்றது. இங்குள்ள ஏலாசீனி என்னும் ஆற்றில் நீராடி வந்து போகும் தெய்வக் கன்னியர்களைக் கண்டு வித்யாதரமுனி என்பவர் மோகம் கொள்கிறார்.

சிவபெருமானின் துணையோடு இவர் குளிர் காற்றையும், மழையையும் ஏவி, இருள் சூழச் செய்கிறார். நீராடும் தெய்வக் கன்னியர் எழுவரையும் செல்லும் திசை தெரியாமல் மயங்க வைத்து, அவர்களோடு உடலுறவு கொள்கிறார். இந்த ஏழு கன்னியர்களுக்கும் பிறந்த ஏழு மைந்தர்களும் வலங்கையர்கள் என்று அழைக்கப்பட்டனர். பெற்ற குழந்தைகளை இப்பெண்கள் வித்தியாதர முனியிடம் ஒப்படைத்து விட்டுத் தேவலோகம் சென்று விடுகின்றனர். அக்குழந்தைகளை வளர்க்கும் பொறுப்பினைக் காளிதேவி ஏற்றுக் கொள்கிறாள்.

## கடவுளின் வளர்ப்புக் குழந்தைகளாகக் காட்டப்படுதல்:

வெங்கலராஜன் கதை, வெங்கலராஜனின் முன்னோர்களைத் தெய்வக் கன்னியர் ஏழு பேரின் ஏழு மைந்தர்களாகச் சித்திரித்து நிற்கிறது. அவர்கள் வலங்கையர்கள் என்று அழைக்கப்பட்டனர்.

ஏழு தெய்வக் கன்னியர்களும் ஏழு மைந்தர்களையும் பெற்று, அவர்களை வித்தியாதர முனிவரிடம் ஒப்படைத்து விட்டுத் தேவலோகம் சென்ற பின், அருள்மிகு அன்னை காளி தேவி, அவர்களை வளர்த்து வாலிபம் ஆக்குகிறாள்.

நாடார்கள் பிறப்பால் உயர்ந்தவர்கள் என்பதை எடுத்துரைப்பதற்காகவும், வலியுறுத்துவதற்காகவும் அவர்கள் தெய்வக் கன்னியர்கள் பெற்று எடுத்த புதல்வர்களாகவும் காளி தேவியின் அரவணைப்பில் வளர்ந்த குழந்தைகளாகவும் காட்டப்பட்டு இருக்க வேண்டும்.

## அந்தணருடன் இணைத்துப் பேசுதல்:

வெங்கலராஜனின் முன்னோர்கள் வித்தியாதர முனிவருக்கும் தெய்வக் கன்னியருக்கும் பிறந்தவர்கள் என்று கூறுவதன் நோக்கம் தாழ்ந்த பிரிவான சூத்திரர் என்னும் பிரிவிலிருந்து தங்களை வேறுபடுத்திக் காட்டுவது ஆகும்.

இந்தியச் சமுதாயத்தில் சாதிகளின் தர வரிசை, அந்தணர், அரசர், வாணிகர், சூத்திரர் என வரிசைப் படுத்தப்பட்டிருந்தது. நாடார்களின் முன்னோர்களை அந்தணரின் குழந்தைகளாகக் காட்டுவதற்குப் பிற சாதியினரைக் காட்டிலும் தாங்கள் பிறப்பால் உயர்ந்தவர்கள் என நிறுவுவது நோக்கம் ஆகலாம்.

நாடார்களின் குல முன்னோர்கள் வித்தியாதர முனிவருக்கும் ஏழு தெய்வக் கன்னியருக்கும் பிறந்தவர்கள் எனக் கூறுவதற்கு, நாடார்களின் பிறப்புக்குத் தெய்விக நிலை அந்தஸ்து வழங்க முயன்றமை காரணம் ஆகலாம்.

வெங்கலராஜன் கதையில், வித்தியாதர முனிவரை அந்தணர், எனக் குறிப்பிடும் வரிகள் இல்லை. மறைமுகமாக அவர் அந்தணர் என நிறுவும் சான்றுகளும் போதுமான அளவிற்கு இல்லை. எனினும், வித்தியாதர முனிவர் முப்புரி நூலுடன் காணப்பட்ட காட்சியை வெங்கலராஜன் கதை எடுத்துரைக்கிறது.

தமிழகச் சமுதாயத்தில் அந்தணர்கள் மட்டும் இன்றி, வேறு சில சாதியினருக்கும் முப்புரி நூல் அணியும் வழக்கம் உள்ளது. இன்றும் சிவகாசி நாடார்களிடையே பூணூல் அணியும் வழக்காறு காணப்படுகிறது. அவர்கள் "பூணூல் நாடார்" என்றே இன்றும் அழைக்கப்படுகின்றனர். அந்தணர்களைப் போன்றே பிற சாதியினரும் பூணூல் அணிவதற்குத் தாங்கள் தாழ்ந்த சாதியினர் இல்லை என்பதை நிறுவும் மேல்நிலை ஆக்கத்தின் விளைவு காரணம் ஆகலாம்.

### அந்தணர்களுக்குச் சமமான தகுதியைப் பெறுதல்:

அந்தணர்களுக்கு இணையாக அரசர்களுக்கு அறிவுரை கூறும் திறனை வலங்கையர் ஆகிய நாடார் இனத்தவர் பெற்றிருந்தனர். சோழ நாடு மழை வளம் இழந்து தவித்தது. அப்போது கற்புடைய பெண் ஒருத்தியை அழைத்து மழை பொழியுமாறு வேண்டுக என வலங்கையர்கள் சோழ மன்னனுக்கு அறிவுரை கூறினர். சோழ மன்னன் கற்புடைய பெண் ஒருத்தியை அழைத்து அதற்கு ஏற்பாடு செய்தான்.

வலங்கையர் தெரிவித்த அறிவுரையின்படி, கற்புடைய பெண் ஒருத்தியின் கற்பின் ஆற்றலால் மழை பொழிந்தது; அம்மழை சோழ நாட்டைச் செழிப்புக்கு உள்ளாக்கியது. மனம் மகிழ்ந்த சோழ மன்னன் வலங்கையர்க்குச் "சான்றோர்" என்னும் பட்டத்தினை அளித்தான். சான்றோர் என்னும் பெயர் திரிந்து 'சாணார்' என வழங்கியது என்று இச்சாதியைச் சேர்ந்த பல அறிஞர்கள் ஆய்வு முடிவு கூறியது இங்கு நினைவு கூரத்தக்கது.

"மாரி பொழியாமல் தேசமதில் விளைவுகுன்றி
அனைபேரும் அலங்கிடவே அரசமன்னன் விசாரமதாய்"

(என வெங்கலராஜன் கதை எடுத்துரைப்பதைக் காண்க.)

"கரிகாலச் சோழமன்னா
அற்பமென்று எண்ணாதே அரிவைகற்பை நானறிந்தேன்
செப்பக்கேள் மன்னவனே சிவனார் திருவாணை"

(வெங்கலராஜன் கதை, வரிகள் - 608-610)

மழை பொழிவதற்கு ஆணையிட எந்தக் கற்புடைய பெண்ணைத் தேர்ந்தெடுக்க வேண்டும் என வலங்கையர்கள் (நாடார்கள்) கரிகால் மன்னனுக்கு அறிவுரை கூறுகின்றனர்.

திருக்கடவூரில் வாழும் தச்சனின் மனைவி அத்தகைய கற்புடையவள் என்பதைச் சான்றுடன் வலங்கையர்கள் கரிகால் சோழனுக்கு எடுத்துக் கூறுகின்றனர்.

அக்கற்புக்கரசி, கிணற்றில் துலா மூலம் தண்ணீர் இறைத்துக் கொண்டிருந்தாள். அவளது கணவன் தனக்குத் தண்ணீர் தருமாறு அவளிடம் கேட்டான். அக் கற்புக்கரசி, துலாவைப் பாதியில் நிறுத்தி விட்டுக் கணவனுக்குத் தண்ணீர் கொடுக்கச் சென்றாள். அவள் திரும்பி வரும் அளவும், பாதியில் விட்ட துலா அப்படியே நின்றது. அவளை அழைத்து மழை பெய்யச் செய்யுமாறு வலங்கையர்கள் மன்னனுக்கு அறிவுரை கூறினர். அக்கற்புக்கரசி,

"வருணனையும் நினைந்திடவே மாரிபெய்ய வையகத்தில்
அரிவை நல்லாள் கற்புநிலை அறிந்திருந்து சோழமன்னன்
காரிகையாள் கற்பதினால் கனமாரி பொழிந்திடுமாம்".

(வெங்கலராஜன் கதை, வரிகள் - 636-638)

கற்புடைய பெண்ணை அடையாளம் காட்டிய வலங்கைபருக்கு கரிகாலச் சோழன் 'சான்றோன்' என்ற பட்டம் அளித்தான். பல்லக்கு வகைகளை வாரி வழங்கினான். வீடு வைத்துக் கொள்ள பணம் இனாமாக அளித்தான். கைவளைகள் பரிசாகத் தந்தான்.

"கற்புரைத்த சான்றவர்க்குக் கைவளையுந் தான்கொடுத்து
இப்புவியில் தண்டிகையும் இற்கூலி யுங்கொடுத்துச்
சான்றோரெனப் பேர்கொடுத்துத் தரணிதனில் வாழுமென்றார்"

(வெங்கலராஜன் கதை, வரிகள் - 639-641)

காளியின் சினத்தால் அந்தண குலத்தைச் சார்ந்த முனிவர் ஒருவரும், அவரது மனைவியும் பனைகளாக மாற்றப்பட்டனர். அப்பனையில் இருந்து கிடைத்த அமுதத்தை - பதநீரை - இறக்குவதையும், பருகுவதையும், விற்பனை செய்வதையும் வலங்கையர்கள் தங்கள் வாழ்வியல் தொழிலாகக் கொண்டனர். வலங்கையர்களின் குலத்தொழிலை அந்தணர்களோடு இணைத்துக் கூறும் முயற்சி இங்குக் காணப்படுகிறது.

## நாடார்கள் அரச குலத்தினராகக் காட்டப்படுதல்:

வித்தியாதர முனிவருக்கும் தெய்வ கன்னியருக்கும் பிறந்த ஏழு பேரும் ஏழு நாட்டு அரசர்களாகக் காட்டப்படுகின்றனர். வலங்கையர்களைச் சத்திரிய குலத்துடன் தொடர்பு படுத்திப் பேசும் நிகழ்ச்சிகள் வெங்கலராஜன் கதைப் பாடலில் உள்ளன. 'வெங்கலராஜன்' என்ற பெயரில் ராஜன் என்ற அரச குலத்தின் பெயர் இணைக்கப்பட்டுள்ளமை காண்கிறோம். வெங்கலராஜன் அரண்மனை போன்ற கோட்டை கட்டி வாழ்ந்ததற்கு இக்கதைப் பாடல் சான்றுகள் தருகின்றது.

## அரச வம்சத்தினராகக் காட்டப்படுதல்:

குறும்பூர் மன்னனின் அமைச்சர்கள் வெங்கலராஜனைப் பற்றி கூறும் போது,

"இட்டமுடன் நம்முடைய ராகஷியத்து எல்லைக்குள்ளே
இப்போ ஒரு மன்னவன்தான் வந்து
வந்தவரும் காடுவெட்டி வாய்த்த நல்ல கோட்டையிட்டு
வாழ்ந்திருந்தார் என்ற செய்தி கேட்டோம்"

(வெங்கலராஜன் கதை, வரிகள் - 1888-1891)

வலங்கையர்கள் ஒருமுறை தாழ்ந்த இனத்தவரைப் போல மண் சுமந்து அணையை அடைக்குமாறு ஏவப்பட்டனர்.

"மறுத்துமொழி பேசாமல் மண்சுமவும் வலங்கையரே"

என அரசனால் கட்டளை இடப்பட்டனர். அதற்கு வலங்கையர்கள்,

"மண்சுமவும் என்றுமன்னா மரியாதி கொடுத்திரே
மன்றுதனில் குட்டைதொட்டு மண்சுமப்ப தில்லையென்றார்"

அதற்கு அரசன், "கூறும் மொழி கேளாட்டால் மோசம்வரும்" என்று அச்சுறுத்தினார். அதற்கு வலங்கையர்கள்,

"குட்டைதொட வேணுமென்ற கொற்றவனே கேளும்
குலத்துக்கிழுக் கானவேலை கூறாதே மன்னா
அன்று புரம் எரித்தசிவன் ஆணையிட்டீர் மன்னா
ஆனாலும் குட்டைதொட்டு மண்சுமப்ப தில்லை"

(வெங்கலராஜன் கதை, வரிகள் - 711, 712, 732, 733)

மன்னனின் அமைச்சரும் வலங்கையரை மண் சுமக்குமாறு கூற வேண்டாம் என மன்னனுக்கு அறிவுரை கூறினர். வலங்கையரின் புகழையும் எடுத்துரைத்தனர்.

"வணங்கிநின்று மந்திரிமார் சோழமன்னா உந்தன்
மனுநீதி தான்ஒழியும் வலங்கைமன்ன ரால்தான்;
குணங்கள் தமை அறிந்திலையோ, தாருதனைக் கொன்று
கூளிகணம் ஆனதுக்கு உதிரம் உண்ணக் கொடுத்தோர்"

(வெங்கலராஜன் கதை, வரிகள் - 738-741)

அரசனின் ஆணையை ஏற்க மறுத்த வலங்கையர்களின் தலைகளை யானையின் காலால் இடறுமாறு மன்னன் ஆணையிட்டான்.

யானைக் காலில் இட்டு இடறிய போதிலும்,

"தந்திதன்னை ஏவிஎங்கள் தலையெல்லாம் இடறிடினும்
உந்தன்திரு வாணைமன்னா ஒருநாளுங் குட்டைதொடோம்"

(வெங்கலராஜன் கதை, வரிகள் - 777-778)

என்று அவர்கள் மன்னனிடம் வாதிடுவது குறிப்பிடத்தக்கது. இடறப்பட்ட தலைகள் உருண்டோடும் போது 'கூடை தொடோம்' என்று கூறிக்கொண்டே உருண்டு ஓடியதாகக் கதைப் பாடலின் நிகழ்ச்சி அமைக்கப்பட்டுள்ளது. உயிருக்கு அஞ்சி வலங்கையர்கள் குலத்தொழிலுக்கு இழிவு தரும் தொழில் செய்ய மாட்டார்கள் என்பதையும், கொண்ட கொள்கையிலிருந்து நழுவமாட்டார்கள் என்பதையும் இந்நிகழ்ச்சி தெளிவுபடுத்துகின்றது. அடிமைத் தொழில் செய்து அல்லல் உற்ற இக்குல மக்களின் ஆதிக்க ரீதியான எதிர்ப்புணர்வே இந்நிகழ்ச்சி எனத் துணியலாம்.

## கவிக்கூற்றில் அரச வம்சத்தினராகக் காட்டப்படுதல்:

வெங்கலராஜன் கதையில் நூலாசிரியர் வெங்கலராஜனை அரசன் எனக் கவிக் கூற்றாகச் சுட்டி நிற்றலைக் காணமுடிகிறது.

"உத்தமமன்னன் தளைத்தொழுது" - வரி 1954

"பழுதுபடா மன்னவனும் பாவிளையால் மனமகிழ்ந்து" வரி - 1956

"வரக்கண்டான் வலங்கை மன்னன்" வரி - 1134

## ஆய்வுகளில் அரசவம்சத்தினராகக் காட்டப்படுதல்:

இக்கதைப் பாடல் எழுந்த காலகட்டங்களில் நாட்டை ஆண்டவர்கள் நாடார்கள் என்றும் சத்திரியர் என்ற வட சொல்லிற்கு இணையான தமிழ்ச் சொல்லே நாடார்கள் என்றும் இக்குலத்தைச் சார்ந்த பல அறிஞர்கள் ஆய்வின் மூலம் நிறுவ முயன்றுள்ளனர் என்பது இங்குக் குறிப்பிடத்தக்கது.

சத்தியர் என்ற சொல்லின் அடியாக உள்ள ஷேத்திர என்பது நாடு என்பதைக் குறிப்பதால் சத்திரியர் என்ற சொல்லின் தமிழ் வடிவமே நாடார் என்று இக்குலத்தைச் சார்ந்த பல அறிஞர்கள் வாதிட்டனர்.

## கொடிச் சின்னம் மூலம் அரச வம்சத்தினராகக் காட்டப்படுதல்:

அமைச்சர்கள் சூழ வெங்கலராஜன் அரசனாக வீற்றிருந்த காட்சி இக்கதைப் பாடலில் இடம் பெறுகிறது. மன்னர்களுடைய சின்னங்களுள் கொடி முக்கியமானது. வெங்கலராஜன் ஏனைய மன்னர்களைப் போன்று சிங்கச் சின்னம் பொறித்த கொடியினைக் கொண்டவன் என இக்கதைப் பாடல் கூறுகின்றது. வலங்கையின் குலம் இக்கதைப் பாடலில் "நாடாள்வார் குலம்" என்றும் சுட்டப் பெற்றுள்ளது. வலங்கையர் தம்மைச் சத்திரிய வம்சத்தினராகக் காட்ட எடுத்துக்கொண்ட முயற்சி இது எனலாம்.

## போர்த் தொழில் புரிவதில் அரச வம்சத்தினராகக் காட்டப்படுதல்:

சோழ மன்னர்களின் பகைவர்களை வலங்கையர்கள் போர் முனையில் வென்று மீள்கின்றனர். இக்கதைப் பாடலில் கணக்கிறந்த போர்களில் வலங்கையர்கள் வெற்றி பெற்ற நிகழ்ச்சி சோழ மன்னரிடம் அவரது அமைச்சர்கள் கூறும் காட்சியில் இடம் பெற்றுள்ளன.

1. தாருதன் என்னும் அரக்கனைக் கொன்று கூளிகணம் என்னும் பேய்களுக்கு உதிரம் உண்ணக் கொடுத்தமை.
2. சாமிக்கரன் விகடனையும், அவனது படைகளையும் கொன்று, அரசு அடையாளச் சின்னமான கொடி விருது பெற்றமை.
3. சம்பரனுடன் போரிட்டு அவனை வெட்டிக் கொன்று இரட்டைச் சங்கைப் பறித்தமை.
4. கலியாணன் என்பவனை வென்று அவர்களைச் சிறைபடுத்தி, அவர்களுடைய ஆறுமணிக் கேடயத்தைப் பறித்தமை.
5. எந்த மன்னராலும் வெல்ல முடியாத அமந்திகர் கூட்டத்தை வென்று "அமந்திக ராஜன்" என்னும் பட்டத்தினைக் கரிகாலச் சோழனிடம் பெற்றமை.

"ஆரும் வெல்லக் கூடாத அமந்திகளைச் சான்றோர்
அவதான மாக ஒரு நொடிதனிலே கொன்றார்
அமந்திகளை வெட்டி வென்று வலங்கை எழு நூற்றார்
அவனிடத்தில் ஆறுமணிக் கேடயமும் பறித்தார்
அமந்திகராஜன் எனவே சோழனும்பேர் கொடுத்தான்"

(வெங்கலராஜன் கதை, வரிகள் - 576-581)

படைத்தொழிலைத் தவிர தாங்கள் பிற தொழில் செய்யப் பிறந்தவர்கள் அல்லர் என்று வலங்கையர்கள் குறிப்பிடுவது அவர்களின் சத்திரிய மனப்பான்மையைத் தெளிவுப்படுத்துகிறது. போர்த் தொழிலுக்கே உரியவர்கள் என்பதை அறிவிக்கும் முகமாக வலங்கையர்களுக்கு 'வீரமார்த் தாண்டன்' என்னும் பட்டம் அளிக்கப்பட்டதாக இக்கதைப் பாடல் கூறுகின்றது.

பல இடங்களிலும் இவர்கள் வீரச் சான்றோர்கள் என்றும் பொருள்பட 'வண்டச் சான்றோர்' (1096) என்று குறிப்பிடப்பட்டுள்ளனர். புகழ் எனின் உயிரையும் கொடுக்கும் வீரயுகப் பண்பு வலங்கையர்களிடம் இயற்கையாகவே அமைந்துள்ளமையை இக்கதைப் பாடல் நிலைநாட்டுகின்றது.

## பெண் தர மறுத்து அரசனை விட உயர்வாகக் காட்டுதல்:

வெங்கலராஜனுக்கு திரைமுகத்தழகி, சங்குமுகத்தழகி, ஆகிய இரு பெண்கள் திருமண வயதில் அழகும், இளமையும் கொண்டு இருந்தனர்.

திரைமுகத்தழகியை வஞ்சி மன்னன் பெண் கேட்டுத் தூது அனுப்பினான். வெங்கலராஜன் பெண் தர மறுத்து தூதனைத் துரத்தி விட்டான்.

"நாடாளும் ராஜாவும் நன்மகளே உன்னைக்கண்டு
மாலையிடத் தூதுவிட்டான் வம்புசொல்லித் துரத்திவிட்டேன்
மாலையிட்டுக் கொடுத்தாலும் வசையல்லவோ என்மகளே
இல்லையென்று சொன்னாலும் இடம்விட்டுப் போகானே"

(வெங்கலராஜன் கதை, வரிகள் - 1618-1621)

என வெங்கலராஜன் தன் மகள் திரைமுகத்தழகியிடம் கூறிய கூற்று, அவனது செம்மாந்த மனநிலையை விளக்கி நிற்கும்.

"ஆசைகொண்டு வந்தமன்னன் அநியாயஞ் செய்வானே
வந்தமன்னனுடன் போர்பொரவும் வாய்த்த படையில்லை"

வஞ்சி மன்னன் தன் ஆசை நிறைவேறாத காரணத்தால் அநியாயம் செய்வான்; தன் மீது போர் தொடுக்கவும் செய்வான் என வெங்கலராஜன் உணர்ந்தே இருந்தான்.

வஞ்சி மன்னனை எதிர்க்கும் அளவிற்குத் தன்னிடம் போதுமான படைபலம் இல்லை என்பதையும், போர் நிகழ்ந்தால், தான் தோற்பது உறுதி என்பதையும் வெங்கலராஜன் உணர்ந்திருந்தான்.

'பெண்ணிருக்கும் இடமதிலே பிழைகேடு வரும்'

என்பது உலகில் நிலவும் பழமொழி என்பதை வெங்கலராஜனும், அவனது மகள் திரைமுகத்தழகியும் எண்ணிப் பார்த்தனர். தன்மானம் கருதியும் வஞ்சி மன்னனைவிட உயர்ந்த நிலையில் உள்ள தங்களின் தகுதி கருதியும் திரைமுகத்தழகியின் தலையை அறுத்து எறிய முடிவு செய்தான்.

வஞ்சி மன்னனுக்குப் பெண் கொடுப்பதைக் காட்டிலும் தன் மகள் இறந்து போகட்டும் என முடிவு செய்து, அதைச் செயல்படுத்தியமைக்கு வெங்கலராஜன் அரசனைக் காட்டிலும்

தான் உயர்ந்தவன் என்ற சமுதாய நிலைப்பாட்டை எண்ணிச் செயல்பட்டது காரணம் ஆகலாம்.

இதைப் போன்றே வெங்கலராஜனின் பிறிதொரு மகள் சங்குமுகத்தழகியை நளராஜன் என்னும் மன்னன் பெண் கேட்டு வந்தான். அவனுக்கும் வெங்கலராஜன் பெண் கொடுக்க மறுத்தான்.

மண ஓலை அனுப்பிய நளராஜனிடம், வெங்கலராஜன் பெண் கொடுக்க மறுத்ததைக் கூற வந்த தூதர்கள் வெங்கலராஜனைப் பற்றிக் கூறும் போது,

"சான்றோர்கள் குலத்துதித்த சாதிவலங்கைத் தலைவர்"

(வெங்கலராஜன் கதை, வரி - 1939)

என மிக உயர்வாக எடுத்துரைத்தல் காண்கிறோம்.

நளராஜனை நோக்கிச் சங்குமுகத்தழகி வசை பாடும் போது,

"தேசமதில் உனைப்போலே சிரத்தைகெட்ட பேர்களில்லை
நாசம்வருங் காலமதில் நல்லறிவு உனக்கில்லையே
மோசம்வரும் வேளையிலே முட்டிக்குனிந் தாயில்லையே
பெண்டுகளுக் கேறாத புத்தியோ முழுமுகடா
வண்டுமது உண்ணுவது மண்டூகம் பொசித்திடுமோ"

(வெங்கலராஜன் கதை, வரிகள் - 2316-2320)

சங்குமுகத்தழகி நளராஜனை நோக்கி, "குறுக்கு வழியில் என்மீது குற்றம் சாட்டி உன்னுடைய பெண் புத்தியைக் காட்டி விட்டாய். இது உனக்கு நாசம் வரும் காலம். ஆதலின் உனக்கு நல்லறிவு அழிந்து போயிற்று. இது உனக்கு மோசம் வரும் வேளை. ஆதலின் உன்னை விட உயர்ந்த நிலையில் உள்ளவர்களிடம் பெண் கேட்டு முட்டித் தலை குனிந்தாய். நீ ஒரு முழு மூடன். நான் உயர்ந்த ஜாதி வண்டுகள் உண்ணும் தேன். நீ ஒரு மண்டூகம் (தவளை). மண்டூகம் உயர்ந்த தேனை உண்ண நினைப்பது முறையோ. நீ துன்பப்படுவாய். நிலை கெட்டு வீழ்ச்சி அடைவாய் எனக் கூறினாள்.

மேலும், என்னால் உன் நாடே அழியும்; உன் பெயர் பாழாகும், எனச் சாபம் இட்டாள்.

"என்னாலே உன்னுடைய ராகூரியமெல் லாம்முடியும்
உன்னோடு உன்னாமம் ஒக்கவே பாழாகும்"

(வெங்கலராஜன் கதை, வரிகள் - 2326, 2327)

எனக் கடும் சாபம் இடுகிறாள். நளராஜனிடம் சங்குமுகத்தழகி தன் குலப் பெருமையைக் கூறுகிறாள்.

"சளப்படுவாய் நீமுடிவாய் சரியென்றுபெண் கேட்டாயே
குலச்சான்றோர் பெண்ணுனக்குக் கொடுப்பாரோ வாங்குவாயோ
இயல்வாக இருந்தாலும் நீ இழிகுலமல் லோயெனக்கு
கற்பைக் குலைக்கவென்று கனமாய்கை செய்தாயோ"

(வெங்கலராஜன் கதை, வரிகள் - 2333-2336)

நளராஜனை விடத் தங்கள் குலம் உயர்ந்தது என்ற காரணத்தினால், தான் பெண் தர மறுத்ததாக வெங்கலராஜன் மகள் சங்கு முகத்தழகி கூறும் கூற்றால் அறிய முடிகிறது.

## வாணிகர்களை விட உயர்வாகக் காட்டி நிற்றல்:

வலங்கையர்களைச் சத்திரிய குலத்தோடு தொடர்புபடுத்தி நிற்கிறது இக்கதைப் பாடல். வலங்கையர்கள் வைசியர் என்று அழைக்கப்படும் வணிகக் குலத்தினைவிட உயர்ந்தவர்கள் என்பதைப் பல இடங்களில் இந்நூல் சுட்டி நிற்கிறது. வணிகர்கள் தமக்கு இன்னல் ஏற்பட்ட போது வலங்கையர்களின் உதவியை நாடுவதாக இக்கதைப் பாடல் ஒரு நிகழ்ச்சியினை அமைக்கின்றது. தங்கள் இன்னலைத் தீர்த்த வலங்கையர்களை வணிகரெல்லாம் வணங்கிப் போற்றியதாக அது மேலும் சுட்டுகின்றது. துயர் துடைத்த வலங்கையர்களைத் தம் தோள்மேல் ஏற்றி வணிகர்கள் சோழ மன்னனிடம் கொண்டு சென்று தங்கள் மகிழ்ச்சியைத் தெரிவித்தனர். அரசனும் மகிழ்ந்து 'தோளேறும் பெருமாள்' என்ற பட்டம் சூட்டி மகிழ்ந்தான். இப்பகுதிகள் அனைத்தும் வைசியர்களை விடவும் வலங்கையர்கள் உயர்ந்தவர்கள் என்பதை நிறுவ எடுக்கப்பட்ட முயற்சிகள் ஆகும்.

## ஏவல் தொழில் செய்ய மறுத்தல்:

வலங்கையர்கள் போர்த் தொழில் செய்யும் இனத்தவர்கள். நாட்டை ஆண்ட மன்னன் கூடையில் மண் சுமக்கும் தொழிலைச் செய்யுமாறு அவர்களை ஏவிய போது அதைச் செய்ய மன உறுதியுடன் அவர்கள் மறுத்து விட்டனர். சினம் கொண்ட அரசன் யானையின் காலில் இட்டு அவர்களுள் இருவரின் தலைகளை இடறுமாறு ஆணையிட்டான். நடப்புச் சமுதாயத்தில் அடிமைத் தொழில் செய்யுமாறு வற்புறுத்தப்பட்ட நாடார் இனத்தவர்கள் இக்கதைப் பாடலில் இழி தொழில் செய்வதைக் காட்டிலும் இறப்பதே மேல் என்ற முடிவுக்கு வருகின்றனர். ஆதிக்க உணர்வை வெளிப்படையாக எதிர்க்கும் அவர்களின் முயற்சி இது எனலாம்.

வலங்கையர்கள் கடும் கொள்கைப் பிடிப்பு உடையவர்கள் என்பதை நிறுவும் சான்று மட்டும் அன்று இது. மாறாக, தங்கள் குல உயர்வைப் பறைசாற்றி நிற்கும் வைராக்கிய உணர்வும் ஆகும்.

## தொழில் ரீதியாக உயர்ந்தவர்களாகக் காட்டுதல்:

இக்கதைப் பாடல் வலங்கையருக்கு உரிய தொழில்களாக மூன்றைச் சுட்டுகிறது.

1. போர்த் தொழில்
2. வாணிகத் தொழில்
3. பனைத் தொழில்

வலங்கையர்கள் காளியிடம் போர்ப் பயிற்சி பெற்றவர்களாகக் காட்டப்படுகின்றனர். காளியுடன் இணைந்து அசுரர்களை வென்றதாகச் சுட்டப்படுகின்றனர். கரிகால் சோழனின் படையில் சேர்ந்து வலங்கையர்கள் பகைவர் பலரை வெற்றி கொள்கின்றனர்.

அதாவது, அவர்கள் செய்யும் போர்த்தொழில் தெய்வத்திடம் பயிற்சி பெற்றதாகவும், தெய்வத்திற்குத் துணையாகப் போர் செய்ததாகவும், அரசனுடன் சேர்ந்து படைத்தொழில் புரிந்ததாகவும் மிக உயர்வாகக் காட்டப்படுகிறது.

நாடார் குலத்தவரில், பொருளாதார நிலையில் பின்தங்கியவர்கள் பனையேறும் தொழிலைத் தம் குலத் தொழிலாகக் கொண்டு வாழ்ந்தனர். விண்ணுலகத்து முனிவனும் அவன் மனைவியும் பனைமரமாக மாறிய நிகழ்ச்சியும், விண்ணுலகத்திலிருந்து கொண்டு வந்த அமுதமே பதனீர் எனக் கூறும் கூற்றும் வெங்கலராஜன் கதைப் பாடலில் இடம் பெற்றுள்ளது.

அதாவது, பொருளாதார நிலையில் பின் தங்கியவர் செய்யும் தொழிலையும் கூடத் தெய்வத்தோடும், விண்ணுலகத்தோடும் இணைத்துப் பேசும் முயற்சி இங்குக் காணப்படுகிறது. தாங்கள் செய்த எல்லாத் தொழிலையும் உயர்வாகவும், தெய்வீகத் தன்மை கொண்டதாகவும் காட்டும் முயற்சி இது எனலாம்.

தங்கள் இனத்தவரில் பொருளாதார நிலையில் பின் தங்கியவர்கள் செய்த பனைத் தொழிலைக் கூடப் புராணப் பின்னணியோடு உயர்வாகக் கூற முயல்வதை நம்மால் உணர முடிகிறது.

பாற்கடலைக் கடைந்த போது கிடைத்த தேவாமிர்தத்தோடு பனங்கொட்டையும் பிறந்ததாக இக்கதைப்பாடல் இரண்டையும் ஒப்பிட்டுப் பேசுகிறது.

"சிவலோகத் தெய்வாரெலாம் சிறந்தஅமிர்தம் கடையவிலே
பதினாறு லோகமெய்க்கப் பனங்கொட்டை தான் தோன்றியதே"

(வெங்கலராஜன் கதை, வரிகள் - 524, 525)

தேவர்களும் அசுரர்களும் பாற்கடலைக் கடைந்தபோது அதிலிருந்து தோன்றிய அமுதம், கற்பகத் தரு, ஐராவதம், இலக்குமி போன்ற உயர்ந்த பொருட்களுக்கு ஈடாக அப் பாற்கடலிலிருந்து பனங்கொட்டையும் தோன்றியது எனக் கதைப்பாடல் கூறுவது இங்குக் குறிப்பிடத்தக்கது.

பனை ஏறும் தொழிலை வலங்கையர்களுக்குக் காளி அமைத்துக் கொடுத்தாள் எனக் கூறுவதன் மூலம் இத்தொழிலுக்கு ஒருவிதத் தெய்வீக உயர்வை இக்கதைப் பாடல் தர முயன்றுள்ளது.

காளி கைக்கெண்டிருந்த கருவிகளும், அணிகலன்களும், பனையேறும் தொழிலுக்குரிய கருவிகளாகப் பரிணமித்தன. இத்தொலுக்குரிய சாதாரணக் கருவிகளுக்கும் தெய்வீகத் தன்மை தரப்படுவதைக் காண்கிறோம்.

## பெண் உரிமையும் பெண்ணின் பெருமையும்:

19-ஆம் நூற்றாண்டில் நாடார் குலப் பெண்கள் உடம்பின் மேல் பாகங்களை மூடி மறைக்கும் தோள் சீலையினை அணியக்கூடாது. முட்டுக்குக்கீழ் ஆடை அணியக் கூடாது என்ற கட்டுப்பாடுகள் இருந்தன. இவற்றை எதிர்க்கும் முகமாக வெங்கலராஜனின் பெண் மக்கள், கொண்டை கட்டிப் பூச்சூடினர்; கொல்லத்துப் பட்டு உடுத்தினர்; கொலுசு, தண்டை, சிலம்பு, பாடகம் ஆகியன காலில் அணிந்தனர். இக்குலப் பெண்கள் முகத்தைக்கூடப் பிறர் காணாதவாறு மறைக்கத் தலை மறைவுச் சீலை அணிந்து மறைத்துச் சென்றதாக இக்கதைப்பாடல் பெருமையாகப் பேசுகின்றது.

## முடிவுரை:

வெங்கலராஜன் கதைப் பாடல் வலங்கையர்கள் எனப்படும் நாடார்குல இனத்தவரைப் பிறப்பால், வளர்ப்பால், குலத்தொழிலால், கொள்கைப் பிடிப்பால், சிறப்புப் பட்டங்களால், பெருமை பேசிப் பிற இனத்தவரை விட உயர்ந்தவர்கள் என்பதை நிறுவப் பெரு முயற்சி மேற்கொள்வதை இங்கு நம்மால் உணர முடிகிறது. இக்கதைப் பாடல் எடுத்துக் கொண்ட பெரும் முயற்சியில் எந்தளவிற்கு உண்மை பொதிந்துள்ளது என்பது கேள்விக் குறியே!

# வெங்கலராஜன் கதை

## வினா வங்கி

1. வலங்கையர் எனப்படும் நாடார் குல உயர்வை நிறுவ வெங்கலராஜன் கதையாசிரியர் எடுத்துக் கொண்ட முயற்சிகளும் நாடார் குல உயர்வைக் காட்ட அமைக்கப்பட்ட பின்புலங்களும்.

2. வெங்கலராஜன் கதையில் நாட்டுப்புறக் கதைப்பாடல் தொடர்பான மரபுகள்.

3. வெங்கலராஜன் கதையில் பாத்திரப் படைப்புகள்.

4. "துன்பியல் முடிவை நோக்கி நகரும் இறப்பு வகைக் கதை வெங்கலராஜன் கதை" - ஓர் உளவியல் பார்வை.

5. வெங்கலராஜன் கதை என்னும் இந்நூல் தோன்றியதற்கான காரணங்களும் நூலின் அமைப்பும்.